பக்கங்கள் 20

20/=

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

*Ethiroli*

14-20 நவம்பர் 2018

வாரஇதழ்

Raja Bojun

Sri Lankan Buffet

Liberty Arcade,

No 282, R.A.De Mel Mawatha Colombo 03.

Tel. 4 71 61 71 / 2577097-8 web : rajabojun.lk



# நடுத்தெருவில் மைத்திரி

## பேரத்துக்கு பொருளே இல்லையா கூட்டமைப்புக்கு?

## கைதட்டுங்கள் சிரிசேனவுக்கு

சிறந்த பாஸ் இற்கு சிறந்த பிரஷ் ஒன்று

இலங்கையில் முதன் முறையாக



இத்தாலி தொழில்நுட்பத்தில் இயந்திரங்களால் தயாரிக்கப்பட்டு மிருக உரோமங்கள் இல்லாமல் எங்கள் நாட்டிற்கு ஏற்ற விதத்தில் தயாரிக்கப்படும் சிறந்த பிரஷ் ஒன்றை மல்டிலெக் உங்களுக்கு அறிமுகப்படுத்துவது உங்களை வணிகத்தில் நிபுணராக்கும் நோக்குடன்.

சுவரிற்கு பலகைகளுக்கு இரும்பிற்கு மற்றும் எந்தவொரு மேற்பரப்பிற்கும் இலகுவாக பெயின்டினை பூசுவதற்கு தங்க நிற மற்றும் கறுப்பு நிறத்திலான இரண்டு பிரஷ்கள் இப்போது உங்களுக்கு.

1/2 தொடக்கம் 6 அங்குலம் வரை எந்தவொரு அளவிலும் கொள்வனவு செய்யலாம்.

இலங்கையின் தயாரிப்பு

விலை . ரூ.150 தொடக்கம்

HOTLINE 077 2222 555



Multilac®

www.multilac.com

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

# கூட்டமைப்புக்கு சவால்!

■ ப.தெய்வீகன்

தனக்கு வேண்டப்படாதவர்கள் அனைவரும் கூடிக்கூத்தடிக்கும் கூடாரமாக சிறிலங்காவின் நாடாளுமன்றம் 'கர்ப்பமாகிவிடப்போகிறது' என்ற அச்சத்தினால் -

அண்மையில் 'திருட்டு திருமணம்' செய்துகொண்ட மைத்திரிபால சிறிசேன, நவம்பர் 9 இல் அதனை கலைத்திருக்கிறார். இனியும் இந்த நாட்டில் ஜனநாயகம் என்ற சொல்லுக்கு மில்லிகிராமளவுக்குக்கூட மதிப்பில்லை என்ற தனது 'உயர்ந்த தத்துவத்தையும்' -

தன்னைப்போல ஒரு கேவலமான அரசியல்வாதி இந்த நாட்டில் இனி தவறுதலாகக்கூட பிறக்கமாட்டான் என்று உண்மையை இடித்துக் கூறும் வகையிலும் அவரது சாமக்கூத்து அரங்கேறி முடிந்திருக்கிறது.


மைத்திரி செய்துமுடித்திருக்கும் இந்தக் காரியத்திலிருந்து நாட்டு மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் சொல்லியிருக்கும் உண்மை ஒன்றுதான். அதாவது, நீதி - நியாயம் - ஜனநாயகம் என்ற புடலங்காய்களெல்லாம் ஜனாதிபதி என்ற நபர் 'கூலாக' இருக்கும் வரைக்கும்தான் 'டூயட்' பாடலாமே தவிரி, மாண்புமிகு ஜனாதிபதிக்கு மட்டும் 'மூட்' வந்துவிட்டால், அப்புறம் மொத்த நாடும் தண்ணியில்லா கக்கூசு மாதிரி நாறிக் கிடக்க வேண்டியதுதான்.

நிற்க -

தற்போது மைத்திரி சதிராடி முடித்திருக்கும் இந்தக்கூத்து, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுதியை ஏகத்துக்கு பறைசாற்றியிருக்கிறது. கடைசியாக தீபாவளி நிகழ்ச்சியில்கூட சம்பந்தரிடம் வந்து கெஞ்சிப்பார்த்த மைத்திரி, இனி எதுவுமே ஆகாது என்ற நிலையில்தான் - நாடாளுமன்ற பெரும்பான்மையை காட்டமுடியாது என்ற நிலையில் - கொல்லைப்புறத்தால் சென்று நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டு வந்திருக்கிறார். ஆக, இந்த நாட்டின் ஆட்சி அதிகாரத்தை தீர்மானிக்கும் சக்தி தமிழ் தேசியக் கூட்டமைப்புத்தான் என்பதை மைத்திரி தன் பேனாவினால் மீண்டும் நிரூபித்திருக்கிறார். அத்துடன், தேர்தல் அறிவிப்பும்கூட அவர் தமிழ் மக்களுக்குள் காணப்படும் பிளவுகளை கணக்கிட்டு வீசப்பட்ட வலையாகவே பார்க்கவேண்டியிருக்கிறது. பொதுத்தேர்தலில் சிங்கள வாக்குகளை மைத்திரி - மகிந்த தரப்பு நினைத்தது போல அறுவடை செய்துகொள்ளும். வாக்குப்பெட்டியில் வாங்காவிட்டால், வேறு பெட்டிகளிலாவது அதனை வாங்கிக்கொள்ளும். ஆனால், தமிழர் தரப்பு வாக்குகளை உடைத்து, கொழுத்த ஆடுகள் கொஞ்சத்தை தங்களது பக்கம் வளைத்துப் போடுவதென்பது மகிந்த முதற்கொண்டு அனைத்துத் தரப்பினருக்கும் தொடர்ந்தும் கடினமாகவே இருந்துவந்துள்ளது.

தற்போது தமிழர் அரசியலில் ஏற்பட்டிருக்கும் நிலைமை சிங்களத்தரப்புக்கு கொஞ்சம் சாதகமாகத் திரும்பியிருப்பதாக மைத்திரி கணக்குப்போடுகிறார். தமிழர் தரப்பினை உடைத்து அங்கிருந்து கொஞ்சப்பேரை - அங்கஜன், டக்ளஸைவிட இன்னும் சிலரை அந்தப்பட்டியலில் - தங்கள் தரப்புக்கு வடக்கிலிருந்து கலைத்துப்பிடிக்கப்பார்க்கிறார்.

அவர் அப்படியான ஒரு எதிர்பார்ப்புடன் நடந்துகொள்வதற்கு காரணமில்லாமல் இல்லை.



ஏனெனில், அனந்தி - விக்னேஸ்வரன் என்று ஏற்கனவே பிரிந்து நிற்பவர்களால் கூட்டமைப்பின் வாக்கு வங்கி தற்போது சிதைந்திருக்கிறது. ஆக, இந்த பிளவுக்கு யாராவது மருந்து கட்டமுதல் காயத்தோடு வைத்து அடித்தால் தனக்கு காய் விழும் என்பது மைத்திரியின் கணக்கு.

அதேவேளை, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நம்பிக்கையின் அடிப்படையில் மாத்திரம் தனக்கு தந்த ஆதரவை வைத்து இதுவரையில் தமிழ் மக்களுக்கு எதுவும் தான் செய்யவில்லை என்பதும் மைத்திரிக்கு நன்றாகவே தெரியும். அந்த நம்பிக்கைகளுக்கு ஏற்றவாறு புதிய அரசமைப்பு முறை கனிந்துவருகின்ற வேளையில் அதனை தான் அடித்து உடைத்துவிட்டிருப்பதால், தமிழ் தேசியக்கூட்டமைப்பு தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியில் தற்போது ஒரு அதிருப்தி எழும் என்பதும் மைத்திரிக்கு தெரியாமல் இல்லை. ஆக, இந்த சந்தர்ப்பத்தைக் கூட்டாக பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று மைத்திரி கூட்டி அள்ளி மேசையில் வைத்து கணக்குப் போட்டிருக்கிறார்.

அத்துடன், ஜனவரி 5 ஆம் திகதி வரைக்கும் நாடாளுமன்றம் தொங்கத்தான் போகுதென்றால், அதற்கிடையில் தமிழர் தரப்புக்கு வாரிக்கொடுக்கக் கூடிய பல "சௌந்தர்யங்களைக்கூட" மைத்திரி - மகிந்த தரப்பு கொடி ஆட்டி ஆட்டி செய்யக்கூடும். இந்தப்பட்டியலில், கைதிகள் விடுவிப்பு - காணி விடுவிப்பு - காணமல்போனோர் பிரச்சினை என்பவையெல்லாம் இடம்பெற்றாலும்கூட ஆச்சரியப் படுவதற்கில்லை.

இவையெல்லாம் நிச்சயம் ஆச்சரியம் தரக்கூடிய எதிர்வுகூறல்களாக இருக்கலாம். ஆனால், இவற்றுக்கெல்லாம் உச்ச வாய்ப்பு இருக்கிறது என்பது தான் களநிலைவரம். ஏனெனில், மைத்திரி தற்போது எடுத்திருக்கும் "ரிஸ்க்" அளவிடமுடியாதது. அதாவது, மகிந்தவுக்கு எதிராக முன்னைய ஜனாதிபதி தேர்தலில் எடுத்த ரிஸ்க்கிலும் பார்க்க பொல்லாதது. அன்று, மகிந்தவுக்கு எதிராகத்தான் அந்த ரிஸ்க்கை எடுத்தார். இப்போது, அவர் மேற்கொள்வது தனது கட்சி - மகிந்த தரப்பு எல்லோரையும் நாட்டு மக்களுக்கு முன்னால் வாழ்வா - சாவா என்ற கத்திமேல் நிறுத்தி வைத்துவிட்டு ஆடுகின்ற ஆட்டம். இந்த ஆட்டத்தில், இலகுவில் தோற்பதற்கு அவர் விரும்பவே மாட்டார். ஏனெனில், இதில் எல்லோருடைய அரசியல் எதிர்காலமும் தங்கியுள்ளது. சுருங்கச் சொன்னால், தற்போது தொங்குவது நாடாளுமன்றம் மட்டுமல்ல, இவரகள் எல்லோருடைய அரசியல் எதிர்காலமும் தான். ஆக, இந்த ஆட்டத்தை எவ்வளவு விலைகொடுத்தாவது அவர் வெல்ல முயற்சிப்பார்.

மொத்தத்தில், தமிழ் தேசியக்கூட்டமைப்பினை முற்றாக வலுவிழக்கச்செய்து, தமிழ் மக்களின் ஒற்றைக்குரலாக ஒலிக்கும் தகுதியிலிருந்து நீக்கிவிடுவதுதான் அவரது திட்டமாகத் தெரிகிறது. ஆனால், தற்போதைய நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற கலைப்புக்கு எதிராக நீதிமன்றம் செல்வதற்குத்தான் தீர்மானித்திருப்பதாகவே தெரிகிறது. அப்பட்டமான இந்த காட்டாட்சிகழிசடையிடமிருந்து நாட்டைக்காப்பாற்ற வேண்டுமென்றால் அதற்கு இப்போதிருக்கும் நிலையில் நீதிமன்றமே துணை என்கிறார்கள் தமிழ் தேசியக்கூட்டமைப்பினர். நாடாளுமன்றத்தினை கலைத்து தேர்தலை நடத்தப்போவதாக ஜனாதிபதி அறிவித்திருக்கின்றபோதும், தேர்தலுக்கு உத்தியோகபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய தேர்தல் ஆணையாளர், தான் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின்படிமாத்திரமே இயங்கப்போவதாக கூறியுள்ளார். ஆக, தற்போது உச்ச நீதிமன்றத்தினை நாடவுள்ள தரப்புக்களுடன் இணைந்திருக்கும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, நாட்டின் ஒட்டுமொத்த ஜனநாயக விரும்பிகளின் அணியில் தன்னை தொடர்ந்தும் முன்னிறுத்தியிருக்கிறது.

ஆனால், தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கும் பெரியதொரு சவால் கண்முன்னே வியாபித்து விரிந்து எழுந்துகொண்டிருக்கிறது. கடந்த தேர்தலில் போது இருந்த கூட்டமைப்பாக அது இப்போது இல்லை. மக்கள் மனதிலும் பல மாற்றங்கள். அவற்றுக்கு கூட்டமைப்பின் பல செயற்பாடுகளும் பிரதான காரணம். எதிர்க்கட்சிக்கான வாய்ப்புக் கிடைத்திருந்தும் அதனைக் கூட்டமைப்பு எப்படிப் பயன்படுத்தியது என்பது குறித்தும், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பில் கூட்டமைப்பின் செயற்பாடுகள் குறித்தும் மக்களிடையே ஒருவித அதிருப்தி நிலவுவது என்னவோ உண்மையே. அதைவிட நீதியரசர் விக்னேஸ்வரன், அனந்தி ஆகியோரின் விலகல், தொகுதிப் பங்கீடு என்பனவெல்லாம் இம்முறை தேர்தலில் கூட்டமைப்புக்கு நிச்சயம் தலையிடியாகவே இருக்கும். என்னதான் அதிருப்தி இருந்தாலும் தேர்தல் என்று வரும்போது மக்கள் வீட்டுக்கு வாக்களிப்பதே வழமை. ஆனால் அந்த 'வசியம்' இம்முறையும் எடுபடுமா என்பது, கூட்டமைப்பு அடுத்த சில நாள்களில் மேற்கொள்ளப்போகும் வியூகங்களிலேயே தங்கியுள்ளது. ■

எதிரொலி
Ethiroli

அம்பலம் பதிப்பகம்,
இல. 241, கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
ethirolimedia@gmail.com, 0212243818

## நடுத்தெருவில் மைத்திரி

அந்நியன் படத்தில் வருகின்ற அம்பி போல, அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு இலங்கையின் நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக முடிசூடிக்கொண்ட மைத்திரிபால சிறிசேன, தன்னுடைய உண்மையான முகத்தை முழுதுமாகக் காட்டிவிட்டார்.

ஒரு நாட்டின் அரசியல் யாப்பை கொஞ்சமும் மதிக்காமல் தான் என்ன நினைத்தாரோ அதனையெல்லாம், கூசாமல் செய்து கொண்டிருக்கிறார். ஒரு இரவில் ரணில் ஆட்சியைக் கலைத்துவிட்டு, மகிந்தவைப் பிரதமராக்கினார். பாதுகாப்பு அமைச்சை தன் மடியில் எடுத்து வைத்துக் கொண்டார். பொலிஸ், தகவல் திணைக்களங்களை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வந்தார். நாடாளுமன்றை ஒத்திவைத்தார். உடனடியாக நாடாளுமன்றைக் கூட்டச் சொல்லி உலக நாடுகள் காட்டுக்கத்தல் கத்தியபோதும், அதை ஒரு பொருட்டாகவே மதிக்காமல், நாடாளுமன்றை ஒட்டுமொத்தமாக இன்னொரு இரவில் கலைத்தேவிட்டார் மைத்திரி.


நல்லாட்சியின் மீட்பராக, ஜனநாயகத்தின் தேவதூதனாக, மகிந்த ஆட்சியில் இருந்து மக்களை மீட்ட மாவீரனாக தன்னைப் பற்றிய விம்பத்தைக் கட்டியெழுப்பிய சிறிசேன இன்று சதிசேனாவாக மாறி நிற்பதைப் பார்த்து சந்தி சிரிக்கின்றது.

தம்மால் 113 நாடாளுமன்ற உறுப்பினர்களை, சொடக்குப் போடும் நேரத்தில் – அமைச்சுப் பதவிகளை எறிந்தேனும் – திரட்டி விட முடியும் என்ற எண்ணத்தில் தான் மைத்திரி– மகிந்த கூட்டணி, ஆட்சிக் கலைப்புச் சதியை அரங்கேற்றியது. ஆனால் நினைத்தபடி பெரும்பான்மையை நிரூபிக்கமுடியாது என்பது நாலைந்து நாட்களுக்குள்ளாகவே இந்தக் கூட்டணிக்கு விளங்கிவிட்டது. அதனால் இனியும் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்து விளையாட்டுக் காட்ட முடியாதென்பதால், நேரடியாகத் தேர்தலில் இறங்கி பெரும்பான்மை பலத்தைப் பெறும் திட்டத்தை மைத்திரி–மகிந்த கூட்டணி கையில் எடுத்தது.

ஆனால் நாடாளுமன்றைக் கலைத்தது சட்ட விரோதமானது என்று ஐ.தே.க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி போன்ற கட்சிகள் நீதித்துறையை நாடியுள்ளன. அதில் என்னவிதமான தீர்ப்பு வந்தாலும், எப்படியேனும் தேர்தலை நடத்தும் இன்னொரு குறுக்குவழியை மகிந்த அணி கண்டுபிடித்துவிடும். இத்தகைய தருணத்தில் மகிந்தவோடு சேர்ந்து ரணிலின் முதுகில் குத்திய மைத்திரிக்கு மகிந்த அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துள்ளார். ஜீ.எல் பீரிஸ் தலைமையில் உருவாக்கப்பட்ட பொதுஜன பெரமுனவில் மகிந்த உறுப்பினராகிவிட்டார். இதன் மூலம் அவர் சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறி அடுத்த தேர்தலை பொதுஜன பெரமுனவின் சார்பிலேயே சந்திக்கவுள்ளார். ஆக, மகிந்தவை உள்ளீர்த்தேனும் சுதந்திரக் கட்சியை உயிர்ப்பித்து விடலாம் எனக் கணக்குப் போட்ட மைத்திரி இப்போது, மக்கள் ஆதரவையும் இழந்து கட்சியின் செல்வாக்கையும் இழந்து நடுத்தெருவில் நிற்கிறார். இப்படியான போலி அரசியல்வாதிகளை காலம் இவ்வளவு விரைவாகக் குப்பையில் எறிந்தது ஆச்சரியமே.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# நாயும் வண்ணத்துப்பூச்சியும் மூக்கின் மேல் பூசப்பட்ட மலத்தை முகர்ந்து பார்க்கும் மக்களும்




● நிலாந்தன்

மங்கள சமரவீர மைத்திரியை "நாயே!.." என்று திட்டினார். மங்களவினால்தான் ரணில் இயக்கப்படுகிறார் என்ற தொனிப்பட "வண்ணத்துப்பூச்சிகளின் அணியென்று" அவர்களை மைத்திரி விமர்சித்தார். வண்ணாத்திப் பூச்சிகள் என்பது தன்னினச் சேர்க்கையாளர்களைக் குறிக்கும். அதற்கு மங்கள சமரவீர தான் மைத்திரியைப் போல "ஓர் அட்டையல்ல" என்று கூறியுள்ளார். பாம்புடன் இருப்பதைவிட வண்ணாத்துப் பூச்சியுடன் இருப்பதே சிறந்தது என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கடந்த 5ம் திகதி சுமார் இருபத்தையாயிரம் பேர் கூடியிருந்த ஒரு பொதுக்கூட்டத்தில் வைத்தே மைத்திரி ரணிலை மேற்கண்டவாறு விமர்சித்தார். அக்கூட்டத்துக்கு அவர்கள் வைத்த பெயர் 'மக்கள் மகிமை'. ரணிலைப் பற்றி பேசத்தொடங்கும் பொழுது முதலில் மைத்திரியிடம் ஒரு தயக்கம் இருந்தது. அவர் பதற்றமாகவும், தளம்பலாகவும் காணப்பட்டார். அவருடைய உடல் மொழியானது அவர் திணறுவதைக் காட்டியது. அவருடைய வலது கை அசைவுகள் அவர் பதறுவதைக் காட்டின. ரணிலை இயக்குவது வண்ணத்திப் பூச்சிகளே என்ற தொனிப்பட அவர் பேசத் தொடங்க அவருடைய பின்னணியில் அமர்ந்திருந்த மகிந்த தன்னுடைய தலையில் கையை வைத்தார். ஆனால் கூட்டம் ஆர்ப்பரித்தது. மைத்திரி துணிச்சலடைந்தவராக திரும்பவும் அதை கூறியபொழுது மகிந்தவும் ஏணைய பிரதானிகளும் அதை ரசித்து ஆமோதித்து சிரித்தார்கள். கூட்டம் முன்னதை விட அதிகமாக ஆர்ப்பரித்தது. இப்படியாகப் போயிற்று இலங்கைத்தீவின் அரசியல் நாகரிகம்.

இப்படிப்பட்டதோர் அரசியல் நாகரீகத்தின் பின்னணியில் மைத்திரி நாடாளுமன்றத்தைக் கலைத்ததில் வியப்பேதுமில்லை. இது தொடர்பில் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு உயர் நீதிமன்றத்தை நாடவுள்ளதாகத் தெரிகின்றது. கூட்டமைப்பும் இது தொடர்பில் நீதிமன்றத்தை நாடப்போவதாக ஒரு கதை வந்திருக்கிறது. நிறைவேற்று அதிகாரமுடைய அரசுத் தலைவருக்கு எதிராக வழக்கில் வெல்ல முடியுமா? நீதிமன்றத்துக்குப் போய் நீதி பெறலாமென்றால் ஏன் ரணில் இது வரை அதைச் செய்யவில்லை? தமது நீதித்துறை தொடர்பில் ஒரு நாட்டின் தலைவர் எப்படிப்பட்ட நம்பிக்கையை வைத்திருக்கிறார்?

வரும் பதினான்காம் திகதி நாடாளுமன்றத்தைக் கூட்டப்போவதாக மைத்திரி கடந்த கிழமை அறிவித்திருந்தார். ஆட்சிக் கவிழ்ப்பை ஏற்றுக்கொள்ளாத வெளிநாடுகளின் அழுத்தம் காரணமாகவே அவர் இவ்வாறு அறிவித்ததாகக் கருதப்படுகிறது. அக்கால அவகாசத்திற்குள் மகிந்த தன் பெரும்பான்மையை நிரூபிக்கத் தேவையான நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி விடுவார் என்று மைத்திரியும், மகிந்தவும் நம்பினார்கள். ஆனால் நிலைமை மகிந்தவிற்கு சாதகமாக இருக்கவில்லை. ஆட்சியைக் கவிழ்த்த கையோடு அவர் தனக்குரிய பெரும்பான்மையைத் திரட்டியிருந்தால் வெளிநாடுகளின் அழுத்தம் வரமுன்னரே தன்னை ஸ்தாபித்திருக்கலாம். ஆனால் ஆட்சியைக் கவிழ்த்த கையோடு அவர் எதிர்பார்த்த வேகத்தில் எதிர்பார்த்த அளவிற்கு எம்பிமார்களை விலைக்கு வாங்க முடியவில்லை.

அதே சமயம் கூட்டமைப்பு ரணிலுக்கு ஆதரவாகத் தன் முடிவை அறிவித்துவிட்டது. ஜே.வி.பியும் அவ்வாறு அறிவித்துவிட்டது. இதனால் நிலைமை ரணிலுக்கு சாதகமாகத் திரும்பிவிட்டது. இந்த நிலையில் பதினான்காம் திகதி நாடாளுமன்றத்தைக் கூட்டினால் அதில் தோற்கடிக்கப்படலாம் என்ற ஒரு பதட்டம் மகிந்த அணியின் மத்தியில் தோன்றியது. எனவே நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டார்கள்.

பத்தொன்பதாவது திருத்தத்தின் படி ஒரு நாடாளுமன்றத்தைக் கலைப்பதென்றால் 54 மாதங்கள் கழிய வேண்டும். அதன்படி முன்னிருந்த நாடாளுமன்றத்தை 2020 பெப்பரவரி மாதமே கலைக்கலாம். அதேசமயம் ஒரு வாக்கெடுப்பில் மகிந்த தோற்கடிக்கப்பட்டால் அவருக்குப் பதிலாக பெரும்பான்மையைக் காட்டக்கூடிய மற்றொருவரை பிரதமராக நியமிக்க வேண்டும் ஆனால் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது. அதுமட்டுமல்ல இந்த நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் முடிவதற்கு முன்னரே இந்த ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிந்து விடும். அதாவது வரும் 2019 ஆண்டின் இறுதிப் பகுதியில் அது முடிவடையும்.

பத்தொன்பதாவது திருத்தம் எனப்படுவது மகிந்த அணியை முடக்குவதற்காகவும், ரணிலைப் பாதுகாப்பதற்காகவும் உருவாக்கப்பட்ட ஒன்று.

(04ஆம் பக்கம் பார்க்க)

எதிரொலி
Ethiroli

14-20 நவம்பர் 2018


# நாயும் வண்ணத்துப்பூச்சியும் மூக்கின் மேல் பூசப்பட்ட மலத்தை முகர்ந்து பார்க்கும் மக்களும்

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளித்தோற்றத்திற்கு அது அரசுத்தலைவரின் அதிகாரங்களைக் குறைப்பதற்கானது என்று கூறப்பட்டாலும் உள்நோக்கத்தைப் பொறுத்தவரை அது ராஜபக்ஸக்களுக்கு எதிரானது. அது ஒரு யாப்புப் பூட்டு.எனவே சட்டப்படி முயற்சித்தால் அது தனக்கு சாதகமாக இருக்காது என்று விளங்கியபடியால்தான் ராஜபக்ஸ சட்ட மீறலாக அதாவது யாப்பு மீறலாக ஆட்சியைக் கவிழ்த்தார். எனவே இனிமேலும் யாப்புக்கு உட்பட்டு அவர் தன்னை ஸ்தாபிக்க முடியாது. யாப்பை மீறித்தான் அதைச் செய்ய வேண்டியிருக்கும். அப்படிச் செய்வதற்கு ஒரு தோதான ஆளாக மைத்திரி காணப்படுகிறார். கடந்த 5ம் திகதி நடந்த கூட்டத்தில் அவர் பேசியதைப் பார்த்தால் அவர் நிச்சயமாக ராஜபக்ஸக்களை திருப்திப்படுத்தவே முயற்சிப்பார். அதன்படி அவர் நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டார். யாப்பு நாகரீகம், நாடாளுமன்ற நாகரீகம், ஜனநாயக விழுமியங்கள் போன்ற வார்த்தைகள் இலங்கைத்தீவுக்குப் பொருந்தாது. குறிப்பாக மைத்திரி-மகிந்த அணிக்கு யாப்பு என்ற பூட்டை சட்டப்படி திறக்க முடியாது. எனவே பூட்டை உடைப்பதே அவர்களுக்குள்ள ஒரே வழி. அதாவது அளாப்பி விளையாடுவது.

அப்படி நாடாளுமன்றத்தைக் கலைத்தால்தான் மகிந்தவின் திட்டம் நிறைவேறும். ஏனெனில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் ஒரு புதிய தேர்தலை நடாத்த வேண்டியிருக்கும். நிச்சயமாக அதில் மகிந்த வெல்லக்கூடிய வாய்ப்புக்களே அதிகம். இனி நடக்கக் கூடிய எல்லாத் தேர்தல்களிலும் தனக்கு வெற்றி நிச்சயம் என்று மகிந்த நம்புகிறார். அதில் உண்மையும் உண்டு. அவர் வெற்றிபெறக் கூடாது என்பதற்காகத்தான் ரணில் தேர்தல்களை ஒத்தி வைத்துக்கொண்டு வந்தார். அவ்வாறு பல மாதங்களாக ஒத்தி வைக்கப்பட்ட உள்ளூராட்சிமன்றத் தேர்தலை இந்த ஆண்டு நடத்திய போது அது மகிந்தவின் பலத்தை நிரூபிப்பதாக அமைந்து விட்டது. அதில் பெற்ற வெற்றிகளின் பின்னணியில்தான் மகிந்த ஆட்சியைக் கவிழ்த்திருக்கிறார். அத்தேர்தல் முடிவுகளின் படி கடந்த நான்காண்டுகளாக கூட்டாட்சிக்கு மக்கள் வழங்கிய ஆணைகள் அனைத்தும் காலாவதியாகி விட்டன என்ற ஒரு வாதத்தை மகிந்தவின் ஆதரவாளர்கள் சமூக வலைத்தளங்களில் முன்வைக்கிறார்கள். அப்படிப் பார்த்தால் இப்பொழுது நடந்துகொண்டிருப்பது மக்களாணைக்கும், யாப்புக்கும் இடையிலான ஒரு யுத்தம் எனலாமா? அல்லது மக்கள் ஆணைக்கும், மேற்கத்தைய மற்றும் இந்திய விருப்பங்களுக்கும் எதிரான ஒரு யுத்தம் எனலாமா?

ஆம் அப்படித்தான் ராஜபக்ஸ ஆதரவாளர்கள் கருதுகிறார்கள். இந்த யுத்தத்தில் யாப்பை முறித்துக்கொண்டு ஒரு பொதுத் தேர்தலை நடத்தி அதில் மகிந்த தனது ஆட்சியை நிலைநிறுத்தலாம் என்றும் அவர்கள் நம்புகிறார்கள். எனவே மகிந்த - மைத்திரி அணிக்கு இப்பொழுது தேர்தல்கள் தேவைப்படுகின்றன. அதற்கு நாடாளுமன்றத்தைக் கலைப்பதே ஒரே வழி. யாப்பு மீறலாக அதைச்செய்துவிட்டுபின்னர்நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபித்து தமக்குத் தேவையான சட்ட ரீதியிலான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர்கள் நம்புகிறார்கள்? அதாவது அளாப்பி விளையாடி வென்று விட்டால் பின்னர் வெற்றியே எல்லாவற்றையும் நியாயப்படுத்திவிடும் என்று அவர்கள் நம்புகிறார்கள்?




ஒரு தேர்தல் நடந்தால் அதில் மகிந்த பெரு வெற்றி பெறுவாரென்றும் அவர் தன்னுடைய முன்னைய ஆட்சிக்காலங்களில் செய்ததைப் போல ஏனைய கட்சிகளை உடைத்து எம்பிமார்களை தன்வசப்படுத்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக்கூட பெற்றுவிடக்கூடும் என்று தென்னிலங்கையில் வசிக்கும் ஒரு தொழிற்சங்கவாதி சொன்னார். மகிந்தவை ரணில் எதிர்கொள்வதென்றால் தமிழ் - முஸ்லிம் வாக்குகளை அதிகம் நம்பியிருக்க வேண்டிவரும். ஆனால் ரணில் -மைத்திரி கூட்டிற்கு வாக்களித்து ஏமாற்றமும், விரக்தியும் அடைந்திருக்கும் தமிழ் மக்கள் முன்னைய தேர்தல்களில் வாக்களித்ததைப் போல இனிமேலும் கொத்தாக வாக்களிப்பார்களா? குறிப்பாக உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் கஜேந்திரகுமாருக்குக் கிடைத்த வாக்குகள், விக்னேஸ்வரனின் புதிய கட்சி என்பவற்றை கருதிக் கூறின் தமிழ் வாக்குகள் ஒரு கொத்தாக ரணிலுக்கு விழக்கூடிய வாய்ப்புக்கள் முன்னரைப் போல இல்லை. எனவே மகிந்தவுக்கு எதிராக ரணில் பெறக்கூடிய வெற்றிகள் தொடர்பில் நிறையச் சந்தேகங்கள் உண்டு.

அது மட்டுமல்ல. இப்பொழுது கூட்டமைப்பு மகிந்தவுக்கு எதிராக நிலை எடுத்திருக்கிறது. இது அதன் தர்க்கபூர்வ விளைவாக வாக்குகளை இன ரீதியாக பிளக்கும். எப்படியெனில் தனது வெற்றியைத் தடுத்தது தமிழ் மக்களே என்று மகிந்த நம்புவார். புலிகள் இயக்கத்தைத் தோற்கடித்த பின்னரும் தமிழ்த்தரப்பு நாட்டில் இன்னமும் ஒரு தீர்மானிக்கும் சக்தியாக இருப்பதை சிங்களக் கடும்போக்குவாதிகள் வெறுப்போடும், வன்மத்தோடும்தான் பார்ப்பார்கள். தென்னிலங்கையை யார் ஆள வேண்டும் என்பதை தமிழ் மக்களே தீர்மானிப்பது என்பது அவர்களைப் பொறுத்தவரை ஏற்றுக் கொள்ள முடியாத அவமானகரமான ஒரு யதார்த்தம். தேர்தல் காலங்களில் மகிந்த அணி இந்த விவகாரத்தைத் தூக்கிப் பிடித்தால் அது சிங்கள கடும்போக்கு வாக்குகளை மட்டுமல்ல சாதாரண அப்பாவிச் சிங்கள மக்களின் திரளான வாக்குகளையும் மகிந்தவை நோக்கியே தள்ளிவிடும்.

ரணில் - சம்பந்தர் கூட்டு எனப்படுவது யானை - புலி கூட்டாகவே காட்டப்படும். சம்பந்தர் நிச்சயமாக ஒரு புலி இல்லை. அவர் தன்னுடைய கட்சியை எப்பொழுதோ புலி நீக்கம் செய்து விட்டார். அவரைக் கார்ட்டூனில் வரையும் சிங்களக் காட்டூனிஸ்ட்டுக்கள் அவருடைய மேற்சட்டையின் பின்பக்கம் தொங்கிக் கொண்டிருக்கும் ஒரு புலி வாலை இப்பொழுது வரைவதில்லை. ஆனால் தேர்தல் என்று வரும் பொழுது மகிந்த அணி இனவாதத்தைக் கக்குமிடத்து வாக்குகள் இனரீதியாகவே பிளவுபடும். அதாவது கடந்த மூன்றரை ஆண்டுகளாக ஐ.நாவும் மேற்கு நாடுகளும் முன்னெடுத்து வந்த நிலைமாறுகால நீதிச் செய்முறைகள் இலங்கைத்தீவில் தோல்வியுறத் தொடங்கிவிட்டன.

கடந்த வியாழக் கிழமை கொழும்பில் சோபித தேரரின் நினைவு நாள் இடம்பெற்றது. பேராசிரியர் ஜெயதேவ உயங்கொட நினைவுப் பேருரை ஆற்றியிருக்கிறார். அப்பேருரையில் அவர், “சகல குழுக்களினதும் தார்மீகத் தலையீடு ஒன்றே இன்றைய தருணத்தில் எமக்குத் தேவை. தற்போதைய நெருக்கடிக்கு அரசியல் கட்சிகளினாலும் குழுக்களினாலும் மாத்திரம் தீர்வைக் கண்டுவிட முடியாது. வண. மாதுளுவாவே சோபித தேரோ தார்மீகத் தலையீடுகளைச் செய்யக்கூடியதாக இருந்த சிவில் சமூக இயக்கமொன்றின் செயற்பாடுகளுக்காக தன்னை அர்ப்பணித்திருந்தார். அதேபோன்ற அணுகுமுறையே இன்று முன்னெப்பொழுதும் இல்லாத வகையிலான அரசியல் நெருக்கடிக்குள் முழு நாடுமே அகப்பட்டிருக்கும் ஒரு நேரத்தில் எமக்குத் தேவைப்படுகிறது” என்று உரையாற்றியிருக்கிறார்.அப்படித் தார்மீகத் தலையீடு செய்யத்தக்க தரப்புக்கள் இச்சிறிய தீவில் யாருண்டு? இரண்டு கட்சிகளும் மக்கள் தம் பக்கமே என்று காட்டப்போட்டி போட்டுகொண்டு கூட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் ஒழுங்குபடுத்தி வருகின்றன. ஆனால் மக்கள் மகிமை என்று கூறிக் கொண்டு தலைவர்கள் மேடைகளில் தங்களைத் தாங்களேபரிசுகெடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அண்மைக்கால அரசியல் நடப்புக்களைக் குறித்து சபரகமுவ பல்கலைக்கழக விரிவுரையாளரான முஸ்லிம் பெண்மணி ஒருவர் சமூகவியற் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளரான சரத் ஆனந்தவிடம் பின்வருமாறு கேட்டிருக்கிறார். “தற்போதைய நம்நாட்டு அரசியல் நிலவரம் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?” என்று. அதற்கு கலாநிதி சரத் ஆனந்த பின்வருமாறு கூறியிருக்கிறார். “நாட்டு மக்களின் கைகளைப் பின்புறமாகக் கட்டி வைத்து விட்டு, அவர்களின், மூக்கின் மேல் மலத்தை எடுத்துப் பூசி முகர்ந்து பார்த்தபடி கிடவுங்கள் என்று விட்டுவைத்துள்ள மாதிரியான உணர்வுதான் எழுகிறது. வேறென்ன சொல்ல இந்த நிலமை பற்றி?” ■




# பிரான்ஸின் ஸ்பைடர் மேன்

'பிரான்ஸின் ஸ்பைடர் மேன் என்று அழைக்கப்படுபவர் 56 வயதான அலன் ரொபர்ட் Alan Robert. இவர் தனது 11 ஆவது வயதில் பொழுதுபோக்காக தொடங்கிய ஒரு செயல் இன்று உலகமே அவரைத் திரும்பிப்பார்க்கும் அளவுக்குக் கொண்டுவந்துள்ளது. கயிறுகள் மற்றும் எந்தப் பாதுகாப்பு உபகரணங்களின் உதவியுமின்றி கட்டடங்களில் ஏறத்தொடங்கிய ரொபர்ட், இதுவரை துபாயின் Burj Khalifa ஈபிள் கோபுரம், சிட்னி ஒபரா ஹவுஸ் உட்பட உலகின் மிக உயரமான 150 கட்டடங்களில் ஏறியுள்ளார்.

சமீபத்தில் லண்டனிலுள்ள 230 மீற்றர் உயர Heron Tower என்னும் கட்டடத்தின் உச்சிக்கு ஏறிய இவர் பொதுமக்களுக்களின் அன்றாட செயற்பாடுகளுக்கு இடையூறாக இருந்தார் எனும் காரணத்துக்காக கைது செய்யப்பட்டுள்ளார். முறையான அனுமதி பெறாமலே கட்டடங்கள் மீது ஏறியதனால் ரொபர்ட் இதற்கு முன்னரும் பல தடவைகள் கைதும் செய்யப்பட்டுள்ளார்.

# மயங்கி விழுந்த உலக அழகி!

அழகு கண்களை மயக்கும். அழகுக்கு மயங்காத ஆளே இல்லை. அதுபோல தான் கிளாரா என்பவர் 'உலக அழகி' எனத் தன் பெயர் அறிவிக்கப்பட்ட உடனேயே மயங்கிவிட்டார்.

Miss Grand International 2018 எனும் உலக அழகிப் போட்டி மியன்மார் நாட்டில் நடைபெற்றுள்ளது. இப்போட்டியில் பராகுவே நாட்டைச் சேர்ந்த கிளாரா சோஸா மற்றும் இந்திய நாட்டைச் சேர்ந்த மீனாட்சி சவுத்ரி ஆகியோர் இறுதிச் சுற்று மேடையில் ஜொலித்துள்ளனர்.

மிகவும் பரபரப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்த இறுதிப் போட்டி மேடையில் "கிளாரா சோஸா உலக அழகியாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்" என அறிவிக்கப்பட்ட அந்த நொடியே அதிர்ச்சியில் மேடையிலேயே மயங்கி விழுந்துள்ளார் கிளாரா.

ஆனந்தத்தின் உச்சம் வெளிப்படும் விதம் ஆளுக்காள் வேறுபட்டாலும், ஆனந்தம் ஆனந்த்மே.





# விநோத திருடர்கள்

கண்டுபிடிப்புக்களும் அதிசயங்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகும் உலகில் திருட்டுக்களும் அநியாயங்களும் இல்லாமல் இல்லை. அதையும் எவ்வளவு விநோதமாகச் செய்கின்றார்கள் என்பது தான் வியக்க வைக்கிறது. ஆனாலும் இப்படியும் சில முட்டாள்கள் இன்னும் இருக்கத் தான் செய்கிறார்கள்.

பெல்ஜியம் நாட்டில் இ-சிகரெட் எனும் ஒரு கடைக்குள் 6 நபர்கள் ஆயுதங்களுடன் திருடச்சென்றுள்ளனர். அப்போது, "இன்னும் வியாபாரமே ஆகவில்லை, கடை மூடும் நேரம் வந்தால் நிறையப் பணம் கிடைக்கும்" என்ற வார்த்தைகளைக் கேட்டு மாலை மீண்டும் வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்று, மாலை 3 மணிக்கு மீண்டும் வந்துள்ளனர். அப்போது உரிமையாளர் "3 மணி கொள்ளையடிப்பதற்கு ஏற்ற நேரம் அல்ல. 6.30 மணிக்கு வாருங்கள், அப்போது என்னிடம் இன்னும் நிறையப் பணம் இருக்கும்" என்றாராம். அதற்கும் சரி என்று விட்டு மீண்டும் 6.30 க்கு வந்த திருடர்களை சாதாரண உடையில் பதுங்கியிருந்த பொலிஸார் துப்பாக்கி முனையில் கைது செய்துள்ளனர்.

இந்தக் காலத்தில் இப்படியும் விநோத மனிதர்கள் இருக்கின்றனர் என்பது ஆச்சரியம் அளிக்கிறதல்லவா?





# தீபாவளி போனஸாக சொகுசு கார்கள்

வைர நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் ஊழியர்களுக்கு அடித்தது அதிர்ஷ்டம். குஜராத்தில் உள்ள ஒரு வைர நிறுவனத்தின் வளர்ச்சிக்கு மாபெரும் அளவில் பங்காற்றியதாகத் தேர்வு செய்யப்பட்ட 1500 ஊழியர்களில் 600 பேருக்கு சொகுசு கார்களும், 900 பேருக்கு நிலையான வைப்புச் சான்றிதழ்களும் வழங்கி நெகிழ்ச்சிப்படுத்தியுள்ளார் அந்த நிறுவன உரிமையாளர். இந்த நிறுவனத்தில் ஒவ்வொரு வருடமும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு ஊழியர்களுக்கு வீடுகள், தங்க நகைகள், பைக் போன்றவை போனஸாக வழங்கப்படுவது வழக்கம் அதிலும் இந்த வருடம் ஊழியர்களுக்கு இன்னும் பல படி அதிகமான மகிழ்ச்சி தான் எனலாம்.

# மீன் கறியால் பேரதிர்ஷ்டம்



Fish market எனும் உணவகத்தில் மதிய உணவுக்காக தனது சகாக்களுடன் சென்று பலவகை மீன்களை உட்கொண்ட இந்தியாவின் கர்நாடக மாநில உணவு மற்றும் வளங்கள் துறை அமைச்சர் , அங்கிருந்த "பாம்பிரட்" மற்றும் "அஞ்சல்" ஆகிய மீன் உணவுகளைச் சாப்பிட்டு அசந்து போயுள்ளார். உடனடியாக அந்த உணவுகளைச் செய்த அந்த ஹோட்டலின் தலைமை சமையல் கலைஞர் ஹனீப் அகமதுவை அழைத்த அமைச்சர், அவரை மனதாராப் பாராட்டி 25,000 ரூபா பணத்தை 'டிப்சாக' வழங்கியும் இன்ப அதிர்ச்சி கொடுத்துள்ளார்.

பாராட்டுவதற்கும் நல்ல மனம் வேண்டும்.





## சவாலே சமாளி

கீழே உள்ள குறிப்புகள் ஒரு நாட்டைக் குறிக்கின்றன. அது எந்த நாடு என்பதைக் கண்டுபிடியுங்கள்.

1. கிழக்கு ஐரோப்பாவில் உள்ள நாடு. சோவியத் ரஷ்யாவின் பிடியில் நீண்டகாலம் இருந்தது.
2. இந்த நாட்டின் தலைநகர் மின்ஸ்க். வரலாற்றில் இதுவரை 18 தடவை அழிந்து, மீண்டும் உயிர்த்தெழுந்த நகரம். அதனால் இந்த நகரத்தை 'ஹீரோ சிட்டி' என்று அழைக்கிறார்கள்.
3. இரண்டாம் உலகப் போரில் தனது மூன்றில் ஒரு பங்கு மக்களை இழந்த நாடு.
4. ஐரோப்பிய எருது இந்த நாட்டில்தான் அதிகம். இதுவே இந்த நாட்டின் தேசிய விலங்கு.
5. இந்த நாட்டைச் சேர்ந்த சிவெத்லானா அலெக்சியேவிச் இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற பெண் எழுத்தாளர் ஆவார்.
6. உருளைக் கிழங்கு அதிகம் விளைவிக்கப்படுகிறது. சுமார் 300 வகையான உருளைக் கிழங்கு உணவு வகைகள் இங்கே பிரபலமானவை.

## சிப்பிக்குள் முத்து



சிப்பி மெல்லுடலி வகையைச் சேர்ந்த உயிரினம். அதன் மென்மையான உடலைப் பாதுகாக்கும் விதத்தில் கடினமான ஓடு மூடப்பட்டிருக்கும். இந்த ஓட்டுக்குள் சிறிய துளை இருக்கும். அதன் வழியே ஏதாவது கல், மண், தூசி போன்ற அந்நியப் பொருட்கள் உள்ளே நுழைந்தால், சிப்பிக்கு உறுத்திக்கொண்டிருக்கும். அந்த உறுத்தலைக் குறைப்பதற்காக ஒருவிதத் திரவத்தைச் சுரக்கும். இந்தத் திரவம் கெட்டியாகும்.

மீண்டும் உறுத்தல் ஏற்படும்போது மீண்டும் திரவம் சுரக்கும். இப்படிச் சுரக்கும் திரவமே முத்தாக மாறுகிறது . கடலில் இயற்கையாக இப்படி முத்து கிடைக்கிறது. சிப்பிகளை வளர்த்து, செயற்கையாக உறுத்தலை உண்டாக்கி முத்துகளை உற்பத்தி செய்கிறார்கள். இதைச் செயற்கை முத்து என்று அழைக்கிறார்கள்.

## கதைப்பாடல்



காலைக் கதிரவன் முகம்பார்க்க
தாமரைப் பூக்கள் காத்திருக்கும்...
சோலைப் பூக்களில் வந்தமர்ந்து
சுகமாய் வண்டுகள் தேன்குடிக்கும்...

சாலை யோர மரங்களிலே
சேர்ந்திடும் பறவைக் கூட்டங்கள்...
ஆலோலம் இசைப்பதைக் கேட்பதற்கு
ஆயிரம் காதுகள் போதாது....

கடலின் அலைகள் தாலாட்டும்
களிப்புடன் நண்டுகள் விளையாடும்....
படகுகள் எல்லாம் மீன்பிடிக்க
படை வீரர்கள்போல அணிவகுக்கும்...

பாலைக் குடிக்கக் கன்றுகளைப்
பாசமாய் அழைத்திடும் தாய்ப்பசுக்கள்...
வாலை ஆட்டியே கன்றுகளும்
வந்திடும் துள்ளிக் குதித்தோடி....

அரும்புகள் மெல்ல
மொட்டவிழும்
கரும்புகள் காற்றில்
சலசலக்கும்...
கருங்குயில், கூவி
வரவேற்கும்
காலைப்
பொழுதின்
அற்புதம்பார்.....

## குட்டிக் கதை

## 2ஆவது ஓட்டப்பந்தயம்

ஆமையிடம் ஓட்டப் பந்தயத்தில் தோற்றதில் இருந்து முயல் கடுகடுவென்று இருந்தது. தனக்குத்தானே புலம்பஆரம்பித்துவிட்டது.

"கேவலம் ஒரு ஆமையிடம் தோற்றுவிட்டேன். எனக்கு ஏற்பட்ட இந்தக் களங்கத்தை நான் துடைத்தே ஆகவேண்டும். மீண்டும் ஆமையைப்போட்டிக்கு அழைத்து வென்று காட்டுவேன். அப்போதுதான் போன மானம் திரும்ப வரும்." எனத் தனக்குள்ளே கூறிக்கொண்ட முயல் ஆமையின் வீட்டுக்குச் சென்றது .

"அடேய் ! வெளியே வா. உன்னுடன் கொஞ்சம் பேசவேண்டும்." என்றது முயல்.

"யாரது?" என்றது ஆமை.

"நான்தான் முயல் கொஞ்சம் வெளியில் வா! உன்னுடன் பேசவேண்டும்!" என்றது சற்று அதிகாரமாக.

ஆமை மெதுவாக வெளியில் வந்து எட்டிப்பார்த்தது." மறுபடியும் நாம் இருவரும் ஓட்டப் பந்தயம் ஓடுவோம். அதுவும் இன்றே ஓடவேண்டும் . தயாரா இரு ! என்றது முயல்.

"நேற்றுதானே ஓடினோம்.மறுபடியும் ஏன் ஓடவேண்டும்? இன்னொரு நாளைக்கு வைத்துக் கொள்ளலாமே. இன்று மழை வரும் போல் இருக்கிறது . " என அடக்கமாய் சொல்லியது ஆமை.

"அதெல்லாம் முடியாது. இன்றே ஓடவேண்டும். நரியே நடுவராக இருக்கட்டும். வா நரி வீட்டுக்குப் போவோம் . " என்றது முயல்.

வேறு வழியின்றி, ஆமை வீட்டைப்பூட்டிவிட்டு முயலுடன் சென்றது . இருவரும் நரியின் வீட்டை அடைந்தார்கள். நரியிடம் பந்தயம் நடத்துவது பற்றி முயல் பேசியது .

அதற்கு நரி , " நேற்று நடந்த பந்தயத்தில் நீ தோற்றுப் போனாய். மறுபடியும் இன்று எதற்காகப் பந்தயம் நடத்தவேண்டும் ? " என்றது.

" அதெல்லாம் முடியாது . இன்று கண்டிப்பாகப் பந்தயத்தை நடத்தவேண்டும் . பந்தயத்தில் நான் ஆமையை வென்றால்தான் எனக்கு ஏற்பட்ட அவமானத்தை நான் போக்கிக் கொள்ளமுடியும் . " என்றது முயல்.

நான் சொல்வதைக்கேள்! இன்று மழை வரும் போல் இருக்கிறது. நாளைக்கு வைத்துக் கொள்ளலாம் " என்றது நரி.

வேறு வழியின்றி முயல் ஒத்துக்கொண்டது .

காலை 10 மணிக்கு வந்துவிடுங்கள் . நேற்று ஓடிய இடத்திலேயே பந்தயத்தை வைத்துக்கொள்வோம். எல்லா மிருகங்களுக்கும் சொல்லிவிடுகிறேன்." என்றது நரி .

மறுநாள் காலை 10 மணி. முயலுக்கும் , ஆமைக்கும் நடக்கும் ஓட்டப் பந்தயத்தைக் காண எல்லா மிருகங்களும் கூடிவிட்டன .நடுவராக இருந்த நரி ஊளையிட்டு ஓட்டப் பந்தயத்தைத் தொடங்கி வைத்தார் .

அவ்வளவுதான் முயல் வேகமாக ஓடத் தொடங்கியது. ஆமை மெதுவாக நகரத் தொடங்கியது. ஆனாலும் நம்பிக்கையை இழக்கவில்லை. முயலுக்கு இன்னும் சில அடி தூரமே இருந்தது. வெற்றிக் கம்பத்தைத் தொட்டுவிடுவோம் என்று முயல் நினைத்த மாத்திரத்தில், அதற்கு அங்கே பேரிடி காத்திருந்தது . முதல்நாள் பெய்த மழையில், வெள்ளம் பெருக்கெடுத்து ஆறுபோல் ஓடிக்கொண்டிருந்தது. அந்த ஆற்றைக் கடந்தால்தான் வெற்றிக் கம்பத்தைத் தொடமுடியும் . முயலுக்குஎன்னசெய்வதென்று தெரியவில்லை .

ஆமை மெதுவாக முன்னேறிக் கொண்டிருந்தது. நேரம் சென்று கொண்டே இருந்தது. முயலால் ஆற்றைக் கடக்க முடியவில்லை. இதற்கிடையில் ஆமை ஆற்றின் அருகில் வந்துவிட்டது. எதிரே ஓடும் ஆற்றைப் பார்த்த ஆமை, கொஞ்சமும் அஞ்சாமல் ஆற்றில் இறங்கி மறு கரையை அடைந்தது. மிக எளிதாக வெற்றிக் கம்பத்தைத் தொட்டது. ஆமை மீண்டும் வெற்றி பெற்றதாக நரி அறிவித்தது .

முயலுக்கு அவமானம் தாங்க முடியவில்லை. எல்லா மிருகங்களும் முயலைப் பார்த்து , " இது உனக்குத் தேவையா?" என்று கேட்டன. முயல் தனக்குள்ளே , " ஆமையை மறுபடியும் பந்தயத்துக்கு நான் கூப்பிட்டிருக்கக் கூடாது" என்று முணுமுணுத்துக் கொண்டது .



## மக்களின் தலைவன்



★ உலகப் பெருந் தலைவர்களில் ஒருவராக விளங்கியவரும், மனித உரிமைக்காகக் குரல் கொடுத்தவரும், அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியுமான ஜோன் எஃப் கென்னடி (John F Kennedy) அமெரிக்காவில் மசாசூசெட்ஸ் மாநிலத்தில் ப்ரூக்ளின் என்ற நகரில் 1917 இல் பிறந்தார். இவரின் தந்தை ஒரு தொழிலதிபர்.

★ இளமைப் பருவத்தில் இவருக்குப் பல முறை உடல்நிலை சரியில்லாமல் போவதுண்டு. 1940 இல் ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றார். அமெரிக்கக் கடற்படையில் அதிகாரியாகச் சேர்ந்தார். இரண்டாம் உலகப் போர் நடைபெற்று வந்த சமயத்தில் இவர் பொறுப்பிலிருந்த கடற்படைக் கப்பலை ஜப்பானியப் போர்க்கப்பல் தாக்கி மூழ்கடித்தது.

★ காயம் பட்ட நிலையிலும் கடலில் நீந்தித் தன் வீரர்களைக் காப்பாற்றினார். ஒரு வீரரைக் காப்பாற்றி சுமார் மூன்று மைல் தூரம் கடலில் இழுத்து வந்து கரை சேர்த்தார். இந்த துணிகரமான செயலுக்காக அவருக்கு 'பர்பிள் ஹார்ட்' என்ற வீரப் பதக்கம் வழங்கப்பட்டது.

போர் முடிந்த பிறகு தீவிர அரசியலில் ஈடுபட்டார்.

★ 1947 முதல் 1953 வரை ஜனநாயகக் கட்சி சார்பாக அமெரிக்கக் கீழவை உறுப்பினராகவும் 1953 முதல் 1961 வரை செனட் உறுப்பினராகவும் இருந்தார். சிறிது காலம் கடுமையான நோயால் பாதிக்கப்பட்டு முதுகுத் தண்டு அறுவை சிகிச்சை செய்து கொண்டார். சிகிச்சைப் பெற்று வந்த காலத்தில் 'Profiles in courage' என்ற நூலை எழுதினார். இந்த நூலுக்காக இவருக்கு 1957 இல் 'புலிட்சர் பரிசு' வழங்கப்பட்டது.

★ 1960 இல் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்று அமெரிக்காவின் 35 ஆவது ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார். அப்போது அவருக்கு வயது 43.

★ ஜனாதிபதியான பின் இவர் மேற்கொண்ட பொருளாதார நடவடிக்கைகளால் இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய அதிக பொருளாதார வளத்தை அமெரிக்கா கண்டது. இவரது தலைமையின் கீழ், 1963 இல் அமெரிக்கா, ரஷ்யா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் அணு ஆயுத சோதனை தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

★ இவரது ஆட்சிக் காலத்தில் கியூபா ஏவுகணை விவகாரம், பெர்லின் சுவர் பிரச்சினை, விண்வெளி ஆய்வுப் போட்டி, அமெரிக்க குடியுரிமை விவகாரம், வியட்நாம் போர் ஆரம்பம் ஆகிய பல முக்கிய நிகழ்வுகள் உலகில் நடந்தன. அவை எழுப்பிய சவால்களை இவர் தீர்க்கமாக எதிர்கொண்டார்.

★ கம்பீரமான தோற்றமும் நல்ல பேச்சாற்றலும் கொண்டவர். அமெரிக்க மக்கள் மட்டுமல்லாமல் உலக மக்கள் அனைவராலும் நேசிக்கப்பட்டவர். போரை வென்றதற்காக அல்லாமல் போரைத் தவிர்த்ததற்காக நாட்டு மக்களால் புகழப்பட்டவர்.

★ 1963 இல் திறந்த காரில் தன் மனைவியுடன் ஒரு நிகழ்ச்சிக்குச் சென்றிருந்த சமயத்தில் இவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் இறந்தபோது இவரது வயது வெறும் 46தான் .



# பொங்கி எழுந்த மைத்திரியும் பொறுமை காத்த ரணிலும்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், பிரதமர் பதவியை வகித்த ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையே நெடுநாளாகவே மோதல் இருந்து வந்தாலும், அதை இருவரும் வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளவில்லை. அவ்வப்போது முறுகல் வெடித்திருந்தாலும் சண்டையென்பது சந்திக்கு வரவில்லை. கூட்டரசுக்குள் கருத்துமோதல் என்பது ஜனநாயகப் பண்பு என்று விளக்கமும் அளிக்கப்பட்டது.

உள்ளாட்சித் தேர்தலுக்குப் பின்னர் மைத்திரிபால சிறிசேன, ரணிலை மறைமுகமாக விமர்சித்து வந்தாலும் எந்தவொரு இடத்திலும் மைத்திரியை ரணில் தாக்கிப்பேசவில்லை. இறுதிக்கட்டம்வரை அரசியல் நாகரிகம் பேணிவந்தார்.

எனினும், ரணிலை பதவிநீக்கம் செய்த கையோடு அவர்மீது சரமாரியாக விமர்சனக் கணைகளைத் தொடுக்க ஆரம்பித்துவிட்டார் மைத்திரி. இதன் உச்சகட்டமாக ஐக்கிய தேசியக்கட்சிக்குப் புதிய தலைவர் அவசியம் என்ற வலியுறுத்தலையும் விடுத்து - ரணிலுக்கு அடிக்குமேல் அடிகொடுத்தார்.

அப்போதுகூட ஜனாதிபதியைப் பெயர் குறிப்பிட்டு ரணில் விமர்சிக்கவில்லை. மக்கள்ஆணையைக்காட்டிக்கொடுப்பது என்பது கீழ்த்தரமான செயற்பாடு என்று மட்டுமே தாக்கிப்பேசியிருந்தார். இதுதான் மிஸ்டர் கிளின் என ஐ.தே.க. ஆதரவாளர்கள் பெருமிதம் கொள்கின்றனர். ■

## அரசியல் களத்தில் மீண்டும் ஹிட்டான முட்டை அப்பம்!

கா தோடு தாக

2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி மஹிந்தவின் காலைவாரிவிட்டு, எதிர்க் கட்சிகளுடன் கரம்கோர்த்தார் மைத்திரிபால சிறிசேன. 20 ஆம் திகதி இரவு மஹிந்தவுடன் இணைந்து அலரிமாளிகையில் முட்டை அப்பம் சாப்பிட்ட அவர், மறு நாள் காலை 'பல்டி' அடித்தார்.

"இரவு என்னுடன் முட்டை அப்பம் சாப்பிட்ட நபர், காலையில் முதுகில் குத்திவிட்டார்" என மஹிந்த அறிவித்த பின்னர் இலங்கை அரசியல் களத்தில் முட்டை அப்பம் பேசுபொருளானது. தேர்தல் பிரசார மேடைகளிலும் முட்டை அப்பம் பற்றியே அக்காலப்பகுதியில் அதிகம் பேசப்பட்டது.

ஆட்சிமாற்றம் ஏற்பட்ட பின்னர் வெளிநாட்டு இராஜதந்திரிகள் இலங்கை வரும் போது அவர்களுக்கு வெளிவிவகார அமைச்சால் வழங்கப்படும் விருந்து உபசாரத்திலும் அப்பம் இடம்பிடித்திருக்கும். இதனால், இதுதான் இலங்கை அரசின் முட்டை அப்பம் இராஜதந்திரம் என்றுகூட வர்ணிக்கப்பட்டது.

தற்போது இலங்கை அரசியலில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அன்று மஹிந்தவின் காலைவாரிய மைத்திரி இன்று அவருடன் சங்கமித்து, பிரதமர் பதவியையும் வழங்கியுள்ளார். மைத்திரியின் இந்த முடிவுக்கு ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். 'அப்பசேன' என்றும் விமர்சித்துவருகின்றனர்.

அதுமட்டுமல்ல முட்டை அப்பம் விவகாரத்தை தொடர்புபடுத்தி பலகோணங்களில் கருத்துகள் வெளியிடப்படுவதால் கொழும்பு அரசியல் களத்தில் முட்டை அப்பம் மீண்டும் ஹிட்டாகியுள்ளது. ■

## வேட்டையை ஆரம்பித்தார் தொண்டா
## விழிபிதுங்கி நிற்கும் திகா அணி



மலையக அரசியல் களத்தில் தொண்டமானும், திகாம்பரமும் கீரியும், பாம்புமாகவே வலம்வருகின்றனர். கீரியும், பாம்பும் சங்கமித்தால்கூட இவர்கள் இருவரும் இணைய வாய்ப்பே இல்லை என கூறும்வகையில்தான் சம்பவங்கள் அரங்கேறிவருகின்றன.

ஆட்சிமாற்றம் ஏற்பட்ட கையோடு தொண்டமானுக்கு அமைச்சுப் பதவியை வழங்கி அழகுப்படுத்தி பார்த்துள்ளார் மஹிந்த ராஜபக்ச. ஜனாதிபதித் தேர்தலின்போது தொண்டா காட்டிய விசுவாசத்துக்குப் பரிசாகவே இப்பதவி வழங்கப்பட்டது. அதுவும் திகா வகித்த அதே அமைச்சு தொண்டாவுக்கு வாரி வழங்கப்பட்டுள்ளது. இதனால், விழிபிதுங்கி நிற்கிறது திகா அணி.

எம்.பியாக இருந்தபோதே - உள்ளாட்சித் தேர்தல் வெற்றியின் பின்னர் அதிரடி காட்டிய தொண்டாவும், அவரது சகாக்களும், தற்போது அதிகாரத்துக்கு வந்துள்ள நிலையில் என்னென்ன வெல்லாம் செய்வார்களோ என்ற அச்சம் மேலோங்கியுள்ளது.

இதை உறுதிப்படுத்தும் வகையில், அமைச்சராக பதவியேற்ற கையோடு, ஹட்டனிலுள்ள தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்துக்கு சென்ற தொண்டா, முகாமையாளரையும், ஏனைய சில ஊழியர்களையும் அதிரடியாகப் பணிநீக்கம் செய்துள்ளார்.

திகாவுக்கு விசுவாசமாக செயற்பட்டவர்கள் என்பதால் அவர்களின் பைல்களை இரவோடிரவாக எடுத்துசென்று - பழிவாங்கும் அரசியலை வெற்றிகரமாக அரங்கேற்றியுள்ளார் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டிவருகின்றனர்.

அதுமட்டுமல்ல திகா அமைச்சராக இருந்தபோது வீடமைப்புத் திட்டத்தில் மோசடி இடம் பெற்றுள்ளதாக குறிப்பிட்டு, விசாரணைக்குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஆட்சிமாற்றம் ஏற்பட முன்னர் தொண்டாவை கடுமையாக விமர்சித்து வந்த திகாம்பரம், தற்போது மௌனம் காத்துவருகின்றார். திகாவின் மௌனம்கூட அரசியல் இராஜதந்திரம் என அவரது விசுவாசிகள் சுட்டிக்காட்டிக்கின்றனர். ■

## கதை- திரைக்கதை.. வசனம்
## பஸில் ராஜபக்ச



இலங்கை அரசியலில் கடந்த சில வாரங்களில் வரும் எதிர்பாராத வகையில் இரவோடிரவாக ஆட்சிமாற்றம் இடம் பெற்று, பிரதமர் பதவியிலிருந்து ரணில் தூக்கப்பட்டார். நல்லாட்சியின் அமைச்சரவையும் மாற்றப்பட்டது. பின்னர் கடந்த வாரம் நாடாளுமன்றமும் கலைக்கப்பட்டது; ஊடகங்களில் தகவல் கசிந்தால், ஐக்கிய தேசியக்கட்சி உஷாராகிவிடும் என்பதால், இறுதிவரை இரகசியம் காக்கப்பட்டது.

நல்லாட்சியைக் கவிழ்ப்பதற்குரிய சமர் திடீரென ஆரம்பமானதொன்றல்ல. இற்றைக்கு மூன்றாண்டுகளுக்கு முன்னரே நடவடிக்கை ஆரம்பமாகியிருந்தாலும் அவை கைகூடவில்லை. இதனால், களைத்துபோன மஹிந்த அணி வியூகம் வகுக்கும் பொறுப்பை பஸிலிடம் கையளிக்க முடிவெடுத்தது.

உள்ளாட்சித் தேர்தலில் பொதுஜன பெரமுனவை வெற்றிப்பாதை நோக்கி அழைத்துச்செல்வதில் பஸிலின் வகிபாகமே முக்கிய இடத்தை வகித்தது. எனினும், கட்சிக்குள் அவருக்கு உரிய கௌரவம் கிடைக்கவில்லை. இதனால், அமெரிக்காவுக்குப் பறந்தார்.

மஹிந்தவிடமிருந்து தொலைபேசி அழைப்பு சென்றதும், உடனேயே நாடு திரும்பி, ஆட்சிமாற்றத்துக்குரிய நடவடிக்கைகளை நிதானமாகக் கையாண்டார். மிகவும் இரகசியமான முறையில் ஒரு சில எம்.பிக்களின் உதவியுடன் பேரம் பேசும் படலத்தை முன்னெடுத்தார்.

ஆரம்பத்தில் பஸிலின் டீலுக்கு அரசியல்வாதிகள் உடன்படவில்லை. எனினும், எதிர்காலத்தில் நடக்க இருப்பவற்றை ஆதாரபூர்வமாக நிரூபித்தமையால் மனம்மாறவேண்டிய சூழ்நிலை அவர்களுக்கு ஏற்பட்டது. இறுதியில் 113 பேரின் ஆதரவை திரட்டமுடியும் என்ற நிலை உருவானதையடுத்தே அவசரஅவசரமாகக் கொழும்பு அரசியலில் மாற்றங்கள் இடம்பெற்றன. ஆனால், அந்தக் கணிப்பு தவறாகியதை உணர்ந்ததாலேயே பஸிலின் ஆலோசனைப்படி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. ■

# தண்ணீர்! தண்ணீர்!! தண்ணீர்!!!



● வேதநாயகம் தபேந்திரன்



“அம்மா சாப்பிட்டிட்டன் குடிக்கத் தண்ணீர் தாங்கோ” தாய் குடத்தைப் பார்த்தார். ஒரு சொட்டுத் தண்ணீரையும் காண வில்லை. தம்பி தண்ணீர் சமையலுக்கு எடுத்து முழுக்க முடிஞ்சுது. அம்மம்மா வீட்ட போய் எடுத்துப் போட்டு உடன வாறன் என்றபடி வீதியைக் கடந்து எதிரே உள்ள தனது தாய் வீட்டிற்குப் போனார்.

ஒரு செம்பு நிறையத் தண்ணீரை எடுத்துக் கொண்டு பன்னிரெண்டரைப் பள்ளிக்கூடம் முடிந்து வந்த எனது பிள்ளை ஒன்றரைக்குத் திரும்ப பள்ளிக்கூடம் போக வேண்டுமேயென ஓட்டமும் நடையுமாக வந்தார்.

சாப்பிட்ட களைக்குத் தண்ணீரைக் குடித்து விட்டு ஓட்டமும் நடையுமாக மூன்றாம் வகுப்பில் படிக்கும் அந்தச் சின்னஞ் சிறு மாணவன் பாடசாலை சென்றான்.

உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்கிறார்கள். ஆனால் உப்புத் தண்ணீர் மண்ணில் வாழ்ந்து பார்த்தவர்களுக்குத் தான் அதன் வேதனை தெரியும்.

அதிகாலை 5 மணிக்கு தண்ணீர் பைப் படிக்குப் போய் தண்ணீர் ஏந்த வேண்டும்.

அதற்கு உள்ள முறைப்படி காவல் காக்க வேண்டும். தண்ணீரை ஏந்தி வந்து படு சிக்கனமாகப் பாவிக்க வேண்டும். திடீரென தண்ணீர் முடிந்தால் பாடு பெரும்பாடு தான்.. பின்னர் மாலை வேளையிலும் தண்ணீர் எடுப்பதற்கான போராட்டம்.

இருபத்தோராம் நூற்றாண்டு தண்ணீருக்கான போராட்டமும், போரும் உள்ள நூற்றாண்டாக இருக்குமென எதிர்வு கூறி உள்ளனர்.

எமது நாட்டில் வருடாந்த சராசரி மழைவீழ்ச்சி 1200 மில்லி மீற்றர்.

அவுஸ்திரேலியாவின் சராசரி மழை வீழ்ச்சி 600 மில்லி மீற்றர் எனக் கணிப்புகள் சொல்கின்றமை இதில் உள்ள விசித்திரம் என்னவென்றால் இலங்கையில் வருடா வருடம் வறட்சி ஏற்படுகிறது. மழை பெய்யத் தொடங்கும் காலத்தில் வறட்சி நிவாரணம் வழங்கப்பட ஆரம்பிப்பது அதை விட விசித்திரம்.

ஆனால் அவுஸ்திரேலியாவில் வறட்சி பதிவு செய்யப்படுவது மிக அரிது. வறண்ட கற்பாறைகள் நிறைந்த பூமி. 180 மில்லிமீற்றர் சராசரி மழைவீழ்ச்சி என்கிறார்கள்.

உலகில் சிறந்த நீர்வள முகாமைத்துவத்துக்குப் பேர் போன நாடாக இஸ்ரேல் நாட்டைத் தான் கூறுகிறார்கள். ஒரு துளி நீரையும் கடலுக்குள் செல்ல விடாமல் தேக்கி வைத்துப் பாதுகாக்கின்றனர்.

கடல்நீரை நன்னீராக்கும் இயந்திரத்தை உருவாக்கி கடல் நீரை நன்னீராக்கித் தமது முழுத் தேவைகளையும் நிறைவு செய்கின்றனர்.

அயல்நாடான ஜோர்தானுக்குத் தண்ணீரை ஏற்றுமதி செய்து பணம் உழைக்கின்றனர்.

ஆனால் எமது நாட்டை எடுத்துப் பார்ப்போமாயின் பருவமழை பொழியும் காலங்களில் ஏராளமான மழை நீர் கடலுக்குள் சென்று கலக்கிறது.

பெரும் குளங்கள் நீர்த் தேக்கங்கள் வான் பாய விடப்பட்டு அவையும் கடலுக்குள் சென்று கலக்கின்றன. பெய்யும் மழையில் குளங்களில், நீர்த் தேக்கங்களில் தேங்கியது போக பல மடங்கு தண்ணீர் கடலுக்குள் வீணாகச் சென்று கலக்கிறது.

நீர்வள முகாமையில் நாம் மிகவும் பின் தங்கித் தான் உள்ளோம்.

அரசாங்கத்தை மட்டும் குறைகூறிப் பயனில்லை. பொது மக்களாகிய எமது சமூகப் பொறுப்புணர்வும் மிகவும் தாழ்ந்த மட்டத்தில் தான் இருப்பது கவலைக்குரியது.

பொருளாதார அபிவிருத்தி எனக் கருதி கட்டடங்களை உருவாக்குவதும் வாழ்க்கைத்

தரத்தை உயர்த்துவதும் மட்டும் நாட்டுக்கு ஏற்றதல்ல.

செய்யப்பட்ட அபிவிருத்திகளை ஏற்றிப்போற்றி அவற்றைப் பாதுகாக்கின்ற சமூகம் ஒன்றே நாட்டுக்கு மிகவும் அவசியமானதாகும்.

நாம் இலங்கையர் எமது நாடு இலங்கை எனும் விடயத்தில் எம்மில் பலர் பின்தங்கித் தான் போய் விட்டனர்.

தனியே இன ரீதியான குறுந்தேசியம் கதைப்பதுடன் எமது நாட்டுப் பற்று நின்று போகிறது.

யாழ் குடாநாட்டிற்கு நன்னீர் தேவை. அதனை இரணைமடுவிலிருந்து கொண்டு வருவதா?

அல்லது வடமராட்சி கிழக்கலிருந்து கொண்டு வருவதா?

என விவாதங்கள் தொடர்கின்றது. வான் மழை பொய்த்துப் போய் கிளிநொச்சி விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்படும் நிலை அடிக்கடி வருகிறது.

இதனால் இரணைமடு தண்ணீர் என்பது கனவாகத்தான் உள்ளது.

அதே வேளை தண்ணீர் தட்டுப்பாட்டிற்குத் தீர்வாக குழாய் கிணறுகளை அடிப்பது வரைமுறையின்றி நடக்கிறது.

ஒரு கிணற்றில் நீரிறைக்கும் இயந்திரத்தை இணைத்து விட்டு தண்ணீரை இறைத்துப் பாருங்கள் இரண்டு, அல்லது மூன்று நான்கு மணித்தியாலங்களில் முழுத் தண்ணீரும் வற்றிப் போய் விடும்.

குழாய்க் கிணறு ஒன்றுடன் நீரிறைக்கும் இயந்திரம் ஒன்றைப் பொருத்தி நீரைஇறைத்துப் பாருங்கள்.

ஒரு நாள் அல்ல இரண்டு நாளும் விடாமல் தண்ணீரை இறைக்கலாம். நீரிறைக்கும் இயந்திரம் பழுதாகிப் போனால் ஒழிய தண்ணீர் இறைப்பதை நிறுத்தத் தேவையில்லை.

ஆனால் கட்டுக் கிணற்றில் இப்படி இறைக்க முடியாது. குழாய்க் கிணற்றில் தண்ணீர் வற்றாமல் இறைப்பதன் காரணம் குழாய் ஆழ்துளை நீரோட்டத்தில் இருப்பதனாலாகும்.

அதனால் தண்ணீரை விடாமல் இறைக்கலாம். அதன் கருத்து நீரோட்டத்தில் உள்ள தண்ணீரை குழாய் உறிஞ்சித் தருகிறது.

நிலக்கீழ் நீர் வற்றி அற்றுப் போவதற்குக் குழாய்க் கிணறுகள் பிரதான காரணத்தை வகிக்கின்றன.

ஒரு குழாய் கிணறு உள்ள இடத்தின் அயலில் பார்த்தால் நீர் மட்டம் வற்றியிருக்கும்.

அதிலிருந்து நிலக்கீழ் நீர் எவ்விதம் உறிஞ்சப்படுகிறது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

இந்திய தமிழகத்தில் குழாய்க் கிணறுகளை வகை தொகையற்று உருவாக்கியமையாலேயே அங்கு நிலக்கீழ் நீர் மிகவும் குறைந்த நிலையை அடைந்து பெரும் தண்ணீர்ப் பஞ்சம் வந்ததாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

அது போன்றதொரு நிலைமை எமது வடபகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வருமென எதிர்வு கூறி உள்ளனர்.

அரசாங்கத்தின் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அனுமதி எடுத்தே குழாய் கிணறுகளை அமைக்க முடியுமென அறிவுறுத்தியுள்ளது.

தத்துவங்கள் எல்லாமே சரி தான். ஆனால் நடைமுறை தான் ஒத்துவர வில்லை.

ஒன்றாக்க முடியவில்லையென்ற கதையாகத் தான் இதுவும் உள்ளது.

யாரும் கேட்டுக் கேள்வி இல்லாமல் குழாய்க் கிணறு அடிக்கலாமென்ற நிலை தான் உள்ளது.

சட்டத்தின் ஆட்சி பொதுமக்களிடம் சரியான முறையில்பிரயோகிக்கப்படவில்லை.

தண்ணீர் ஓர் அருமையான பொருள் என்ற உணர்வு இலங்கையர்களில் பெரும் பாலானோரிடம் கட்டி எழுப்பப்படவில்லை.

பொது இடங்களில் தண்ணீரை பொது மக்கள் விரயமாக்கும் நிலைமையைப் பார்த்தால் தெரியும் சமூகப் பொறுப்புணர்வு என்ன மட்டத்தில் உள்ளதென. அண்மையில் சில மாதங்களுக்கு முன்பாகத் திருகோணமலையின் தம்பலகாமம் சென்றிருந்தேன். அங்குள்ள வயல்கள் யாவும் சிறுபோக வேளாண்மை செய்யப்பட்டு நெற்கதிர்கள் அழகாக தலைவிரித்தாடின.

ஊர்மக்களைக் கேட்டேன். இங்கு முன்பு சிறு போகத்தில் அரைவாசி வயல்களில் தானே வேளாண்மை செய்வார்கள். இப்போது எவ்வாறு சாத்தியமானது.”

கந்தளாய் குளத்திற்கு வேறு மாவட்டங்களின் குளங்களில் வான் பாயவிடப்படும் தண்ணீர் வரக் கூடியதாக வழி வாய்க்கால்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

அதனால் தண்ணீர் கந்தளாய் குளத்தில் நிறைந்திருக்கிறது. அதனால் எல்லா வயல்களுக்கும் தண்ணீர் தாராளமாகக் கொடுக்கிறார்கள்.

வட மாகாணத்தில் வேறு மாகாணங்களின் வான்பாயும் தண்ணீரை இரணைமடு அல்லது மன்னார் கட்டுரைக் குளத்திற்கு கொண்டு வரும் வழி உருவாக்க விட மாட்டீர்கள்.

ஏனென்றால் தண்ணீர் வரும் ஆற்றுப் பாதை யாவும் மத்திய அரசாங்கத்தின் ஆட்சியின் கீழ் போய் விடும். அது குடிசனப்பரம்பலை மாற்றியமைக்க வழிசமைத்து விடுமென விட மாட்டீர்கள்.’

அதனால் வடக்கிற்கான தண்ணீர் பஞ்சம் தொடரத்தான் போகிறது. எமக்கு கந்தளாய் குளமும் அதற்கு அப்பாலன பிரதேசங்களும் முழுமையான சிங்களப் பிரதேசங்களாகி விட்டது. அதனால் எமக்கு குடிசனப் பரம்பல் பிரச்சினையே இல்லை ” என்றார் அவர்.

தண்ணீர் ஓர் அரசியல் பொருளாக எமது நாட்டில் ஆகி விட்ட கொடுமையும் உள்ளது தான்.

எது எப்படியோ நீர் வளமுகாமைத்துவம் தொடர்பாக முன்பள்ளி மட்டத்திலிருந்தே மாணவர்களுக்குத் தொடர்ச்சியாகப் போதிக்க வேண்டிய நிலை வந்து விட்டது.

இஸ்ரேலிய யூதர்களைப் போல தண்ணீர் தொடர்பான விழிப்புணர்வு இலங்கையர்களுக்கு மிகவும் தேவையான ஒன்றாகி விட்டமை தான் காலம் தரும் கட்டாயச் செய்தி.

■

# நெஞ்சத்தில் நீதான்

● எஸ்.மல்லிகா

"ஐயோ! எங்கள் நாட்டின் வசந்தமெல்லாம் எங்கே?" என்று அலறுவது போல அந்தப் பெரிய வாகை மரம் இலைகளை உதிர்த்துக் காட்சியளித்தது. மேகக்கூட்டங்கள் எங்கோ அவசர வேலை இருப்பது போலச் சென்றுகொண்டிருந்தன. காதலர்கள் கைகோர்த்து மகிழ்வதைப் போல அருகருகே இருந்த தென்னை மரங்களின் ஓலைகள் தென்றலில் அசைந்தபடி பிணைவுபட்டன. இந்த இயற்கை அழகுகளுக்குத் தான் எத்தனை சக்தி என்று மனதுக்குள் நினைந்து, அவற்றை இரசித்தபடி மேல்மாடிச் சாளரம் அருகே நின்றுகொண்டிருந்தாள் ராஜி. அப்போது, 'ட்ரிங் ட்ரிங் ட்ரிங் ட்ரிங்' என்று தொலைபேசி சிணுங்கியது. ஓடிச்சென்று ரிசீவரை எடுத்தாள் அவள். "ஹலோ! வித்யா ஸ்பீங்க். ராஜி ப்ளீஸ்!?" என்றது எதிர்முனைக் குரல். "ஹாய் வித்தி, நான் ராஜி தான் பேசுறேன். எப்படி இருக்கிறாய்?" என்றதும், "ம், நலம். நான் அடுத்த மாசம் யாழ்ப்பாணம் வருவேன். உனக்கு என்ன கொண்டு வாறது?" தோழிகளின் அரட்டை நீண்டது. பேசி முடித்து தொலைபேசியை வைத்தாள் ராஜி.

"யார் போன்ல? நல்ல ஹப்பியா இருக்கிறாய்!" எனக்கேட்ட



படி கால்களில் சப்பாத்தை மாட்டிக்கொண்டிருந்தான் ரவி. "வித்யா பேசினாள். அடுத்த மாசம் இங்கு வாறாளாம். ஆமா, எங்கே வெளிக்கிடுறிங்க?" என்ற அவளின் கேள்விக்கு, "இண்டைக்கு ஒரு பேஷன்டுக்கு அவசர ஒப்ரேசன். நான் இரவு டியூட்டிக்கு போகனும்" என்றான் ரவி. அவனுக்கான இரவு உணவை கட்டிக்கொடுத்தாள் ராஜி. வழமை போன்று அவளுக்கு முத்தமிட்டுவிட்டு தனது காரில் புறப்பட்டான் ரவி. அருமை மகளான அர்ச்சனாவை அரவணைத்தபடி ரவியின் நினைவில் நனைந்துகொண்டிருந்தாள் ராஜி. ஏழைக் குடும்பத்தில் பிறந்த தன்னை, வாழ்க்கை ஏணியில் ஏற்றி அழகு பார்க்கும் ரவிக்கு நன்றி சொல்ல அவளிடம் ஏது வார்த்தை?

ரவி செய்த புண்ணியம் தான் ராஜி அவனுக்கு மனைவியாக வாய்த்தமை. அதேபோன்று, ராஜியின் பிரார்த்தனை தான் ரவி அவளுக்குக் கணவனாக வாய்த்தமை. தன் குடும்பம் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக இரவு பகல் பாராது ஓடியோடி உழைத்துக்கொண்டிருப்பவன் ரவி. ராஜி மீதும் பிள்ளை மீதும் அவன் உயிரையே வைத்திருக்கிறான். தன் கடமையைத் தாயைப் போல நேசிக்கிறான். நோயாளர்களுக்கு அவன் தான் கடவுள். அவன் செய்யும் சத்திரசிகிச்சைகள் எதுவும் இதுவரை பிழைத்ததில்லை. அந்தளவுக்கு அவன் ஒரு ராசியான அறுவைச் சிகிச்சை நிபுணர்!

யாழ். நகரின் பிரபல தனியார் வைத்தியசாலை வளாகத்திலுள்ள வாகனத் தரிப்பிடத்தில் ஓய்வெடுத்தது ரவியின் கார். புன்னகைத்தபடியே ஆண் சிங்கமென நடந்துவந்தான் ரவி. அவனருகே அன்றைய தினம் சத்திரசிகிச்சை செய்யப்படவேண்டியவரின் மனைவி அழுதவாறு வந்தாள். "டாக்டர், நீங்க தான் என் கடவுள். எப்படியாவது என் கணவரைக் காப்பாற்றித் தாருங்கள் ப்ளீஸ்... அவர் இப்போ மூச்செடுப்பதற்கே ரொம்பவும் சிரமப்படுவதாக நேர்ஸ் சொல்றாங்க. டாக்டர் ப்ளீஸ்! ..." அவள் அழக்கூடத் தெம்பற்ற நிலையிலிருந்தாள். அவளைப் பரிவுடன் நோக்கிய ரவி, "இதோ பாருங்க அம்மா, உங்க கணவனுக்கு ஒன்றுமே இல்லை. ஒரு சின்ன ஒப்ரேசன் தான். அது வெற்றிகரமாக முடிஞ்சிடும். நீங்க இரண்டு நாள்ல அவரை வீட்டுக்குக் கூட்டிட்டுப் போகலாம். கவலைப்படாதீங்க" என்று கூறிவிட்டு தன் கடமையைச் செய்யப் புறப்பட்டான்.

அவனுடன் இணைந்த மருத்துவர்களின் எட்டு மணிநேரப் போராட்டத்தின் பின்னர் அந்தப் பெண்ணின் கணவர் காப்பாற்றப்பட்டார். அவரது மூளையில் உறை நிலையில் இருந்த இரத்தக்கட்டி வெற்றிகரமாக அகற்றப்பட்டது. ரவியை எல்லோரும் பாராட்டினர். புன்னகையுடன் அந்தப் பாராட்டை உள்வாங்கிய ரவி, சத்திரசிகிச்சை அறையைவிட்டு வெளியே வந்ததும், அந்தப் பெண் கண்ணீரால் அவனுக்கு நன்றி கூறினாள். ஒருகணம் அவளைப் பார்த்த ரவி, "நீங்க உங்க கணவரைப் பார்க்கலாம்" என்று புன்னகை மாறாத முகத்துடன் கூறிவிட்டு விறு விறுவென நடந்து தனது அறைக்குள் நுழைந்து கைகளைக் கழுவினான். அப்போது அவனது அறைக்கதவைத் தட்டிவிட்டு, சூடான தேநீருடன் வந்தாள் தாதி. அவள் கொடுத்த அந்தப் பானத்தை அவன் சுவைத்துவிட்டு, மேசை மீது தலை சாய்த்தான். அதுவரை தண்டவாளமாய் இருந்த இமைகள், கண்களுடன் இணைந்தன. அவனது எண்ணப்பறவை கடந்த காலத்துக்குப் பறந்து சென்றது.

கவலைகள் ஏதுமற்ற கல்லூரிக் காலத்தில் அவன் வாழ்க்கையில் குறுக்கிட்டாள் அர்ச்சனா. கோடீஸ்வரர் தணிகாசலத்தின் ஒரே மகள் அவள். ரவியின் அழகில் மயங்கித் தன் இதயத்தை அவனிடம் பறிகொடுத்தாள். அவனைக் காதலிப்பதாகத் துணிச்சலுடன் சொன்னாள். ஆனால், அர்ச்சனாவின் காதலை ரவி ஏற்கவில்லை. ஏனென்றால், அவன் பரம ஏழை. அர்ச்சனாவின் குடும்பத்துக்கும் அவன் குடும்பத்துக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது. எனினும், அர்ச்சனா அவனை விடுவதாக இல்லை. பருந்திடமிருந்து தப்பிக்கப் போராடும் கோழிக்குஞ்சைப் போல அவள் காதலிடமிருந்து தன்னைக் காப்பாற்ற அவன் கடுமையாகப் போராடினான்.

கல்லூரி இறுதியாண்டுப் பரீட்சை முடிந்து பெறுபேறும் வந்துவிட்டது. ரவி முதல் மாணவனாகப் பரீட்சையில் தேறினான். சிறப்புப் புலமைப்பரிசில் மூலம் அவன் மருத்துவப் படிப்பினை மேற்கொள்ள யாழ். நகரிலிருந்து கொழும்புப் பல்கலைக்கழகம் சென்றான். அர்ச்சனாவும் அதே பல்கலைக்கழகத்தில் சட்டப் படிப்பினைத் தொடரப் புறப்பட்டாள். அதுமட்டுமல்ல, காலைச் சுற்றிய பாம்பாட்டம் அவனையே சுற்றிச் சுற்றி வந்தாள். அவளது மெய்யான அன்புக்கு அடிபணிந்தான் ரவி. அவள் காதலை ஏற்றுக்கொண்டான். நான்கு வருடங்கள் காற்றாய்ப் பறந்து, அவர்களுக்குப் பட்டமளிப்பு விழாவும் இடம்பெற்றது. இங்கும் முதல் மாணவனாக மிளிர்ந்தான் ரவி. தங்கப்பதக்கங்கள் அவன் கழுத்தில் ஜொலித்தமையால், பெருமை பெற்றன.

இந்த மகிழ்ச்சியான தருணத்தில் ரவியுடன் வந்து, தன் காதலைத் தந்தையிடம் கூறினாள் அர்ச்சனா. ரவியை ஏறிட்ட தணிகாசலம், "நீங்க இணுவில் கந்தசாமி கோவில் பின் வீதியில் வசிக்கும் அழகேசன் மகன் தானே?" என்று கேட்டதும், "ம்ம்ம்... என்னைத் தெரியுமா அங்கிள்?" என்று பதிலுக்கு அவன் கேட்டான். "ம், தெரியுமப்பா. சரி, எனக்கொரு அவசர வேலையுண்டு. இதுபற்றிப் பிறகு பேசுறேன்" என்று கூறிய தணிகாசலம், அர்ச்சனாவையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டார். அதன்பின் அர்ச்சனாவை அவனால் பார்க்க முடியவில்லை. பணத்திமிராலும் சாதி வெறியாலும் நிறைந்திருந்த தணிகாசலம், ரவியைத் தன் மகளுக்குத் திருமணம் செய்துகொடுக்கத் தயாராயில்லை.

ரவியின் திறமையை மெச்சிய மருத்துவ உலகம், அவனை லண்டனுக்கு அனுப்பி உயர் படிப்புப் படிக்க வைத்தது. அங்கும் முதல் மாணவனாகப் பிரகாசித்த ரவி, தன் காதல் காயங்களை மறக்கக் கடமையில் முழுக் கவனம் செலுத்தினான். படித்து முடித்து ஈராண்டுகள் அங்கு பணியாற்றிய அவன், இலங்கை திரும்பப்போவதாகக் கூறியதும் மருத்துவ நிபுணர்கள் தடுத்தனர். எனினும், அவன் தன் தாய் நாட்டுக்குத் திரும்புவதில் உறுதியாக இருந்தான். எல்லோரிடமும் விடைபெற்று அவன் விமானநிலையம் வரும் வழியில், தன் அருமைக் காதலி அர்ச்சனாவைச் சந்தித்தான். தந்தை மிரட்டி, லண்டனில் வதியும் பிரபல தொழிலதிபருக்குத் தன்னைத் திருமணம் செய்து கொடுத்துவிட்டதாகக் கண்ணீருடன் தன் கதையைக் கூறினாள் அவள். இதயத்தைக் கல்லாக்கிய ரவி, இலங்கை திரும்பினான். பெற்றோரின் வற்புறுத்தலின் பேரில் மைத்துனி முறையான ராஜியைத் திருமணம் செய்தான். இப்போது அவர்களின் அன்புப் பிணைப்பாக 2 வயதுடைய மகள் அர்ச்சனா இருக்கிறாள்.

ஆம்! ரவியின் காதலி வேறு யாருமல்ல. சற்றுமுன் அவன் அறுவைச் சிகிச்சை செய்த நோயாளியின் மனைவி தான் அவள். வாழ்க்கையில் யாரைக் காணக்கூடாது என்று நாம் நினைக்கிறோமோ– அவர்கள் திரும்பத் திரும்ப எமது வாழ்க்கையில் குறுக்கிட்டுக்கொண்டேயிருப்பார்கள் என்பது மாபெரும் உண்மை. இது ரவியின் வாழ்க்கையிலும் நடந்து கொண்டிருக்கிறது.

சோர்வை முறித்து எழுந்தான் ரவி. அவன் விழிகள் ஏனோ கசிந்தன. கைக்கடிகாரத்தைப் பார்த்தவன், அதிகாலை நான்கு மணி என்பதை அது காட்டவே, வீட்டுக்குப் புறப்பட்டான். அங்கே அவனை இன்முகத்துடன் வரவேற்றாள் ராஜி. ஆனால், வழமைக்கு மாறாக ரவி காணப்பட்டான். "என்னங்க, ஏன் ஒரு மாதிரியா இருக்கிறிங்க?" என்று கேட்டாள் ராஜி. "ஒன்றுமில்லை ராஜி. இன்று நான் ஒபரேசன் செய்த பேஷன்ட் இருக்கிறார் தானே, அவர் இன்னும் சொற்ப நாட்கள் தான் உயிருடன் இருப்பார். திடீரென்று மயக்கம் போட்டு விழுந்த அவரை கொஸ்பிட்டலுக்குக் கொண்டு வந்தனர். பொடி புல்லா செக்கப் செய்ததில், அவரது மூளையில் இரத்தக் கசிவு ஏற்பட்டுக் கட்டிகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு, அவை வெற்றிகரமாகவும் அகற்றப்பட்டன. ஆனால், இது நரம்பு சம்பந்தமான நோய். மீண்டும் அவருக்கு இதுபோன்று ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால், திரும்பத் திரும்பத் தலைபிரித்து ஒப்ரேசன் செய்வது அவரது உயிருக்கு ஆபத்து. பாவம், அவருக்குக் கொஞ்ச வயது தான்!" என்று கூறிவிட்டு பாத்றூமுக்குப் போனான். அந்த நாளும் விடிந்து முடிந்து, மாதம் ஒன்றும் மடிந்தது.

இன்று வியாழக்கிழமை. முன்னே சொன்னது போன்று ராஜியுடைய நண்பி வித்யா வெளிநாட்டிலிருந்து அவர்கள் வீட்டிற்கு வந்திருந்தாள். அவளது கணவன், மகள் சாம்பவி, ரவி, ராஜி, அர்ச்சனா எல்லோரும் அந்தப் பிரமாண்ட பங்களாவின் வரவேற்பறையில் மகிழ்ச்சி வெள்ளத்தில் நிறைந்திருந்தனர்.

அப்போது அங்கே, அர்ச்சனாவும் அவளது கணவனும், தந்தையும் ரவிக்கு நன்றி தெரிவிக்க மலர்க்கொத்து– சொக்லேட் பெட்டி சகிதம் வந்திருந்தனர். அர்ச்சனாவைக் கண்ட வித்யா, "ஏய்! எப்படி இருக்கிறாய்?" என்றவாறு ஓடோடிச் சென்று அவளைக் கட்டியணைத்தாள். ரவியின் அருகே அமர்ந்த தணிகாசலம், "ரவி, என் மகளின் மகிழ்ச்சியைக் குழி தோண்டிப் புதைத்தவன் நான். இப்போ நான் பழைய தணிகாசலம் இல்லை. பழசெல்லாத்தையும் மறந்திட்டன், என்னை மன்னிச்சிடுப்பா.." என்று கெஞ்சினார். பெருந்தன்மையுடன் அவரை நடத்திய ரவி, "அங்கிள், அதெல்லாம் இப்ப எதற்கு? வாழும் வரை ஹப்பியா இருக்கனும். எதற்கும் வருந்தக்கூடாது" என்று பெரிய வருத்தத்தை மனதுள் சுமந்தவாறு அவருக்கு ஆறுதலளித்தான். மாலை மயங்கும் வரை பேசிக்கொண்டிருந்த அவர்கள், அந்த பங்களாவிலிருந்து விடைபெற்றனர்.

பூரணச்சந்திரன் நிலவொளி பொழிந்துகொண்டிருந்தான். தோழியர் இருவரும் அரட்டையில் மகிழ்ந்திருந்தனர். இடையில், அர்ச்சனா– ரவி காதலைப் பற்றி உளறினாள் வித்யா. பதறிப்போன ராஜி, படுக்கையறையில் இதுபற்றி ரவியிடம் கேட்டாள். மௌனமாக இருந்த ரவியின் விழிகளில் கண்ணீர். "ஏன் அழுறீங்க? நான் ஏதாச்சும் தப்பா கேட்டிட்டனா? என்னை மன்னிச்சிடுங்க" என்று அழுதாள் ராஜி. அவளைக் கட்டியணைத்த ரவி, "இதோ பார் ராஜி, நான் அர்ச்சனாவைக் காதலித்தது உண்மை. அவளது தந்தையின் சாதித் தடிப்பும் அந்தஸ்தும் எங்களைப் பிரித்தது. இப்போ அவர் திருந்திவிட்டார். இருந்தும் என்ன பயன்? இன்னும் சொற்ப நாட்களில் அவரது ஒரே மகள் விதவையாகப் போகிறாள். வாழ வேண்டிய வயதில், வாழ்க்கையைத் தொலைக்கப்போகிறாள். அவளின் பரிதாப நிலையை எண்ணித்தான் கண் கலங்கிறேன். மற்றும்படி, என் நெஞ்சத்திலே நீதான் என்றும் நிறைந்திருக்கிறாய்" என்றான். அர்ச்சனாவின் மாங்கல்யம் நிலைக்க வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்தித்துக்கொண்டே ரவியை இறுக அணைத்தாள் ராஜி. அவனது இதயத் துடிப்பு அவளின் பெயரையே உச்சரித்துக்கொண்டிருந்து.




# பேரத்துக்கு பொருளே இல் கூட்டமை

02

● செந்தூரி

"பிரதியமைச்சர் வியாழேந்திரன் துரோகியா இல்லையா?" - "மைத்திரி ஏன் கூட்டமைப்பிடம் உப்பு வாங்கித் தின்றார்?" - "ஜனநாயக விரோதிகளுடன் தீபாவளிப் பண்டிகை கொண்டாடலாமா?" - "டக்ளஸ் அமைச்சராக இருக்கும் வடக்கு கிழக்கு அபிவிருத்தி செயலணிக்கு கூட்டமைப்பு எம்.பிக்கள் போனது எப்படி?" போன்றவை கேள்விகளாகவே இருக்க - அமையப்போகும் புதிய அரசுக்கு தமிழ்மக்களின் சார்பில் கூட்டமைப்பு நிபந்தனைகளாக விதித்திருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்ற பிரச்சனைகளின் இரண்டாம் பாகம் இவை.

வடக்கு - கிழக்கு மக்களின் தேவைகளும் அவற்றுக்கான முன்னுரிமைகளும் இருந்தபடியே இருக்க, கூட்டமைப்பின் நிறைவேற்றுக்குழு, ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணிக்கு நிபந்தனைகள் ஏதுமற்ற ஆதரவு வழங்குவதற்கு தீர்மானித்திருப்பது கவனிக்கத்தக்கது.

### போரின் இழப்புக்களுக்கான நிவாரணமும் - காணாமலாக்கப்பட்டோருக்கு பதிலும்

சர்வதேசச் சட்டங்கள் எவற்றுக்கும் அஞ்சாமல், தமிழினத்தின் மீதான இனவழிப்பை நிகழ்த்தியது சிங்களம்.

போர்க்காலத்தில் நிராயுதபாணிகளான மக்களின் பாதுகாப்புக்கான ஆகக்குறைந்த முன்னேற்பாடுகளையேனும் மேற்கொள்ளாமலேயே இறுதிப்போர் ஆட்சியாளர்களால் நெருக்கப்பட்டது.

இலங்கையரசின் பங்காளிகளாக சர்வதேசங்களுக்கும் கூட, மக்கள் பாதுகாப்பை விட - புலிகளின் அழிவு அதீதமாக தேவைப்பட்டதாகையால் இறுதிப்போரின் சாட்சிகளான சகல இழப்புக்களிலும் பங்குண்டு.

போருக்குப்பின்னான அடுத்தடுத்த வருடங்களில் ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமை பேரவையின் நடவடிக்கைகள் தீவிரம் பெற்று - இலங்கை மீதான போர்க்குற்றச் சாட்டுகளுக்கான வலுவான ஆதாரங்கள் கிடைத்திருந்த போதிலும் இலங்கை அரசின் நகர்வுகளுக்கு கால அவகாசம் கோரியதன் மூலம் த.தே.கூட்டமைப்பும் போரின் இழப்புக்களுக்கான நிவாரணத்துக்கும் தமிழர்களுக்கும் இடையிலான இடைவெளியை அதிகரிக்க உதவியிருந்தது.

உயிரிழப்பு - அங்கவீனம் - உடமையிழப்பு ஆகியனவற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான திட்டமான இழப்பீடுகளுக்கான வழிமுறைகளை ஏற்படுத்துவதில் இலங்கை அரசின் நடவடிக்கைகள் தமிழர் தரப்பின் ஆகக்குறைந்த தேவைகளையாவது பூர்த்திசெய்திருக்கவில்லை.

நிவாரணம் மட்டுமே வழங்கக்கூடிய இழப்புக்களை திருப்திப்படுத்துவதில் கூட தயக்கம் காட்டுகின்ற அரசிடம் காணாமலாக்கப்பட்டோருக்கான முழுமையான பொறுப்புக்கூறலை எதிர்பார்த்தல், வடிகட்டின முட்டாள்தனமென்று தெரிந்தும் சர்வதேசங்களிடம் பிணை நின்ற சக்திகளில் கூட்டமைப்பும் ஒன்று.

காணமாலாக்கப்பட்டோருக்கான போராட்டங்களில் ஏக்கத்தோடு கலந்துகொள்ளும் பெற்றோர் அல்லது உறவினர் யாவரினதும் கோரிக்கைகளில் முதன்மையானது: "எங்கள் பிள்ளைக்கு / கணவருக்கு என்ன ஆனதென்று சொல்லுங்கள்?" இறுதிப்போரின் கடைசி நாட்களில் சரணடைந்த மற்றும் கைதுசெய்யப்பட்ட போராளிகள், பொதுமக்கள் ஆகிய எத்தரப்பினரும் பால் / வயது பேதமின்றி அரசபடைகளின் மனிதப்பசிக்கு இரையாகினர். படையினரிடம் நேரடியாக கையளிக்கப்பட்டவர்கள் - உறவுகளின் கண்ணுக்கு முன்னால் சரணடைந்தவர்கள் - மதகுருக்களின் சாட்சியுடன் சரணடைந்தவர்கள் - சர்வதேச தொண்டியக்கங்களின் முன்னிலையில் சரணடைந்தவர்கள் - கைதுசெய்யப்பட்டிருப்பதற்கு சாட்சியாக புகைப்பட அத்தாட்சி உடையவர்கள் - இராணுவ ஆவணங்களில் கைதுசெய்யப்பட்ட போராளிகளாக பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் - ஓமந்தை சோதனைச் சாவடியில் சரணடைந்தவர்கள் - வவுனியாவில் தடுப்பு முகாமொன்றிலிருந்து அழைத்துச்செல்லப்பட்டவர்கள் போன்ற வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் வெவ்வேறு முறைகளிலும் அரசின் ஆயுதப்படைகளிடம் உயிருடன் கிடைத்தவர்கள் யாவருக்குமான அரசின் பதில் ஒன்றே - "எங்களுக்கு தெரியாது"

ஜனநாயக ஆட்சியில் இருப்பதாக மார்தட்டிக் கொள்ளும் சோஷலிசக் குடியரசு தேசமொன்று, தனது குடிமக்களிடம் இனபேதத்தை பாரபட்சப்படுத்துவதற்கான மிகப்பொருத்தமான உதாரணம் இதுவொன்றே!

வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் - இறுதிப்போரினால் பாதிக்கப்பட்ட இழப்பீடுகளுக்கு தகுதியான மக்களும் - காணாமலாக்கப்பட்டோருக்கான மீட்பு கோரிக்கைகளுடனான போராட்டங்களும், அங்கே கோரிக்கையுடையவர்களும் இக்கணம் வரை எஞ்சியிருக்கின்றனர்.

காணாமலாக்கப்பட்டோருக்கான பதில்கள் - போர்க்குற்ற விசாரணையில் ஐக்கியநாடுகள் மனிதவுரிமை பேரவையில் இலங்கையின் அரசபடையினரை சுலபமாக போட்டுக்கொடுக்குமென்பது, இவ்விடயங்களில் தொடர்புடைய சகல தரப்பினருக்கும் வெளிப்படை.

புலிகளும் - தமிழரும் வேறில்லை என்ற பௌத்த பேரினவாதத்தின் அடிப்படை சித்தாந்தம், பழிவாங்குமுணர்ச்சியாக வியாபித்து - போரில் உயிருடன் கிடைத்த எவர்மீதும் படுகொலை தண்டனையை விதிக்கும் கொடூரமான கொலைவெறியாக மாறியிருந்தது.

வெவ்வேறான தடுப்பு முகாம்களிலும் - சித்திரவதை கூடங்களிலும் - தற்போதும் தடுத்துவைக்கப்பட்டிருக்க சந்தேகிக்கப்படுகின்ற மறைவிடங்களில் பகுதிபகுதியாக படுகொலை செய்யப்பட்டோரே இவ்வகையில், அதிகமானோர்.

காணாமலாக்கப்பட்டோரின் பெற்றோர் - உறவினரின் கோரிக்கைகளுக்கு சாதகமான மிக அடிப்படை நகர்வொன்றை முன்னெடுத்தாலும் கூட, அரச படையினருக்கு எதிரான போர்க்குற்ற விசாரணைகளுக்காக வலுவான சாட்சியங்களை வெளிப்படுத்த வேண்டியிருக்குமென்கிற இக்கட்டுக்குள் இலங்கை அரசு சிக்கியிருக்கின்றது.

"சர்வதேச விசாரணைக்கு ஒருபோதும் இடமில்லை" என்றும் - "படையினரை காட்டிக்கொடுக்க மாட்டோம்" என்றும், பெரும்பான்மை சிங்கள மக்களிடம் சத்தியம் செய்துகொடுத்துவிட்டு ஆட்சியில் தொடர்கின்ற பேரினவாதிகள், எதிர்காலத்தின் ஏதோவொரு நாளில் போரின் இழப்புக்கள் யாவற்றிற்கும் பரிகாரம் செய்வார்களென்று த.தே.கூட்டமைப்பு நம்புவதும் - தான் சார்ந்திருக்கின்ற மக்களிடம் இலங்கை அரசை முன்னிறுத்தி நம்பிக்கை உறுதிமொழிகளை வழங்குவதும், அசல் அரசியல் வறுமையின் வெளிப்பாடுகளே!


நாடாளுமன்றம் கேள்விக்குறியாகியிருக்கின்றபோது, தன்னிடமுள்ள 16 நா.உறுப்பினர்களையும் வலுவான பேரம் பேசுதலுக்கான சக்தியாக்கி மக்களின் முன்னால் தமது கோரிக்கைகளை வெளிப்படுத்தி அதனடிப்படையில் த.தே.கூட்டமைப்பின் ஆதரவுநிலைய்ய பிரகடனப்படுத்தியிருந்தால் - அதுவே கெத்து.

### புலம்பெயர் மக்களின் நிதியுதவிகளை கையாளும் வடக்கு - கிழக்கு நிதியங்கள்

தேவையுடையோரும் - உதவுவதற்கு தயார்நிலையிலுள்ளோரும் வடக்கு கிழக்கினை சார்ந்தவர்களாக இருக்கின்ற போதிலும், அரசநிதிக்கொள்கைகள் காரணமாக வடக்கு கிழக்குக்கான எவ்வகையிலான நிதியத்தையும் அனுமதியளிக்காமல் இழுத்தடித்து வருகின்றது இலங்கை அரசு.

வழக்கமான அரச ஒதுக்கீடுகள் மாகாண ரீதியில் அல்லது அமைச்சுக்கள் ஊடாக மக்கள்தொகையில் அடிப்படையினை சுட்டியாக கொண்டு பங்கிடப்படுகின்றன.

தேவையின் அடிப்படையில் அல்லது முன்னுரிமை அடிப்படையில் அரச ஒதுக்கீடுகளை கையாளும் திட்டங்



# லையா ப்புக்கு?

கள் - இடர்கால முகாமைத்துவ உத்திகளில் மட்டுமே இதுவரை இடம்பெற்றுள்ளன.

2009 இல் முள்ளிவாய்க்காலில் முடிவுற்ற இனப்படு கொலைக்கான போர்த்திட்டங்களையோ - அதற்கு பின்னான மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளையோ, பேரிடராக வகைப்படுத்தி செயலாற்றவும் சிங்கள அர சின் குறுகிய மனப்பாங்கு இடமளித்திருக்கவில்லை.

மாறாக அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப் படும் நிதியீட்டங்களுக்கு மேலதிகமாக - தமிழ்மக்களுக் கான போருக்கு பின்னரான புனருத்தாரண இழப்பீட்டு வேலைத்திட்டங்களுக்கான புலம்பெயர் தமிழர்களின் கொடையீட்டங்களையாயினும் தாயகத்துக்குள் உள்ளீர்ப்ப தற்கான முயற்சிகளும் எவையும் மேற்கொள்ளப்பட்ட தில்லை.

அவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டமைக்காக வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் நிதியத்துக்கான கோரிக்கைகள் - இலங்கை அரசியலமைப்பை மேற்கோள் காட்டி முடக்கப்பட்டன. கடந்த வடக்கு மாகாணசபை ஆட்சிக்காலத்தில், மாகாணசபையின் நியாயாதிக்கங்க ளுக்கு உட்படும் செலவுகளுக்கான பொறுப்புக்கூறல் புள்ளியான மாகாண திறைசேரிக்கு ஊடாக நிதிவருகை களை பெற்று செலவிடுவதற்கான கோரிக்கைகளை முன் வைத்து வடக்கு மாகாண முதலமைச்சர் நிதியத்தை உரு வாக்குவதற்கான முன்மொழிவு சபையில் நிறைவேற்றப் பட்டு, அரசியலமைப்பின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப் பட்டிருந்தது.

ஜனாதிபதியின் நியமன அதிகாரியான ஆளுநரால் வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் நிதியத்துக்கான கோரிக்கையும் - வரைபு நகலும் சிபாரிசு செய்யப்படாமல் நிராகரிக்கப்பட்டது. முதலமைச்சர் நிதியமொன்றின் அனுமதியை தன்னிச்சையாக வழங்குவதற்கு மாகாண ஆளுநர் ஒருவர் அதிகாரமற்றவராகிய போதிலும், குறித்த கோரிக்கையின் நியாயப்பாடுகளை முன்வைத்து - முதல மைச்சர் நிதியத்தின் அனுமதியை பெற்றுக்கொடுப்பதற்கு, இலங்கையின் அதியுயர் சட்டவாட்சிமன்றமாகிய நாடாளு மன்றத்துக்கு இக்கோரிக்கையை முன்னளிப்பதற்கு கூட மனமொப்பவில்லை சிங்கள ஆட்சியாளர்களுக்கு. விளைவு: வடக்கின் முதலமைச்சர் நிதியத்தின் வரைபுகள் கிடப்பில் போடப்பட்டன.

மாகாண திறைசேரிகள் வெறுமனே மத்திய அரசி னால் குறித்தொதுக்கப்பட்டு வழங்கப்படும் பணத்தை கணக்குக்காட்டும் அப்பியாசக்கொப்பிகளாகவே பேணப்படு கின்றன. சுயாதீன நிதிமூலங்களை மாகாணத்துக்குள் வருமதியாக எடுத்து மக்களுக்கான பணிக்கு செலவிடு

**சிங்கள அரசுக்கு தமிழர்களின் தன்மானத்துடன் கூடிய புனர்வாழ்வில் அக்கறையில்லாதிருப்பது வாதத்துக்கு சரியென்றே வைத்துக்கொண்டாலும், தமிழ்த்தேசியத்தின் பிரதிநிதிகளும் கூட இதை வலியுறுத்தாதிருப்பதன் பின்னணியை என்ன பெயரிட்டு அழைக்க?**

வதற்கான கடிவாளத்தை ஆளுநர் மூலமாக இறுக்கி வைத்திருக்கின்றது, மத்திய அரசு. மாகாண திறைசேரிக்கு நேரடியாக வைப்பிடக்கூடிய கொடைப்பணங்களுக்கும் கட்டுப்பாடுகளுண்டு - மேற்படி நிதியதிகாரத்தில் மாகாண அரசொன்றுக்கு இருக்கும் இடர்பாடுகளை நீக் கும் முகமாக முதலமைச்சர் நிதியம் ஒன்று உருவாக்கப் படுவது, மக்களுக்கான பணிகளை இன்னமும் மேம் படுத்துவதோடு - வடக்கிலும் கிழக்கிலும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான துரித வாழ்வாதார மீட்பை நிகழ்த்தும் அற்புதத்தை செய்யக்கூடியது.

சிங்கள அரசுக்கு தமிழர்களின் தன்மானத்துடன் கூடிய புனர்வாழ்வில் அக்கறையில்லாதிருப்பது வாதத்துக்கு சரியென்றே வைத்துக்கொண்டாலும், தமிழ்த்தேசியத் தின் பிரதிநிதிகளும் கூட இதை வலியுறுத்தாதிருப்பதன் பின்னணியை என்ன பெயரிட்டு அழைக்க?

### ஒன்றிணைந்த வடக்கு-கிழக்கு மாகாண மீளிணைப்புக்கான நிகழ்ச்சிநிரல்

அரச ஒட்டுக்குழுவான ஈ.பி.டி.பி யின் அரசியல் நோக்கக்கூற்றின் இரண்டாம் பாதி அவர்களின் வாட கைத் திரையரங்க சுவற்றில் இன்னமும் எழுதியிருப்பதின் படி இங்ஙனமாகுமாம்: "என்றும் பிரிக்க முடியாத வடக்கு கிழக்கு தமிழர் தாயகம்".

மாகாணச் சட்டமூலத்துக்கு எதிராக வடக்கு மாகா ணம் வலிந்து கிழக்கிலிருந்து தனியாக்கப்பட்ட பின்ன ரும் முற்றிலும் தமிழ்த்தேசிய அரசியலுக்கு விரோதமான அரசஇணக்கத்தை நிலைப்பாடாக கொண்ட ஈ.பி.டி.பி தனது நோக்கக்கூற்றினை உத்தியோகபூர்வமாக இன்றள வும் மாற்றியிருக்கவில்லை.

ஆங்காங்கே எழுத்திலும், சுவரொட்டிகளிலும் கூட பிரிக்க முடியாத வடக்கு கிழக்கென்பதை இன்னமும் பிடித்து தொங்கிக்கொண்டேயிருக்கின்றார்கள், தோழர் கள்.

ஆனால், முற்றிலும் தமிழ்த்தேசிய மக்களின் ஆணையை நிறைவேற்றுவதாக கூறி வாக்கிறைஞ்சிய தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் எந்த நிகழ்ச்சிநிரலிலும், வடக்கு கிழக்கு இணைப்புக்கான உத்தேசச்சொல் ஒன்று கூட எழுந்து வந்ததில்லை.

வடக்கும் கிழக்கும் மரபுரீதியான மட்டுமல்லாமல் - இனமுதன்மையின் அடிப்படையிலும் இணைந்திருப்ப தன் மூலம் தமிழர் தரப்பு ஈட்டிக்கொள்ளக்கூடிய பல் வேறு பிராந்திய நலன்களையும், தேசிய விடுதலைக்கான ஒத்துணர்வையும் எப்போதும் தரவல்லன.

கிழக்கின் இன்னொரு சிறுபான்மையினரான முஸ்லிம் களின் அரசியல் உரிமைகள், ஆளும் சிங்களஅரசு வீசியெறி யும் சலுகைகளுக்கான அபிவிருத்தி பணிகளாக மட்டுப் படுத்தப்பட்ட பிறகு - வடக்கு கிழக்கின் இணைப்புக்கு எதிராக குரலெழுப்பும் தரப்புக்களில் முஸ்லிம்களும் இணைந்துகொண்டனர்.


கிழக்கு, வடக்கோடு இணைந்துகொள்வதனால் தமக் கான பெரும்பான்மை பறிபோகுமென்ற அச்சம், அவ் வினத்தவர்களிடையே பல்கிப்பரப்பப்படுகின்றது.

நிச்சயமாக - மொழிவழியாலும், கலாசார வழியா லும் தமிழினத்தின் வேர்களில் தொடர்புகளிருப்பவர் களான முஸ்லிம் மக்கள் வடக்கு-கிழக்கு இணைப்பு விடயத்தில் பேரினவாதிகளின் பிரித்தாளும் நிகழ்ச்சி நிரலுக்குள் சிக்கியிருப்பது, தேவைக்குரிய இரு இனங்களுக் கும் ஆபத்தானதே.

மதவழியான தனி மாகாண அலகொன்றை, சிங்கள அரசிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியுமென்ற நம்பிக் கையின் வழி நடந்து, வடக்கு கிழக்கு இணைப்புக்கெதி ராக முடிவெடுக்கும் முஸ்லிம் மக்கள் கடந்தகாலங்களின் கசப்பிலிருந்தும் பாடங்களெதையும் கற்கமுடியாதிருப் பது துர்ப்பாக்கியமே!

தமிழீழ விடுதலைப்போராட்டத்துக்கு எதிராக முஸ் லிம் மக்களை கொம்புசீவி விட்டு தனக்கான அதீத நன்மை களை பெற்று வெற்றியடைந்த பௌத்த-சிங்களம், தனக் கான தேவையேற்படும் போதெல்லாம் பயன்படுத்தி தூ க்கிவீசும்கறிவேப்பிலையாக முஸ்லீம்சமூகத்தை பயன்படுத்து வதையிட்டு அவர்களுக்கான மக்கள் பிரதிநிதிகளும் அலட் டிக்கொள்வதாயில்லை.

மறுவளமாக : வடக்கு - கிழக்கு இணைப்புத்தேவை, தமிழ்த்தேசியத்தின் உயிர்நாடியென்பது தெரிந்திருந்தும் - மொழிவழியாக இணைப்பிலிருக்கும் முஸ்லிம் சகோ தரர்களுடனும் - அவர்களின் பிரதிநிதிகளுடனும், அரசி யல் சார்ந்தும் - கலாசாரம் சார்ந்தும் - மரபுகளை சார்ந் தும் பேசி கலந்துரையாடி பொருத்தமான தெளிவுபடுத்தல் களுடன் இரு தரப்பும் இணைந்து மாகாண இணைப்பை வலியுறுத்தியிருக்க வேண்டிய அவசியமிருக்கின்ற தமி ழர் பிரதிநிதிகளின் இக்கணம் வரைக்குமான பேரமைதி, காலக்கொடுமைகளில் முதன்மையானது.




# திரிக்கப்படும் யாழ். இந்துவின் வரலாறு

■ தில்லைநாதன் கோபிநாத்

## 125ஆவது ஆண்டு நிறைவு மலரை முன்வைத்துச் சில குறிப்புகள்


மூன்றாவது சின்னம் கல்லூரியின் உத்தியோகப்பற்றற்ற ஒரு சின்னம். இதனைக் கல்லூரியின் மாற்று வரலாற்றுச் சின்னம் (alternative history) எனலாம். கல்லூரி தொடங்கப்பட்டது 1890இல் அல்ல 1887இல் என வலியுறுத்தும் இச்சின்னம் கல்லூரியின் வரலாற்றில் மிக முக்கியமானது. (இதனைப் பின்னர் விரிவாகப் பார்ப்போம்) கல்லூரியின் ஆவண்ங்களில் பயன்படுத்தப்படாத போதும் குமார சுவாமி மண்டபத்தில் இது காணப்பட்டது. நிறத்தில் அமைந்ததாலோ என்னவோ இணையத்தில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு பயன்படுத்துவோருக்கு இச்சின்னம் கூறும் வரலாறு தெரிந்திருக்கிறதோ தெரியவில்லை. இச்சின்னம் எப்போது பயன்பாட்டுக்கு வந்தது என்பதும் தெரியவில்லை. கல்லூரியின் நூற்றாண்டுவிழாக் காலத்துக்கு முன்னரேயே பயன்பாட்டுக்கு வந்ததென ஊகிக்க முடிகிறது.

நான்காவது சின்னம் 2014 அளவில் இணையத்தில் பயன்பாட்டுக்கு வந்தது. படிப்படியாகக் கல்லூரியின் உத்தியோகபூர்வ ஆவணங்களிலும் நுழைந்து இப்பொழுது உத்தியோகபூர்வச் சின்னமாகவே பயன்படுகிறது. கல்லூரியின் மரபுரிமைக்கு எதிரானதும் பிழையானதுமான புதிய சின்னம் இதுவாகும். அத்துடன் இந்த நான்காவது சின்னத்தை அடிப்படையாகக் கொண்டு வேறு சின்னங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த நான்கு சின்னங்களில் உண்மையான உத்தியோகபூர்வமான சின்னம் இரண்டாவதாகும். பிழையான புதிய சின்னம் நான்காவதாகும். இந்தப் பிழையான புதிய சின்னமே கல்லூரியின் உத்தியோகபூர்வ மடற்தலைப்பிலும் தற்போது பயன்படுகிறது. இந்தப் பிழையான சின்னம் 125ஆவது ஆண்டுமலருக்கு முன்பேயே இணையப் பாவனைக்கு வந்தபோதும் அதனைப் பொதுப் பயன்பாட்டுக்குக் கொண்டுவந்ததில் 125ஆவது ஆண்டு மலருக்கு முக்கிய பங்குண்டு.

> இது தகவல் யுகம் என்று கூறப்பட்டாலும் மென்மேலும் வரலாறு திரிக்கப்படும் காலத்தில் வாழ்கிறோம். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வரலாறு என்பது வெறுமனே அக்கல்லூரியின் வரலாறு அல்ல. அது ஒரு சமூகத்தின் வரலாற்றின் ஒரு பகுதி ஓர் இனத்தின் வரலாற்றிலும் குறிப்பிட வேண்டிய ஒன்று. அது திரிக்கப்பட்டுத் தொடரக்கூடாது.

நான்கு நாள் விழாக் கொண்டாடித் தமக்கு வேண்டிய அரசியல்வாதிகளையும் பிரபலங்களையும் மேடையேற்றுவதில் காட்டிய அக்கறையில் ஒரு சிறு பகுதியையேனும் கல்லூரியின் வரலாற்றிலும் மரபுரிமையிலும் இந்துக்கல்லூரிச் சமூகம் காட்டியிருந்தால் 2015இலேயே இப்பிழை திருத்தப்பட்டிருக்கும். 125ஆவது ஆண்டுவிழா என்பது கல்லூரியின் வரலாறு தொடர்பானதென்ற பிரக்ஞை சிறிதளவேனும் இல்லாமல் விழா முன்னெடுக்கப்பட்டு மலர் தொகுக்கப்பட்டதென்பதற்கான சான்று முதற் பக்கத்திலேயே ஆரம்பிக்கிறது. முகநூலிலும் மடற்தலைப்பிலும் சின்னத்தைத் திருத்திவிட்டுப் போகலாம். ஆனால் முக்கிய ஆவணப்பதிவான 125ஆவது ஆண்டுமலரின் பிழையான சின்னம் பயன்படுத்தப்பட்டமை கல்லூரி வரலாற்றில் நிரந்தரமான களங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.




இந்துக்கல்லூரியின் சரியான சின்னத்தில் கலைமகள் நின்றிருக்கும் மலர் 7 குவிந்த இதழ்களும் 9 விரிந்த இதழ்களும் கொண்ட வெள்ளைத் தாமரை. “வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு வெள்ளைக் கமலத்தில்” வீற்று இருப்பவராகவே கலைமகள் குறிப்பிடப்படுகிறார். ஆனால் பயன்பாட்டிலுள்ள புதிய சின்னத்தில் கறுப்பு அல்லது நீல நிறமாகியிருக்கிறது தாமரை. “வெண்டாமரைக்கன்றி நின் பதம்” என ஆண்டுதோறும் நவராத்திரியில் பாடுகையில் பொருளுணர்ந்துதான் இந்துவின் மைந்தர்கள் பாடுகிறார்களா?

கலைமகள் கையில் வீணையை வீணை போலவா பிடித்திருக்கிறார்? “கலைபயில் கழக” மாணவர் எவருக்கும் வீணை எப்படி வாசிக்கப்படும் என்பதே தெரியாதா? தந்தி மீட்ட வேண்டிய வலதுகை மேலேபோய் துப்பாக்கியைக் காவிச்செல்வது போல பிடித்திருக்கிறது. வீணையானது வீணை போலவே தெரியவில்லை. முந்தைய சின்னங்களில் வீணையிலிருந்த சுரைக்காயைக் காணவில்லை. வீணை கிற்றரர் போலிருக்கிறது. கல்லூரியின் கலை கைநழுவிப் போனதாக மறைமுகமாகக் குறிப்பிடுகிறாரா புதிய கலைமகள்?

வெள்ளை நிறமாயிருந்த வெள்ளை மேற்சட்டையும் கறுப்பாகியிருக்கிறது. சரசுவதியை யாரும் கண்டதில்லை. இராஜா இரவிவர்மாவின் ஓவியத்தின் அடிப்படையில்தான் கல்லூரியின் முதற்சின்னம் உருவாக்கப்பட்டது என்பதால் இந்த மாற்றம் பாரதூரமானதல்ல. இராஜா இரவிவர்மாவின் ஓவியத்தில் கலைமகள் சிவப்புநிற மேற்சட்டை அணிந்திருக்கிறார். கல்லூரியின் மாற்று வரலாற்றுச் சின்னத்திலும் கலைமகள் சிவப்பு மேற்சட்டை அணிந்திருக்கிறார் என்பதால் இம்மாற்றத்தை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் ஒரு நிறுவனச் சின்னம் என்பது நேரத்துக்கு நேரம் மாற்றும் ஒன்றல்ல.

புதிய சின்னத்தில் கலைமகள் கையிலிருந்த செபமாலை அல்லது உருத்திராட்ச மாலை கைநழுவிப் போய்விட்டது. மாலை கைநழுவி விட்டதால் அவசரமாகக் கையில் கிடைத்த தாமரை மொட்டினை ஏந்தியிருக்கிறார் கலைமகள். இந்த மாலைக்கெல்லாம் இந்து சமயத்தில் விளக்கங்கள் உள்ளன. இந்துக் கல்லூரி எனப் பெயர் சூட்டப்பட்டாலும் கல்லூரி வளர்த்தெடுக்கப்பட்டது சைவத்தை முதன்மைப்படுத்தியே. அவ்வகையில் சரசுவதி கையிலிருப்பது மாலையென்பது எமக்குத் தெரியாதிருப்பது வியப்பானதல்ல. இந்து சமயம் பற்றிய அக்கறையின்மையால் மாலை இருந்தாலென்ன மொட்டு இருந்தாலென்ன என்று நினைத்திருக்கலாம். அத்துடன் கல்லுரியின் உண்மையான சின்னத்தில் மாலை தெளிவாகத் தெரிவதில்லை என்பதால் இத்தவறு மன்னிக்கக் கூடியது.

ஆனால் மன்னிக்கவே முடியாத மாற்றம் சரசுவதி கையிலிருந்த சுவடிக்கட்டுக் காணாமற் போனமை. கல்விக்காக உருவாக்கப்பட்ட ஒரு நிறுவனத்தின் அந்தக் "கல்விக்கான தெய்வத்தினை முதன்மைப்படுத்தி உருவாக்கப்பட்ட சின்னத்தில் அத்தெய்வத்தின் கையில் கல்வியைக் குறிப்பதாக இருந்த சுவடிக்கட்டுக் காணாமற் போயிருக்கிறது. கல்வி கைநழுவிப்போய் வெறுங்கையுடன் நிற்கிறார் கலைமகள்.

125 ஆண்டுகளாகக் கையில் சுவடியேந்திக் கல்வி வழங்கிய தாயின் கையிலிருந்த சுவடி நழுவியதைக் கூட எவரும் கவனிக்க முடியவில்லை என்றால் கல்லூரிச் சமூகம் கல்லூரியின் வரலாறு, மரபுரிமை தொடர்பாகக் எத்தகைய அக்கறையைக் கொண்டிருக்கிறது என்பது தெளிவாகிறது. இந்துவின் மைந்தர் எனத் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் ஒவ்வொருவரும் வெட்கித் தலைகுனிய வேண்டும்.



■ எஸ்.சத்தியன்




# இலங்கைத் தமிழ்ச் சூழலின் வரலாறும் புரிதலும்

தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் நிலைமைகள் வரலாறு பற்றிய இப் போக்கையும் நம்பிக்கையும் வலுப்படுத்துமாறு அமைந்தன. சிங்கள பௌத்த பேரினவாத முனைப்பில் இலங்கையின் வரலாறு மேலும் மேலும் மாறுகையில் அதனை எதிர்த்துத் தமிழ் இன உணர்வு நிலையில் வரலாற்றை எழுதுமாறு தமிழ் வரலாற்று எழுத்துக்கள் மாறின. தமிழில் எழுதப்பட்ட வரலாறுகளிற் பெரும்பாலும் அனைத்துமே மேற்குறிப்பிட்ட போக்கிலிருந்து விலகவில்லை.

தமிழில் பேராசிரியர். கா.இந்திரபாலா, பேராசிரியர்.சி.பத்மநாதனையும், பேராசிரியர். ஆ.வேலுப்பிள்ளை, பேராசிரியர். சி.அரசரெத்தினம் சிங்களத்தில் பேராசிரியர். லெஸ்லி குணவர்தன, பேராசிரியர். சிரிவீர, பேராசிரியர். சுதர்ஷன் செனவிரத்ன போன்ற வரலாற்றாசிரியர்களின் எழுத்துக்கள் இலங்கையின் வரலாற்றை நேர்செய்ய முயன்றபோதிலும் தமிழ்ச் சமூகத்தின் அக்கறை அவற்றின்பாற் செல்லவில்லை. தமிழர் மத்தியில் இருந்த தமிழ் இன அபிமான வரலாற்றுணர்வுகளில் தளர்வு ஏற்படவில்லை. ஆயினும் இன்றும் தரம் ஆறு தொடக்கம் வரலாற்றைக் கட்டாய பாடங்களில் ஒன்றாக, அது பொய்யான வரலாறு என்று ஆணித்தரமாக நம்பியவாறு, நாம் கற்கிறோம்.

-2-

தமிழ் வரலாற்று எழுத்துக்கள் இலங்கையின் தமிழ்ப் பாரம்பரியத்தைத் தேடுமாறு அமைந்தன

> **காக்கை வன்னியன் என்ற பெயரும் குலசேகரம் வைரமுத்து என்ற பெயரும் பண்டார வன்னியன் பற்றி முதலில் எழுதி மேடையேற்றிய நாடகத்தில் முல்லைமணி சேர்த்தவையே. ஆயினும் பண்டார வன்னியனின் வரலாற்றில் இவை முக்கிய இடம் பிடித்திருந்தன.**

என முன்பு குறிக்கப்பட்டது. அவை இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்களின் பாரம்பரியங்களைத் தேடுவனவாகவன்றிக் குறித்த பிராந்தியங்களை முதன்மைப்படுத்திய வரலாறுகளாகவே அமைந்தன. 1970களின் பிற்பகுதியில் எழுச்சிபெற்ற தமிழீழக் கனவின் பின் இலங்கையிற் தமிழ் வரலாறு என்பது ஆரியச் சக்கரவர்த்தி, சங்கிலியன் என்போரைச் சுற்றியதாகியது. 30 வருடங்களாக நிலவிய யுத்தச் சூழல் வடக்கு கிழக்கில் தொல்லியல் அகழாய்வுகளை அனுமதிக்கவில்லை. எனவே ஒரு சில வரலாற்றாதாரங்களை மட்டுமே தேடியறியக் கூடிய ஆராய்வுப் பரப்பிலிருந்து இவ் வரலாறுகள் கட்டப்பட்டன என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளை மையப்படுத்தியும் மட்டக்களப்பில் ஆடக சவுந்திரியை மையப்படுத்தியும் வரலாறுகள் கட்டமைக்கப்பட்டன. மேலும் நுணுகி நோக்கின் நல்லூரையும் திருக்கோவிலையும் கோணேஸ்வரத்தையும கேதீஸ்வரத்தையும் தாண்டி இலங்கையின் தமிழ் வரலாறுகள் அமையவில்லை. ஈழப் போராட்டத்தின் மையம் 1990களின் நடுப் பகுதியில் வன்னி நிலப்பரப்பிற்கு் மாறிய பின்னர் வன்னிப் பெருநிலத்தின் வன்னியர்களை இலங்கைத் தமிழ் வரலாறு சேர்த்துக் கொண்டது.

மன்னார்ப் பகுதியின் வரலாறோ யாழ்ப்பாணத்தின் கரையோரக் கிறிஸ்தவப் பகுதிகளின் வரலாறோ இன்றுவரை எமக்கு சரிவரத் தெரியாது. ஏறக்குறைய 500 வருடங்களுக்கு மேலான கிறிஸ்தவ வரலாறு கொண்ட இப் பகுதிகளின் வரலாறுகளின் முறையான எழுதல் இன்னமும் தொடங்கவில்லை. திருகோணமலையின் வரலாறும் கோணஸ்வரம் எனும் ஆலயத்திற்கப்பாற் போகவில்லை. கேதீஸ்வரம் போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டது என்பதற்கு மேலாக அக் கோயிலின் வரலாறு பற்றி நமக்கு எவ்வளவு தெரியும்?

வரலாற்றெழுத்தியல் பலவாறாக மாறியுள்ள போதும், அரசின் வரலாறு என்பதிலிருந்து சமூகத்தின் வரலாறாக வரலாறு விருத்தியடைந்துள்ள நிலையிலும் இலங்கையின் தமிழ் வரலாற்று எழுத்துக்கள் அரசர்களையும் அவர்கள் கட்டுவித்த கோயில்களையும் சுற்றியே அமைந்துள்ளன. ஆங்காங்கே எழுந்த வட்டார வரலாற்று நூல்கள் தலபுராணங்களாக ஒடுங்கிவிட்டன.

முரண்சுவையான சில வரலாற்றுப் புனைவுகளைச் சுட்டிக்காட்டல் பொருந்தும். பண்டார வன்னியனின் வரலாற்றோடு தொடர்புபட்ட இரு விடயங்கள்: காக்கை வன்னியனின் இயற்பெயர் குலசேகரம் வைரமுத்து பண்டார வன்னியன் ஆகும். காக்கை வன்னியன் கி.பி. 1620 இல் ஊர்காவற்றுரையில் வாழ்ந்து சங்கிலி மன்னனைக் காட்டிக்




கொடுத்த அவர், பண்டார வன்னியனின் காலத்திற்கு 175 ஆண்டுகள் முன்பு வாழ்ந்தவர். அவருக்கும் பண்டார வன்னியன் கால நிகழ்வுகட்கும் தொடர்பில்லை. அதே போற் பண்டார வன்னியனின் இயற்பெயர் குலசேகரம் வைரமுத்து அல்ல டொன் தியோகு புவிநல்ல மாப்பாண அழகேசன் பண்டார வன்னியன் என்பதே. அவன் ஒல்லாந்தரால் நிர்வாக வசதிக்காக ஆட்சியில் அமர்த்தப்பட்ட ஒல்லாந்த அரச குறுநிலப் பிரதிநிதி. காக்கை வன்னியன் என்ற பெயரும் குலசேகரம் வைரமுத்து என்ற பெயரும் பண்டார வன்னியன் பற்றி முதலில் எழுதி மேடையேற்றிய நாடகத்தில் முல்லைமணி சேர்த்தவையே. ஆயினும் பண்டார வன்னியனின் வரலாற்றில் இவை முக்கிய இடம் பிடித்திருந்தன.

இன்னொன்று, திருகோணமலைக்கும் இராவணனுக்குமான தொடர்பு. மரபார்ந்த கதைகளைத் தவிரத் திருஞானசம்பந்தரின் திருகோணமலைத் தேவாரப் பதிகத்தில் மட்டுமே இராவணன் திருகோணமலையுடன் சேர்த்துக் குறிப்பிடப்படுகிறான். சம்பந்தரின் திருகோணமலைப் பதிகத்தில் மட்டுமல்லாது சம்பந்தர் தேவாரங்களின் பொதுப்பண்புகளில் ஒன்றாகவே இராவணன் கயிலையைத் தூக்கிய கதை கூறப்படுகிறது. தவிர இராவணன் கயிலையைத் தூக்கிய கதையைக் கோணேஸ்வரத்தைப் பாடாத நாவுக்கரசரும் பாடியிருக்கிறார். சம்பந்தரின் பதிகங்கள் இராவணனைத் தமிழன், சிவபக்தன் என்ற உணர்வுடன் குறிக்கவில்லை. மாறாக “தூர்த்தன்” “மதியில் வலியுடை அரக்கன்” “அறம் அழிவு பெற உலகு தெறு புலவன்” “உன்மத்தன்” என்றே குறிக்கிறார். அப்பரும் அவ்வாறே குறிக்கிறார். சைவ-வைணவப் பகைச் சூழல் சார்ந்தும் இதனை நோக்கவேண்டும் என ஆய்வாளர் செல்வராசு குறிப்பிடுவது இங்கு கவனிக்கத்தக்கது. ஆயினும் கோணஸ்வரத்தினதும் திருகோணமலையினதும் வரலாற்றில் இராவணன் தொடர்ந்தும் ஏதோ ஒரு வகையில் எழுதப்படுகிறான்.

இறுதியாகக் கோணேஸ்வரத்தைக் குளக்கோட்டன் அமைத்தாக வரலாறுகள் கூறப்படுகின்றன. குளக்கோட்டன் யார் என்பது வரலாற்றாய்வாளர்களால் ஊகித்தறியப்பட்டுள்து. குளக்கோட்டன் காலத்திற் கோயிலை அமைத்தவர்கள் பற்றிய உண்மைகள் மறைக்கப்பட்டாலும் கோணேஸ்வரத்துடன் தொடர்புடைய குடிகள் பற்றிக் கோணேசர் கல்வெட்டுக் கூறுகிறது.

அக் குடிகள் கோணேஸ்வரத்துக் தொழும்புகள் செய்தார்கள். அக் குடிகள் கோணேஸ்வரத்திற்குச் சென்று வழிபட உரிமை இருந்ததா? தாம் சென்று வழிபட முடியாத கோயிலுக்கு ஊழியஞ் செய்த குடிகள் தம் துயரும் நோயும் தீர வழிபட்ட தெய்வங்கள் எவை? அத் தெய்வங்களுக்கும் அக் குடிகளின் பண்பாடுகட்கும் வரலாறு இல்லையா? அவை குறித்து இலங்கையின் தமிழ் வரலாற்று எழுத்துக்கள் அக்கறை காட்டினவா? வேடுவர்களின் பாரம்பரிய வழிபாட்டிடங்களான வெருகல், மண்டூர், சந்திவெளி ஆகிய இடங்களின் ஆலயங்களின் வரலாறுகளில் அவை வேடுவர்களின் கோயில்கள் என்ற உண்மையை மறைத்துச் சுற்றுமதில் கட்டுவித்த வன்னியர்களை மட்டுமே பேசும் தமிழ் வரலாற்று எழுத்துக்களை அப்படியே உருப்போடலாமா?

தமிழ்ப் பகுதிகளில் வாழும் முஸ்லிம்கள் பற்றித் தமிழ் வரலாற்று நூல்களில் குறிப்பிடத் தக்கதாக ஏதாவது உள்ளதா? தமிழ்ப் பகுதிகளில் வழக்கழிந்து போன பௌத்த, சமண எச்சங்களைக் கண்டும் அவற்றை மௌனமாக மூடிவிட்டு இப்போது சிங்கள பௌத்த விரிவாக்கத்தின் போது முழிக்கும் தமிழ் வரலாற்று எழுத்துக்கள் பற்றியும் சைவக் கோயில்களையும் அதற்குதிருப்பணி செய்த மேன்மக்களையும் மட்டுமே வரலாறாகப் புரிந்து வைத்திருக்கும் தமிழ் வரலாற்றுப் புரிதல்களையும் மீள்பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் எழவில்லையா?

இலங்கையின் தமிழ் வரலாற்றுக் கட்டுமானத்தை விளங்குவதில் உள்ள முதன்மையான சவால்கள் இவைகளைத் தாண்டியே இலங்கையின் தமிழ்ச் சூழலில் வரலாறு பற்றிய புரிதலும் வரலாற்று எழுத்துக்களும் பற்றிச் சிந்திக்க வேண்டிய உள்ளது.

# சிறப்பு சித்திரவதை முகாம் 22



தோழர் பாலன்

பாஸ்டீல் என்பது பிரான்சு நாட்டில் சர்வாதிகாரத்தின் சின்னமாக இருந்த சிறைச்சாலை. அதனோடு ஒப்பிடக்கூடியது அந்தமான் சிறைச்சாலையென்று எழுதியிருக்கிறார். அந்த நூலில் அரசியல் கைதிகள் எவ்வித காரணமுமின்றி ஏறக்குறைய நான்கு மாதங்களுக்கு சிறையிலடைக்கப்பட்ட அந்த மாபெரும் தலைவர் தனது சிறைவாசச் சிந்தனைகளை "சிறைச்சாலை டைரி" என்ற நூலில் எழுதியிருக்கிறார். எப்படி ஒரு சுதந்திர ஜனநாயக நாட்டில் எல்லா உரிமைகளும் எவ்வித காரணமும் இன்றி பறிக்கப்படக்கூடும் என்று அவர் வியந்து நொந்து போயிருக்கிறார். நாம் சட்டப்படி ஒழுகுகிறோம் என்று நாம் இறுமாந்திருக்க முடியாது. சட்டம் நமக்கு பாதுகாப்பில்லை. சர்வாதிகாரம் தலையெடுத்து விட்டால் ஒரு நாட்டின் தலையெழுத்தே மாறிவிடக் கூடுமென்று எழுதியிருக்கிறார்.

அவர் சிறையிலிருந்தே பிரதமர் இந்திரா காந்திக்கு எழுதிய ஒரு மனுவில் கூறுகிறார்:

"நான் ஒரு வயது முதிர்ந்த மனிதன் என்பது உங்களுக்குத் தெரியும். எனது வாழ்க்கைப் பணிகள் முடிவடைந்து விட்டன. எனது பிரபா (மனைவி) வின் மரணத்திற்குப் பின்னர் நான் யாருக்காகவும் வாழ வேண்டிய அவசியமே இல்லை. நான் கல்வியை முடித்துக்கொண்ட பின்னர் என் வாழ்நாள் முழுவதையும் என்நாட்டுக்காகவே அர்ப்பணித்துள்ளேன். இதற்கு பிரதி பலனாக எதையும் கேட்கவில்லை. ஆகவே உங்கள் ஆட்சியில் ஒரு கைதியாகவே மரணமடைவதில் எனக்கு திருப்திதான்".

"அப்படிப்பட்ட ஒரு மனிதன் வழங்கும் ஆலோசனைகளை நீங்கள் கேட்பீர்களா? நம் நாட்டில் சுதந்திர பிதாமகன்கள் உங்கள் தந்தை (நேரு) உட்பட நிர்மாணித்துள்ள தேசிய அடிப்படைகளை அழித்து விடாதீர்கள். மிகப் பெரிய ஒரு பாரம்பரியத்திற்கு நீங்கள் உரிமை உடையவர். உன்னத இலட்சியங்களும் செயற்படும் ஜனநாயகமும் அந்த பாரம்பரியத்திற்கு உரியவை. அவைகளை எல்லாம் சிதைத்து சின்னா பின்னமாக்கி விட்டுச் செல்லாதீர்கள். அந்த உன்னதங்களை மீண்டும் நிலை நாட்டுவதற்குப் பல ஆண்டுகள் ஆகலாம்.".

இந்த உருக்கமான வேண்டுகோள் நம் உள்ளங்களை நெருடுகிறது. மனித உரிமைகளை மனித சுதந்திரத்தைப் பறிப்பது ஜனநாயகத்தை குழி தோண்டிப் புதைப்பதற்கு சமமாகும்.

நெல்சன் மண்டேலா இந்த நூற்றாண்டின் மகத்தான மனிதருள் ஒருவர். தென் ஆபிரிக்க நாட்டின் நிறவெறித் தீண்டாமையை முழு மூச்சுடன் எதிர்த்தவர். மகாத்மா காந்தியினால் கூட இந்தியாவில் தீண்டாமையை அழிக்க முடியவில்லை. ஆனால் நெல்சன் மண்டேலா இனவெறி, நிறவெறி அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். வருகிற ஏப்ரலில் நடைபெறப் போகிற தேர்தலில் வெற்றி பெற்று தென் ஆபிரிக்க நாட்டின் முதலாவது ஜனாதிபதியாகப் பொறுப்பேற்கப் போகிறார். வெள்ளை ஆட்சிக்கு முடிவுகட்டி உண்மையான ஜனநாயக ஆட்சிக்கு அடித்தளமிட்டிருக்கிறார். இத்தகைய அவர் 27 ஆண்டுகள் சிறையிலிருந்திருக்கிறார். எவ்வளவு சிறந்த வரலாற்று நாயகன் சிறையிலிருந்து புடம் போடப்பட்டிருக்கிறார். அவர் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். அவரது விடுதலைக்காக உலகமே குரல் கொடுத்தது. எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகுதான் அவருக்கு விடுதலை கிடைத்தது. அண்மையில் அவரை விடுதலை செய்த டிகிளாக் அரசு வெள்ளை ஆட்சியை ஒழிப்பதற்கு அவரோடு ஒரு இணக்கம் ஏற்படுத்திக்கொண்டது. இரத்தக் களறி ஏற்படுவதைத் தடுத்து சமாதான உடன்படிக்கை மூலமாக ஜனநாயகத்தை நிறுவியமைக்காக இருவருக்கும் இவ்வாண்டின் சமாதான நோபல் பரிசு வழங்கப்பட்டது. சிறைவாசம் இத்தகைய பெருமை வாய்ந்தது.

இத்தகைய பெருமையைத்தான் தமிழக அரசு எனக்கு நல்கியது. ஆகஸ்டு மாதம் 5ஆம் திகதி காலை நான் வீட்டிலிருக்கும் பொழுது தொண்டாமுத்தூர் பொலிஸார் என்னை தேடி வந்தனர். அதற்கு முன் இரண்டு நாட்கள் என்னை தேடி வந்திருக்கிறார்கள். ஆனால் வந்த காரணம் சொல்லவுமில்லை. வரச் சொல்லவுமில்லை. அவர்கள் தேடி வந்த நாட்களில் நான் நீலகிரியில் நமது மக்களுடனிருந்தேன். ஓகஸ்ட் 5ம் நாள் நான் வீடு திரும்பிய உடனே பொலிஸ்காரர்கள் மோப்பம் பிடித்துக்கொண்டு வந்துவிட்டனர்.

அன்றுதான் அந்த பொலிஸ் அதிகாரி முதன் முதலாக என்னை சந்திக்கிறார். தன்னை அறிமுகம் செய்து கொண்டார்.

"நீங்கள் உடனடியாக எங்களோடு காவல் நிலையம் வரவேண்டும்!" என்றார்.

[சித்திரவதை தொடரும்]

# இந்த வாரம் உங்களுக்கு...

## மேடம்

எந்த ஒரு செயலையும் செய்து முடிக்க அடுத்தவர்களைச் சார்ந்து இருக்க வேண்டிய சூழல் உண்டாகும். எனினும் சரியான சந்தர்ப்பத்தில் சரியான நபர்கள் மூலமாக உதவி கிடைக்கும். குடும்பத்தில் இருந்து வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயற்சிப்பீர்கள். பொருளாதார நிலையில் முன்னேற்றம் உண்டாகும். இந்த வாரம் கடன்கொடுப்பதை முழுமையாகத் தவிர்க்க வேண்டியது அவசியம். ஆயினும் அடுத்தவர்களைக் கேலி செய்யும் விதமாக வார்த்தைகளை வெளிப்படுத்தாமல் இருப்பது நல்லது.

## கடகம்

நீங்கள் சொல்லும் கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களால் தவறாகப் பொருள் காணப்பட்டு அவப்பெயர் உருவாகலாம். உடன் பிறந்தோரால் ஒரு சில சங்கடங்களை சந்திக்க நேரிடும். தகவல் தொடர்பு சாதனங்கள் பயன் தரும் வகையில் அமையும். உறவினர்களோடு பழகும் போது இடைவெளி தேவை. மாணவர்கள் கல்வி நிலையில் முன்னேற்றம் காண கூடுதலாக உழைக்க வேண்டியிருக்கும். வாகனங்களில் முன்பின் தெரியாத நபர்களை ஏற்றுவதால் புதிய பிரச்சினைகள் தோன்றலாம்.

## துலாம்

நினைத்த காரியங்கள் ஏதேனும் ஒரு வகையில் நடந்தேறும். மனதில் உறுதியும், உத்வேகமும் கூடும். மாணவர்கள் கல்வியில் அதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியது அவசியம். பிள்ளைகளின் செயல்கள் உங்கள் விருப்பத்துக்கு மாறாக அமையக்கூடும். அவர்களின் பெயரில் சேமிப்பில் இறங்குவதற்கான வாய்ப்புகள் உருவாகும். நீரிழிவு நோயினால் அவதிப்படுபவர்கள் உடல்நிலையில் தீவிர கவனம் செலுத்த வேண்டியது அவசியம். வாழ்க்கைத்துணையின் விருப்பங்களுக்கு முக்கியத்துவம் அளித்து வருவீர்கள்.

## மகரம்

உங்களின் பணிகள் எளிதாக நடந்தேறும். உண்மையாக உழைப்பதன் மூலம் தனி கௌரவம் அடைவீர்கள். விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் எளிதில் காரியத்தடைகளைத் தாண்டி வருவீர்கள். நினைத்தது கிடைக்காவிட்டாலும், கிடைத்ததைக் கொண்டு சிறப்பாகச் செயற்பட வேண்டும் என்ற உண்மையைப் புரிய வைப்பீர்கள். மனதில் தத்துவ சிந்தனைகள் அதிகமாக ஊற்றெடுக்கும். குடும்ப விவகாரங்களில் தலையிட்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முற்படுவீர்கள்.

## இடபம்

பேசும் வார்த்தைகளில் நிதானத்தைக் கடைப்பிடியுங்கள். வீண்வம்பு, வழக்குகள், அநாவசியப் பிரச்சினைகள் வந்து சேரும். உங்களுக்கு சம்பந்தமில்லாத விஷயங்களில் தலையிடாதீர்கள். இரத்த அழுத்தம் உள்ளவர்கள் உடல்நிலையை அவ்வப்போது பரிசோதித்துக் கொள்வது நல்லது. தம்பதியருக்குள் கருத்து வேறுபாடு தோன்றி மறையும். பிள்ளைகளின் செயல்கள் உங்கள் கௌரவத்தை உயர்த்தும் வகையில் அமையும். கலைத்துறையினரின் கற்பனை வளம் பெருகும்.

## சிம்மம்

மனதில் அசாத்தியமான தைரியம் ஏற்படும். செயல் வேகத்தோடு விவேகமும் இணையக் காண்பீர்கள். நினைத்த காரியங்களை எந்த ஒரு நிலையிலும் தள்ளிப் போடாமல் உடனடியாகச் செய்து முடித்துவிட வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பீர்கள். அதே நேரத்தில் அடுத்தவர்களோடு இணைந்து செய்யும் பணிகளில் உங்களின் பிடிவாதமான நிலையைச் சற்றுத் தளர்த்திக் கொள்வது நல்லது. பேச்சில் நிதானத்தைக் கடைபிடித்தாலும் வார்த்தைகளில் வெளிப்படும் கேலியான கருத்துக்கள் அடுத்தவர் மனதைப் புண்படுத்தக்கூடும்.

## விருச்சிகம்

எதிர்பாராத செலவுகள் கையிருப்பைக் கரைக்கும். நினைப்பது ஒன்றும் நடப்பது ஒன்றுமாக இருந்து வருவதால் மன வருத்தம் உண்டாகும். என்னதான் உழைத்தாலும், என்னதான் சம்பாதித்தாலும் முழுத் திருப்தி கிடைக்கவில்லையே என்ற ஆதங்கம் மனதில் அதிகமாக இருந்து வரும். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். மனதில் இருந்து வரும் குழப்பங்களுக்குத் தீர்வு காண்பீர்கள். குடும்பத்தில் அநாவசியமான பிரச்சினைகள் தோன்றும். பேசும் வார்த்தைகளில் தத்துவச் சிந்தனைகள் அதிகம் வெளிப்படும்.

## கும்பம்

கௌரவத்துக்காகச் செய்யும் செலவுகள் அதிகரிக்கலாம். எனினும் வரவு நிலை நன்றாக உள்ளது. கற்பனையில் இருக்கும் விஷயங்கள் நேரில் நடைபெறக் காண்பீர்கள். குடும்பத்தில் சலசலப்பும் கலகலப்பும் கலந்திருக்கும். பேசும் வார்த்தைகளில் அனுபவத்தின் காரணமாக பொருள் பதிந்த கருத்துக்கள் வெளிப்படும். முக்கியமான நேரத்தில் அதிகம் பேசுவதை விட உங்கள் கருத்துக்களை கூர்மையான எழுத்துக்களின் மூலம் வெளிப்படுத்தி வெற்றி காண்பது நல்லது.

## மிதுனம்

எண்ணிய காரியங்களைச் செய்து முடிக்க மிகுந்த முனைப்புடன் செயற்பட்டு வருவீர்கள். அதிக சுறுசுறுப்புடன் காணப்பட்டாலும், மனதளவில் சிறிது குழப்பத்துக்கு ஆளாகி உள்ளமையால் ஒரு சில இடைஞ்சல்களைச் சந்திப்பீர்கள். ஒரு காரியத்தை செய்து முடிக்க உடனிருப்போர் சொல்லும் வெவ்வேறு விதமான யோசனைகள் உங்களைக் குழப்பும். எந்த முறையைச் செயற்படுத்தி வெற்றி காண்பது என்பதில் தெளிவான முடிவெடுக்க இயலாத சூழல் உருவாகும்.

## கன்னி

பேசும் வார்த்தைகளில் உங்களையும் அறியாமல் சிறிது கடுமை வெளிப்படக்கூடும். குடும்பப் பிரச்சினைகளில் உங்களின் கருத்துக்கள் முக்கியத்துவம் பெறும். பொது அறிவை வளர்த்துக் கொள்வதில் ஆர்வம் கொள்வீர்கள். குடும்பத்தில் சலசலப்பும், கலகலப்பும் மாறி, மாறி இருந்து வரும். தகவல் தொடர்பு சாதனங்கள் உங்களின் பணிகளுக்கு மிகுந்த உதவியாய் அமையும். மாணவர்கள் ஞாபக மறதித் தொல்லையால் சற்று அவதிப்படுவார்கள்.

## தனுசு

சற்றுப் போராடி வெற்றி காண்பீர்கள். நினைத்த காரியங்களைச் செய்து முடிக்கக் கூடுதல் அலைச்சலைச் சந்திக்க வேண்டியிருக்கும். எளிதில் முடிந்துவிடும் என்று எண்ணிய காரியங்கள் கூட சற்று இழுபறியைத் தரும். பிரயாணங்களால் செலவு கூடும். பிள்ளைகளின் வேகமான செயல்கள் மனதில் ஒருவித அச்சத்தைதோற்றுவிக்கும். வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்ற கால நேரம் சாதகமாக அமையும்.

## மீனம்

உறவினர்களால் கூடுதல் செலவுகளுக்கு ஆளாக நேரிடும். பிள்ளைகளின் செயல்கள் உங்கள் விருப்பத்துக்கு மாறாக அமையும். உடல்நிலையில் சிரமங்கள் உண்டாகலாம். வாழ்க்கைத்துணையின் ஆலோசனைகள் உங்களுக்குப் பயனுள்ள வகையில் இருக்கும். உத்தியோகத்தர்கள் அலுவலகப் பணியில் கவனத்துடன் இருக்க வேண்டியது அவசியம். கலைத்துறையினர் கூடுதல் செலவைச் சந்திப்பார்கள்.

# ஒளிரும் பெண்
# கீதா கோபிநாத்!




ஐ.எம்.எப். எனப்படும் சர்வதேச நாணய நிதியத்தைப் பற்றி நாம் எல்லோரும் கேள்விப்பட்டிருப்போம். உலகில் உள்ள அத்தனை நாடுகளும் கை கட்டி வரிசையில் நிற்கின்றன. ஐ.எம்.எப்பின் வாசலில்தான். அவர்களிடம் கடன் வாங்காது தலை நிமிர்வதென்பது மிக மிகக் கடினம். வலிமை மிக்க பொருளாதார மையம் அது. அதன் தலைமைப் பொருளாதார ஆலோசகராக (chief Economist) நியமிக்கப்பட்டுள்ளார் கீதா கோபிநாத். இந்தப் பதவிக்கு வரும் முதல் பெண் இவளே.

“உலகின் தலை சிறந்த பொருளாதார நிபுணர்களில் கீதாவும் ஒருவர். சர்வதேச அளவில் கல்வித்துறைசார் அனுபவமும் கொண்டவர் .



ஐ.எம்.எப். பின் ஆய்வுக் குழுவுக்குத் தலைமை தாங்கும் அத்தனை தகுதியும் கொண்டவர் கீதா” என்று கூறியிருக்கிறார் ஐ.எம்.எப். அமைப்பின் நிர்வாக இயக்குநர் கிறிஸ்டின் ல கார்ட்.

இந்த ஆண்டின் இறுதியில் ஓய்வுபெறும் இப்போதைய தலைமைப் பொருளாதார ஆலோசகர் மவுரீஸ் ஆப்ஸ்பெல்டின் பணிக்காலம் முடியும்போது, அந்தப் பதவியைப் பொறுப்பேற்கவுள்ளார் கீதா.

இந்தியாவின் கொல்கத்தா நகரில் 1971 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதி பிறந்தவள் கீதா. மைசூரில் ஆரம்பக் கல்வியைக் கற்று டில்லி பல்கலைக் கழகத்தில் பி.ஏ (1992) பட்டம் பெற்று எகனமிக்ஸில் மாஸ்டர் டிகிரியை (1994) முடித்தார். அமெரிக்காவின் வொசிங்டன் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. (1996) பட்டதாரியானவள், பிரின்ஸ்டன் யூனிவர்சிட்டியில் முனைவர் (Ph.D) படிப்படையும் (2001) நிறைவு செய்தாள். சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் ஐந்தாண்டுகள் பணியாற்றிய பின், 2005 ஆம் ஆண்டு முதல் ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தின் சர்வதேசக் கல்வி மற்றும் பொருளாதாரத் துறைப் பேராசிரியராகக் கடமையாற்றி வருகிறாள் .

கேரள மாநிலத்தின் பொருளாராத ஆலோசகராகவும் செயற்பட்டுவரும் கீதா, புகழ் பெற்ற “அமெரிக்கன் எக்கனமிக்ரெவ்யூ” மற்றும் “ஹேண்ட்புக் ஒப் இன்டர்நேஷனல் எக்கனாமிக்ஸ்” இதழ்களின் துணை ஆசிரியராகவும் பணியாற்றுகிறாள் . “ரெவ்யூ ஒப் எக்கனமிக் ஸ்டடீஸ்” இன் மனேஜிங் எடிட்டராகவும் பதவியிலிருக்கிறாள் .

அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வருபவரும், 1996 ஆம் ஆண்டு குடிமைப் பணித் தேர்வில் முதலிடம் பிடித்தவருமான இக்பால் தலைவாலை மணந்திருக்கும் கீதா, அமர்த்தியா சென்னுக்குப் பிறகு ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் இரண்டாவது இந்தியர் என்ற பெருமையையும் பெற்றுக்கொண்டாள் .

45 வயதுக்குட்பட்ட மிகச் சிறந்த 25 பொருளாதார நிபுணர்களில் ஒருவராக 2014 ஆம் ஆண்டு தேர்வானவள் , 2011ஆம் ஆண்டு ‘உல.. எக்கனமிக் போரம்’ நிறுவனத்தின் இளம் குளோபல் லீடர் பரிசையும் வென்றெடுத்தாள்.

**கவிஞர் பிரேம்ராஜ்,**
**கொழும்பு**



# வாழவிடாத
# ஆண் உலகம்!

## ரௌத்திரம் பழகு

நான் அப்போது பத்தாம் தரத்தில் படித்துக் கொண்டிருந்தேன். எங்களுடைய பக்கத்து வீட்டில் வசிக்கும் அக்காவின் கணவர் வெளியூர் சென்றிருந்தார். அதனால் அந்த அக்கா தனக்குத் துணையாக அன்றிரவு தன்னுடன் தங்குமாறு என்னைக் கேட்டிருந்தார். அம்மாவும் அதற்குச் சம்மதித்தார். அன்று இரவு நான் ஆழந்த உறக்கத்தில் இருந்தேன். திடீரென என்னை அழுத்துவதைப் போல உணர்ந்தேன். கனவு என எண்ணிய நான் திடுக்கிட்டு விழித்தேன். அந்த அக்காவின் கணவன் என்னிடம் தப்பாக நடந்துகொண்டிருந்தான். அவனைத் தள்ளிவிட்டேன். அவன் நடுச் சாமத்திலேயே ஊரில் இருந்து வந்துவிட்டான் என்பது அப்போது தான் எனக்குப் புரிந்தது. அந்த அக்காவும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். அதன் பின் நான் உறங்கவே இல்லை. விடியும்வரை பயத்துடன் விழித்திருந்தேன். விடிந்த பின் வீட்டுக்கு ஓடி வந்தேன். எனக்கு அவமானமாக இருந்தது. அம்மாவிடம் கூட சொல்வதற்குப் பயமாக இருந்தது. அதற்குப் பிறகு அவனைப் பார்ப்பதையே தவிர்த்தேன். ஆனால் அவன் கொஞ்சம் கூட வெட்கமின்றி என்னிடம் சிரித்துப் பேசுவான். அப்போதெல்லாம் அந்தக் கொடுமையை மறக்க முடியாமல் தவிர்ப்பேன். எனக்கு இப்போது 30 வயது. திருமணமாகி ஒரு குழந்தையும் இருக்கிறது. ஆனால், இன்னும் கூட அந்த நாளை மறக்க முடியவில்லை. நெருங்கிய உறவினர்கள், அயலவர்களால் தான் பெண்களுக்குப் பாலியல் தொல்லைகள் இடம்பெறுகின்றன. எல்லோரும் விழிப்பாக இருங்கள்.

**கே. காஞ்சனா,**
**கண்டி**

## பாலியல் தொல்லைகளை
## பகிரங்கம் செய்வோம்

உங்கள் இரகசியம் காக்கப்படும். நீங்கள் சந்தித்த பாலியல்சார் பிரச்சினைகளையும், அதைக் கையாண்ட விதத்தையும் எழுதுங்கள். உங்கள் அனுபவம் பல பெண்களைப் பாதிப்புறாமல் காக்கட்டும்.

**‘ரௌத்திரம் பழகு’**
அம்பலம் பதிப்பகம்,
இல. 241,
கைதடி - மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
**அல்லது**
ethirolimedia@gmail.com

# இயற்கை விரும்பியா?








தற்காலப் பெண்கள் இயற்கையாகத் தயாராகும் பொருட்களின்மீது அதிக ஆர்வம் கொண்டுள்ளனர். பெண்கள் விரும்பி அணியும் சேலைகளும் தற்போது இயற்கை சார்ந்த வகையில் உருவாக்கம் பெறுகின்றன.

இவற்றின் அருமை, பெருமை அறிந்து பல பெண்களும் இதனை விரும்பி வாங்கி உடுத்திக் கொள்கின்றனர்.

இந்தச் சேலைகள் இயற்கை முறைச் சாய ஆலைகளில் தயார் செய்யப்பட்ட கரைசல்கள் கொண்டு மூழ்க வைக்கப்பட்டுச் சாயம் ஏற்றப்படுகிறது. அரளிப்பூ, சங்குப்பூ, புளியம் பழம், செவ்வாழை, கடுக்காய், மல்லி, அவரை இலை, அவுரி, மாதுளம் தோல் போன்றவை உலர வைத்துப் பொடியாக்கப்பட்டு, அதனை நீரில் ஊற வைத்துக் காய்ச்சியும், காய்ச்சாமலும் இயற்கைச் சாயம் உருவாக்கப்படுகின்றன. இந்த இயற்கைச் சாற்றின் கரைசலில் நூல்கள் சாயமேற்றப்பட்டு விதவிதமான வண்ணங்கள் பெறப்படுகிறது. இவ்வாறு உருவாகும் நூலின் வண்ணம் மங்காமல் இருக்க இதனை மறுபடியும் வெற்றிலைச் சாற்றில் ஊற வைத்த பின் தேங்காய் எண்ணெயில் நனைத்து உலர வைக்கப்படும். இந்த சாய மேற்றப்பட்ட நூல்களில் தான் பருத்திச் சேலை நெய்யப்படும்.

இவை கோடைக் காலம், மழைக் காலம் என இரண்டு பருவ காலத்திலும் அணிய ஏற்ற சேலைகளாகத் திகழ்கின்றன. மேலும் இதன் ரசாயன கலப்பில்லாத நூலும், சாயமும் பெண்களின் உடலோடு ஒட்டி உறவாடும் போது சருமத்துக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை.



# இழந்த செவித் திறன் இனிமேல் உங்கள் வசம்!

இழந்த செவித்திறனைக் குணப்படுத்தும் ஆய்வில், முக்கிய முன்னேற்றத்தை விஞ்ஞானிகள் எட்டியுள்ளனர். காது கேட்காமல் போவதற்கு பல காரணங்கள் உள்ளன. உட் காதுப் பகுதியில் நத்தையின் சுருண்ட கொம்புகளைப் போல உள்ள பகுதியில் வளரும் முடி வடிவில் உள்ள செல்கள் பாதிக்கப்படுவது அதில் ஒன்று. ஒரு மனிதருக்கு சராசரியாக, 15 ஆயிரம் செல்கள் இருக்கும். மிகையான இரைச்சல், அத்துமீறிய ஓசை போன்றவற்றால் இந்த நுண்ணிய செல்கள் நாளடைவில் பாதிக்கப்படுகின்றன. இதனால், காதின் ஒலி உணர்திறன் குறைந்து, ஒரு கட்டத்தில் முற்றிலும் காது கேளாமல் போய்விடும் .

மனிதனின் உடலில் உள்ள பிற செல்களைப் போல முடி செல்கள் ஒருமுறை பாதிக்கப்பட்டால், மீண்டும் வளர்வதில்லை. எனவே, அவற்றின் வளர்ச்சியை மீண்டும் தூண்ட முடியுமா என, விஞ்ஞானிகள் சோதித்து வருகின்றனர்.

அண்மையில் பிரிட்டனில் உள்ள ரோசெஸ்ட்டர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள், எலிகளை வைத்து மேற்கொண்ட ஆய்வில் எலிகளின் காதுகளில் உள்ள முடி செல்கள், மீண்டும் வளர்வதற்கு சமிக்ஞை தரும் புரதங்கள் இருப்பதைக் கண்டறிந்துள்ளனர்.

ஆனால், அவை ஏனோ முடி செல்கள் வளர்வதற்கு சமிக்ஞை தராமலேயே இருக்கின்றன. அந்த செல்களுக்கு தூண்டுதல் தந்த போது, அவை மீண்டும் வளர ஆரம்பித்தன.

எலிகளின் மீதான ஆய்வுகளில் விஞ்ஞானிகள் இழந்த செவி, கேட்கும் திறனை மீட்க முடியும் என நிரூபித்துள்ளனர். இதே போன்ற ஆய்வை செவித் திறனை இழந்தோர் மீது விரைவில் அவர்கள் தொடங்கி வெற்றி கண்டால், காது கேளாமையை முற்றிலுமாக ஒழித்து விடலாம். ■

# சாட்சி சொன்ன 'ரோபோ'




உலகிலேயே முதல் முறையாக ஒரு நாட்டின் ஆலோசனைக் குழுக் கூட்டத்துக்கு ஒரு ரோபோ வந்து 'சாட்சியம்' வழங்கியிருக்கிறது. அண்மையில் பிரிட்டனின் நாடாளுமன்றக் குழு ஒன்று, பள்ளி வகுப்பறைகளில் தொழில்நுட்பத்தின் பங்கு பற்றி விவாதித்தது.


அந்தக் கூட்டத்துக்கு, மிடில்செக்ஸ் பல்கலைக்கழகத்தின் ரோபோவியல் துறை ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தும், 'பெப்பர்' என்ற ரோபோ அழைத்து வரப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கு, எழுந்து நின்றபடி பெப்பர் ரோபோ, தெளிவாகப் பதில் சொன்னது. "அவைத் தலைவருக்கு வணக்கம்." என்று குனிந்து தலை வணங்கிய ரோபோ, "நான் ஒரு மனித வடிவ ரோபோ. என் பெயர் பெப்பர்" என்று தன் அறிமுகத்தோடு எம்.பிக்களின் கேள்விகளுக்குப் பதில் அளித்தது.

ஜப்பானைச் சேர்ந்த சொப்ட் பேங்க் நிறுவனத்தின் தயாரிப்பான பெப்பரை, மிடில்செக்ஸ் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் சிறப்புத் திறன் சிறார்கள், பிறர் உதவி தேவைப்படுவோருக்கு வழங்குவது குறித்த பரிசோதனைகளில் ஈடுபட்டுள்ளனர்.

பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்பே எழுதிக் கொடுத்த கேள்விகளுக்குப் பதில் தயாரிக்கப்பட்டு, ரோபோவின் நிரல்களில் பதியப்பட்டிருந்தது. என்றாலும் பெப்பர் ரோபோ பேசிய விதமும் தந்த பதில்களும் எம்.பிக்களை அசத்தியது.

"முன்பு இங்கு பேசிய அமைச்சர்களைவிட, நீ நன்றாகப் பேசினாய் பெப்பர்" என்று பாராட்டினாராம் டோரி கட்சி எ.ம்பியான லூசி ஆலன். ■



# நோயை சொல்லும் காகிதம்

நோயறிதல் துறையில் பல புதுமைகள் வந்து நோயாளிகளின் பணத்தைப் பதம் பார்க்கின்றன.

ஆனால், ஜப்பான் மற்றும் நெதர்லாந்து நாட்டு விஞ்ஞானிகள் வெறும் காகிதத்தை வைத்து ஒருவருக்கு கிருமித் தொற்று ஏற்பட்டுள்ளதா? இல்லையா ? என்பதைக் கண்டுபிடிக்க முடியும் என்கின்றனர்.

எப்படி? சிறு காகித வில்லை மீது, நோயாளியின் ஓரிரு சொட்டு இரத்தத்தை விடவேண்டும்.

இருபது நிமிடங்களுக்கு பின் அந்த வில்லையின் மேல் இருக்கும் புள்ளிகள், நீல நிறமாக ஒளிர்ந்தால் கிருமித் தொற்று ஏற்பட்டுள்ளது என்று பொருள். பச்சை நிறமாக மாறினால் கிருமித் தொற்று இல்லை என்று கணக்கு. காகித வில்லையில் உள்ள புள்ளிகளில் ஒளிரும் புரதம் அச்சிடப்பட்டிருக்கும். அது தான் இரத்தத்தில் உள்ள கிருமிகளுடன் வினை புரியும்போது, நீலம் அல்லது பச்சை நிறத்தில் ஒளிர்கிறது.

இந்த நோயறியும் காகிதவில்லை பயன்பாட்டுக்கு வந்தால், வளரும் நாடுகளில் உள்ள எளிய மக்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். ■

# அப்ப வண்ணாத்திப் பூச்சி விளையாட்டோ?

"ஜனநாயகம் செத்துப்போச்சு" எண்டு சொல்லிக் கொண்டு விடியக்காலமை சைக்கிளிலை வந்து படலேக்கை பட்டெண்டு பாய்ஞ்சான் முதலி. எனக்கு ஒருக்காத் நெஞ்சுக்கை "திக்" எண்டுது. "இதென்னடா ஆக்கினையாக்கிடக்கு? நான் நேற்றைக்குப் பின்னேரம் ஆளைக் கோயிலடியிலை சந்திச்சனான். போட்டுவாறன் எண்டு சொல்லிப் போட்டெல்லே போனவன். அதுக்கிடையிலை... என்ரை பரமசிவா,.!!" எண்டு என்னையறியாமல் கத்திவிட்டுட்டன். இதைக் கேட்டிட்டு "என்ன?.. ஏனோ.." எண்டு அக்கம் பக்கம் எல்லாம் படை எடுத்து வந்திட்டுதுகள். விழுவான் முதலி கொடுப்புக்கை சிரிச்சுக் கொண்டு வேடிக்கை பாத்துக்கொண்டு நிக்கிறான். "எட.. இத்தனையும் நடந்து போச்சுச் சிரிச்சுக் கொண்டு நிக்கிறாய்? உனக்கு மனச்சாட்சி இல்லையோடா?" எண்டு கோபமாக் கேட்டன்

"உனக்கு விசரெண்டால், எல்லாருக்கும் விசரே? ஒரு மனிசன் ஒரு கதையைச் சொல்லுறான் எண்டால் அதைக் காதைக்குடுத்து என்ன..ஏதெண்டு செவ்வையாக் கேக்க வேணும். இது அதை விட்டிட்டு... ஜனநாயகம் எண்டால் அவனுக்கு மட்டுமே பேர். வேறை ஒண்டுக்கும் அதைச் சொல்லப்பிடாதே! நான் ஜனநாயகம் செத்துப் போச்சுது எண்டு சொன்னது எங்கடை இலங்கை சோசலிசக் குடியரசின்ரை ஜனநாயகத்தை. அது இப்ப செத்து எத்தினை நாளாப்போச்சுது தெரியுமே? மைத்திரியின்ரை குத்துக்கரணத்தோடை அது செத்துப்போச்சுது. முதலி திருப்பி எனக்கு விட்டான் பாணத்தை. நான் வாயைப் பொத்திக் கொண்டு நிண்டிட்டான்.

மைத்திரி ஏன் ரணிலோடை 'கறாரா' நிண்டவர் எண்டு தெரியேல்லை. ஒரு வேளை வாண்ணாத்திப் பூச்சிக் கதையோ தெரியாது எண்டு நான் சொல்ல முதலி சொல்லுறான் "இரண்டு பேருக்கும் வயசு வட்டுக்கை போட்டுது. சும்மா உந்தக் கோதாரியிலை போன கதையைக் கதையாமல் நிப்பாட்டு" எண்டு. அப்ப இத்தினை கறாரா ஏன் நிக்கிறார். தனிப்பட்ட விதத்திலை ரணிலின்ரை பழக்க வழக்கங்களை விமர்சனம் செய்யிற அளவுக்கு அந்தாளுக்கு ரணிலிலை கோவம். இல்லாட்டி ஆரை விழுத்த வேணும் எண்டு தான் ஜனாதிபதியாகக் கேட்டு வந்தாரோ! அவரைக் கூப்பிட்டு பிரதம மந்திரியா நீ இரு எண்டு சொல்லுற அளவுக்கு "அவேக்கை என்ன நடந்திருக்கும்" எண்டு கேள்வி கேட்டு என்னைத் துளைக்கிறான் முதலி.

"என்னடா நான் அவையளோடை கூட நாட நிண்டமாதிரி என்னட்டைக் கேக்கிறாய்?" எண்டு சொன்னாலும் விடுகிறமாதிரி இல்லை. "அண்ணை நீ இப்ப எத்தினை காலமா பேப்பர் வாசிக்கிறாய்? எவ்வளவு நாள் றேடியோ கேக்கிறாய்? பத்தாதுக்கு இப்ப முழு நேரமும் வீட்டிலை இருந்து ரீவி பாக்கிறாய். அப்ப உனக்குச் சிலதை ஊகிக்கேலுமெல்லே? அது தான் உன்னட்டைக் கேக்கிறன். படிப்பிலும்விட இப்ப அனுபவம்தானே பெரிசு எண்டு ஆக்கள் கதைக்கினம்." எண்டு முதலி என்னைத் துளைக்கத் துவங்கிவிட்டான்.

நான் பேப்பரிலை சினிமாப் பக்கமும் பொதுக் கதையளையும் பாக்கிறது முதலிக்குத் தெரியுமே? றேடியோவிலை பாட்டு மட்டும் கேக்கிறது அவருக்குத் தெரியுமோ? ரீவியிலை தொடர் நாடகத்தை மட்டும்பாக்கிறது முதலிக்கு எங்கை விளங்கப்போகுது? அவர் நினைச்சுக் கொண்டு இருக்கிறார் பேப்பர் வாசிக்கிறவையள் எல்லாரும் புத்திசாலியள் எண்டு. றேடியோக் கேக்கிறவையள் எல்லாரும் புத்திசாலியள் எண்டு. ரீவி பாக்கிறரவயள் எல்லாரும் புத்திசாலியள் எண்டு. அப்பிடிப் பாத்தால் கனகம்மா யாழ்ப்பாணம் யூனிவேசிற்றிக்கெல்லோ போயிருக்க வேணும். இப்பிடிச் சொல்லுறன் எண்டிட்டு அங்கை போறவை எல்லாரும் புத்திசாலியளோ எண்டு மட்டும் கேக்காதையுங்கோ. வாறன்! வருவன்.



• வில்லங்கம் விநாசி




கேள்வி – சம்பள உயர்வுப் போராட்டம், அரசியல் மாற்றத்துக்கான போராட்டம், பல்கலைக்கழக மாணவர் போராட்டம் என்று நாடெங்கும் போராட்டங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. கைப்புள்ள நீயும் போராட்டத்தில் கலந்துகொண்டதுண்டா?

**எஸ்.சிவராஜா, யாழ்ப்பாணம்**



**பதில்** – அதுக்கெல்லாம் நமக்கு எங்க நேரம். ஆன்னா எங்க தாத்தா சுதந்திரத்துக்காக சாகும்வரை போராடினார். கடைசிவரை எங்கட பாட்டி அதைக் கொடுக்கவேயில்லை.

கேள்வி – வருமானத்துக்கு அதிகமா பணம் இருந்தா இன்கம் டெக்ஸ் கட்ட வேண்டுமா? நாமதானே கஷ்டப்பட்டு உழைச்சோம்?

**எம்.இய்மாயில், கொழும்பு**

**பதில்** – அப்போ வருமானத்துக்கு அதிகமா கடன் இருந்த வந்து அடைச்சிடுவாங்களா?

கேள்வி – உழைத்தால் உயர்வு வருமாம். எனக்குக் களைப்புத்தான் வருகிறது. உழைக்காமல் உயர்வு வராதா?

**ஆர்.சுபாஜினி, பூண்டுலோயா**

**பதில்** – ஏன் வராது? ஓட்டுக் கேட்கும் அரசியல்வாதிகளும் அவர்களுக்குக் காக்கா பிடிக்கும் அடிவருடிகளும் உழைத்ததாக யாராச்சும் கண்டதுண்டா? மல்லாந்து படுத்து யோசிச்சுப்பாரு.

கேள்வி – யோவ்... கைப்புள்ள. நானும் தினம் லாட்டரி டிக்கட் வாங்கிறன். ஒன்னும் கிடைக்கல்ல. உமக்கு யோகம் அடித்ததுண்டா?

**கே.சிவலிங்கம், வத்தளை**

**பதில்** – நேத்து நடந்த சண்டையில அடி பின்னிட்டா. என் மனைவி பேரு யோகமுங்க.

கேள்வி – சொந்தம் எப்போதும் தொடர்கதை என்கிறார்களே, உமக்கு ஏதாவது தெரியுமா கைப்புள்ள?

**வி.ராஜன், மன்னார்**

**பதில்** – காதலிக்கும் போது காதலியின் நண்பி சொந்தம். அவள் அடுத்த வீட்டு ஆண்டி சொந்தம். காத்துக் கிடக்கும் அந்த டீக்கடை பெஞ்சு சொந்தம். "நாசமாப் போறவங்களே போய் வேல வெட்டியப் பாருங்கடா" என்று திட்டும் டீக்கடை ஓனரும் சொந்தம். காதலுக்காக எத்தனை சொந்தம் - அது தொடர்கதை இல்லாம பின்ன என்னவாம்.

கேள்வி – சரியான லொள்ளுப் பாட்டியா இருக்கிறீரே. உமது வயதென்ன? சீக்கிரமே கலைந்து விடுவது வாலிபம்தானே?

**கே.ரூபன், பதுளை**

**பதில்** – Teaயில அமுக்கின பணிஸூம், Facebookல கரெக்ட் பண்ணின பொண்ணும் ரொம்ப நேரம் நிக்காது. இது தெரியாம வயது, வாலிபம் என்கிறாயே...




# சொல்லுங்கோ டொக்டர்

**கேள்வி-**

எனக்கு 30 வயது. புகைப்பிடிக்கும் பழக்கத்துக்கு அடிமையாகிவிட்டேன். அதிலிருந்து மீள எவ்வளவு முயற்சித்தாலும் முடியவில்லை. இதற்கு என்ன செய்யலாம்?

**கே.கவின் நெல்லியடி**

**பதில்:-**

உங்கள் கேள்வியில் உள்ள இரண்டு விடயங்களே உங்கள் முயற்சி வெற்றி பெறும் என்பதற்குச் சான்றாக இருப்பதாக நான் நினைக்கிறேன்.

## நீங்களும் புகைப்பவரா?



முதலாவது புகைத்தலுக்கு அடிமையாகிவிட்டதாக நீங்களே உணர்ந்து அதிலிருந்து மீள வேண்டும் என தீர்மானித்ததாகும். புகைத்தலைக் கைவிடமுடியுமா என்ற அவநம்பிக்கையுடன் பலர் தயங்கிக் கொண்டிருக்கும் போது விடுபட வேண்டும் என்ற தீர்மானமானது நிச்சயம் நம்பிக்கை ஊட்டுவதாகும். உங்கள் பாதிப்பிலிருந்து விடுபடுவதற்கான முதல் வெற்றி அதிலேயே நிச்சயமாகி விட்டது.

புகைத்தலிருந்து விடுபட வேண்டும் என்ற தீர்மானமானது மீள்வதற்கான முதற்படி மட்டுமல்ல உங்கள் உடல் நலத்தை மேம்படுத்துவதை நோக்கிய முக்கிய அடி எனலாம். நீங்கள் மட்டுமல்ல உலகளாவிய ரீதியில் வருடாந்தம் ஒரு மில்லியனுக்கு மேலானவர்கள் அத்தகைய முதலடியுடன் ஆரம்பித்தே புகைத்தலைக் கைவிடுகிறார்கள்.

இரண்டாவது விடயம் நீங்கள் பலமுறை முயன்றும் விடுபட முடியவில்லை என்பதாகும். நீங்கள் மட்டுமல்ல இன்னும் பலரும் மீண்டும் புகைக்க நேர்வதால் கைவிட முடியவில்லை என நினைக்கிறார்கள். அதையிட்டு அவநம்பிக்கை கொள்கிறார்கள். ஆனால் முக்கியமான விடயம் என்னென்றால் இவற்றையெல்லாம் தாண்டியே பெரும்பாலானவர்கள் முற்றாகக் கைவிடுகிறார்கள் என்பதாகும்.

எனவே அவநம்பிக்கை கொள்ளாதீர்கள். நிச்சயம் கைவிடுவீர்கள், உங்கள் தீர்மானம் உறுதியாக இருந்தால்.

முதலில் செய்ய வேண்டியது யாதெனில் நீங்கள் புகைத்தலை நிறுத்துவதற்கென ஒரு குறிப்பிட்ட தினத்தைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வதால் அந்தக் கால இடைவெளிக்குள் புகைத்தல் இல்லாத காலத்தைப் பற்றிய ஒரு மனநிலையை உங்களால் உருவாக்க முடியும். சிலர் குறிப்பிட்ட அந்தத் தினத்தில் புகைத்தலை திடீரென நிறுத்துவார்கள். வேறு சிலர் இந்தக் கால இடைவெளிக்குள் தினமும் தாங்கள் புகைக்கும் சிகரட்டின் எண்ணிக்கையைப் படிப்படியாகக் குறைத்து அத் தினத்தில் முற்றாகக் கைவிடுவார்கள்.

நீங்கள் பொதுவாக எந்த நேரத்தில் புகைப்பீர்கள்? பலருக்கு மது அருந்தும் போது புகைக்க வேண்டும். வேறு சிலருக்கு சாப்பிட்ட பின்னர் 'தம்' அடித்தால்தான் சரிப்படும். சிலருக்கு கோப்பி குடிக்கும் போது கூட புகைக்க வேண்டியிருக்கும். டென்சனாகும் போது, மன அழுத்தம் ஏற்படும் போது புகைப்பவர்கள் பலர். வாகனம் செலுத்தும்போது புகைப்பவர்கள் இருக்கிறார்கள்.

இப்பொழுது சிந்தித்துப் பாருங்கள். பொதுவாக எத்தகைய தருணங்களில் நீங்கள் பெரும்பாலும் புகைப்பீர்கள்என்பதை நினைவுபடுத்துங்கள். புகைத்தலை நிறுத்திய பின்னர் உங்களுக்கு புகைத்தலை தூண்டும் அத்தகைய சந்தர்ப்பங்களுக்கு முகம் கொடுப்பதைத் தவிர்க்க முயலுங்கள். ஆனால் பல சந்தர்ப்பங்கள் தவிர்க்க முடியாதவை என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். சாப்பிட்ட பின்னர் புகைக்கத் தோன்றுபவர் சாப்பிடாமல் இருக்க முடியுமா? அவ்வாறு எனின் அந்த நேரத்தில் உங்கள் மனதுக்கு இதமான வேறு ஏதாவது ஒரு விடயத்தில் ஈடுபட முனையுங்கள்.

புகைத்தலை நீங்கள் கைவிட இருப்பதை இரகசியமாக உங்களளவில் செய்யாதீர்கள். உங்களுக்குப் பிடித்தமான ஒருவர், உங்கள் அன்புக்குரிய ஒருவர் அல்லது நீங்கள் மதிக்கும் ஒருவரிடம் நீங்கள் கைவிட இருப்பதை சொல்லுங்கள். இந்த ஆலோசனையை நான் ஒருவருக்கு கூறியபோது, அவர் தன் பாசத்துக்குரிய மகளின் தலையில் கைவைத்து சத்தியம் செய்து கைவிட்டார். 20 வருடங்களாகப் புகைத்த அவர் அதன் பின்னர் புகைக்கவே இல்லை. இப்பொழுது 75 வயதிலும் ஆரோக்கியமாக இருக்கிறார்.

புகைக்கும் சிலர் ஒன்று சேர்ந்து கூட்டாகப் புகைத்தலை நிறுத்துவதும் உண்டு. அதுவும் நல்ல பலனைத் தரக்கூடிய முறையாகும்.

ஒரு சிலருக்கு புகைத்தலை நிறுத்துவதற்கு மருத்துவ உதவி தேவைப்படும். அது பல வகைப்படலாம்.

புகையிலையில்உள்ள 'நிக்கட்டின்' என்ற பதார்த்தமே புகைத்தலுக்கு அடிமையாக்குகிறது. எனவே அதை மூக்கில் அடிக்கும் ஸ்ப்ரேயாக, தோலில் ஒட்டும் மருந்தாக, வாயில் போடும் லொசென்சாக என ஏதாவது ஒரு விதத்தில் மருத்துவர்கள் கொடுத்து அதையும் படிப்படியாக நிறுத்துவதன் மூலம் கைவிட வைப்பார்கள்.

வாயினால் உட்கொள்ளும் மருந்துகளும் உள்ளன. இவற்றை மருத்துவரின் நேரடிக் கண்காணிப்பின்கீழேயே செய்ய வேண்டும்.

மருத்துவ ரீதியாக உங்களுக்கு எழும் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். அவை தொடர்பில் உரிய மருத்துவர்களின் பதில்கள் எதிரொலியில் பிரசுரமாகும். உங்கள் சுய விபரம் இரகசியமாகப் பேணப்பட வேண்டுமாயின் அதனை மறக்காமல் குறிப்பிடுங்கள். நோயற்ற வாழ்வுக்கு கேளுங்கள். பதிலோடு பயனும் பெறுங்கள்.



# பேனா போராளியின் கதை

● எஸ்.சுமன்

'த சண்டே டைம்ஸ்' என்ற இங்கிலாந்து நாளிதழின் போர்க்களச் செய்தியாளராகப் பணியாற்றிய மேரி கொல்வின் ஒரு அமெரிக்கர். துணிச்சல் அவரது தனி அடையாளம். அவரது மறைவையொட்டி 'மேரி கொல்வின்ஸ் பிரைவேட் வோர்' என்ற தலைப்பில் வெளியான கட்டுரை ஒன்றை அடிப்படையாக வைத்து 'எ பிரைவேட் வோர' ' திரைப் படம் உருவாகியுள்ளது.

மேரி கொல்வினாக ரோஸ்மண்ட்பைக் நடித்துள்ளார். தமிழ்ச்செல்வன் என்ற பாத்திரத்தில் ஈழ எழுத்தாளர் ஷோபாசக்தி நடிக்கிறார். மேத்யூ ஹெயின்மேன் இயக்கியுள்ள 'எ பிரைவேட் வோர்' திரைப்படம் இம்மாதம் திரைக்கு வருகிறது.

உலகத்தில் எங்கே போர் மூண்டாலும் அங்கே களமிறங்கி ரத்தமும் சதையுமாகப் போரின் அவலங்களை ஆதாரத்துடன் வெளியிடுவார். சொந்த மக்களைக் கொன்றொழிக்கும் அரசுகளின் கோர முகத்தை வெளிப்படுத்தியதற்காக அச்சுறுத்தலுக்கு ஆளானார். பரிசாக உடலில்பல காயங்களைப் பெற்றதுடன் ஒரு கண்ணையும் இழந்திருக்கிறார்.


கொசோவோ, செசன்யா, சிம்பாவே, அரபு நாடுகள் எனத் தொடர்ந்த போர் முனைகளின் வரிசையில் அவர் இலங்கையில் செய்தி சேகரிக்கச் சென்ற போதுதான் அந்தக் கோரம் அவருக்கு நடந்தது. ஒற்றைக் கண் பறிபோன இடத்தை ஒட்டுவில்லை ஒன்றால் மூடிக் கொண்டு, அதன் பின்னரும் தனது அதிரடிப் பணிகளைத் தொடர்ந்தார். ஆனால் போரின் அவலங்களை நெருக்கமாகக் கண்டதில் கடும் மன அழுத்தத்துக்கு ஆளாகி சிகிச்சை எடுத்துக்கொண்டார். தனது 28 ஆண்டுகாலப் பத்திரிகையாளர் பணியின் நிறைவாக 2012 இல் சிரிய உள்நாட்டுப் போரில் வெடிகுண்டுத் தாக்குதில்உயிரிழந்தார்.



# இமைக்காமல் பார்க்க வைக்கும் திடுக் 'த்ரில்லர்'

ஒரு சிங்கம் பல நொடிகள் கண் இமைக்காமல் காத்திருந்து, கண்காணித்து, பதுங்கி, பாய்ந்து இரையை வேட்டையாடுகிறது. அதைக் கழுதைப் புலி ஒன்று குறுக்குவழியில் பறித்துச் சென்றால், அந்தச் சிங்கம் என்ன செய்யும்? இதையே கதையாகச் சொல்லியிருக்கிறது 'இமைக்கா நொடிகள்'.

ஐந்து வருடங்களுக்கு முன், பெங்களூரில் ருத்ரா எனும் 'சீரியல் கில்லர்' சி.பி.ஐ. அதிகாரி நயன்தாராவால் கொல்லப் படுகிறான். ஐந்து வருடங்களுக்குப் பிறகு, நகருக்குள் அதே பெயரில் அதே பாணியில் மீண்டும் கொடூர கொலைகள் அரங்கேறுகின்றன. சி.பி.ஐ. எனும் கழுகை காக்கையாக்கி கரையவிடும் அந்த சூப்பர் ஸ்மார்ட் சீரியல் கொலைகாரன் யார்? சி.பி.ஐயின் கைகளில் சிக்கினானா? கொலைகளுக்கான காரணம் என்ன என்பதைச் சீட்டின் நுனியில் உட்காரவைத்து சொல்லியிருக்கிறது படம். இதுதான் மொத்தப் படத்தின் கதையா எனும் கேள்விக்குறிக்கு இல்லை எனும் பதில்தான் ஆச்சர்யக்குறி! மொத்தக் கோட்டையும் அழியுங்கள். நான் முதலில் இருந்தே சாப்பிடுகிறேன்' என திரைக்கதையில் அதிர்ச்சி கொடுத்திருக்கிறார் அஜய் ஞானமுத்து.



சி.பி.ஐ அதிகாரி அஞ்சலியாக நயன்தாரா. லேடி சூப்பர் ஸ்டாரேதான்! நவரசத்தில் பல ரசங்களைக் காட்ட வேண்டிய கதாபாத்திரம். அஞ்சலியின் தம்பி அர்ஜூனாக அதர்வா. சண்டைக் காட்சிகளில் தரம். அனுராக் காஷ்யப்தான் கதையின் சிங்கம். நடிப்பில் பங்கம் பண்ணியிருக்கிறார். தமிழ் சினிமா ரசிகர்களுக்கு புதியவரான அனுராக்கை, பார்க்கப் பார்க்கப் பிடித்துப்போகிறது தமிழ்ரசிகர்களுக்கு. கௌரவ கதாபாத்திரத்தில் விஜய் சேதுபதி. குட்டியான அதேநேரம் கெட்டியான கதாபாத்திரம், ரசிக்கும்படி நடித்திருக்கிறார். ராஷி கண்ணா, ரமேஷ் திலக், அபிஷேக் ராஜா, நயன்தாராவின் மகளாக நடித்திருக்கும் குழந்தையென மற்ற நடிகர்களும் நல்ல தேர்வு. நல்ல நடிப்பை வழங்கியிருக்கிறார்கள்.

படத்தின் ஓரிடத்தில் ஹசின்னச் சின்ன சந்தேகங்கள்தான் பெரிய பிரச்சினைகளை உண்டாக்கும்' எனப் பேசும் ஒற்றை வசனம்தான் மையக்கதைக்கும் கிளைக்கதைகளுக்குமான வேர் என்பதைத் தெளிவாக நியாயப்படுத்தியிருக்கிறார் இயக்குநர் அஜய் ஞானமுத்து. ஆனால், உற்று நோக்கினால் மையக்கதையும் கிளைக் கதைகளும் தாமரை இலையிலுள்ள நீர் துளிபோல்ஒட்டியும்ஒட்டாதமாதிரியே இருப்பது கொஞ்சம் உறுத்தல். படம் தேவைக்கு மேல் நீளம். இடைவேளையிலேயே முழுப்படம் பார்த்த உணர்வு வந்துவிடுகிறது. மொத்தப் படமும் பார்த்து வெளியே வரும்போது மூன்று சினிமாக்கள் பார்த்த உணர்வு.

அதர்வா - ராஷிக் கண்ணா காதல் காட்சிகள் நன்றாகவே இருந்தாலும், கதைக்குத் தேவையில்லாத ஆணி. அனுராக் பேசும் நக்கல் வசனங்கள் கூர்மை. நயன்தாராவுக்கும் ஒரு காவல் அதிகாரிக்குமான மோதல் எனச் சில சின்னச் சின்ன விஷயங்களையும் கதையின் மைய ஓட்டத்தோடு சம்பந்தப் படுத்தியிருப்பது சிறப்பு. ஆனால், அதே் அளவு கவனத்தை மையக்கதையிலும் காட்டியிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

புவன் ஸ்ரீனிவாசனின் படத்தொகுப்பில் சில காட்சிகள் சடாரென முடிந்து விடுவது, கதையோட்டத்தில் ஏற்பட்ட தடங்கல் போலாகிறது. பாடல்கள் அனைத்தும் வழக்கமான 'ஹிப் ஹாப் தமிழா' பாணியிலேயே இருக்கிறது. பின்னணி இசையில் நிறையவே ஏமாற்றிவிட்டார்.

சில 'லொஜிக்' மீறல்களும், படத்தின் நீளமும் அவ்வப்போது கண்ணைச் செருக வைத்தாலும், திடுக் திருப்பங்கள் நிறைந்த திரைக்கதை, படத்தைக் கண் இமைக்காமல் பார்க்க வைக்கிறது.




# சிறிய அசைவிலும் வசீகரிக்கும் ரஜினி!

● சுரேஷ் கண்ணன்

வளர்ந்து வரும் நடிகராக இருந்த காலத்தில் 'தான் தனித்துத் தெரிய வேண்டும்' என்பதற்காகப் பல வித்தியாசமான உடல்மொழிகளை ரஜினி செய்து வந்திருக்கிறார் என்பது அனைவருக்கும் தெரியும். சட்டென்று விறைப்பாகத் திரும்புவார். சாத்தியமே இல்லாத இடங்களில் நெருப்புக்குச்சியைக் கிழிப்பார்.





இப்படிப் பல அசைவுகளைப் பட்டியலிட முடியும். அவற்றில் சில கோணங்கித் தனமாக இருந்தன. கிண்டலடிக்கப்பட்டு வந்தன. ஆனால் அவற்றில் வசீகரமும் கலந்தே இருந்தது. அதனாலேயே அவரது பங்களிப்பு பிரத்தியேக 'ஸ்டைலாக' கவனிக்கப்பட்டு ரசிகர் வட்டம் வளர்ந்து விரிவடைந்தது.

ரஜினி நாயகராக, உச்சநட்சத்திரமாக உயர்ந்து விட்ட பிறகு இவற்றில் பலவற்றை அவர் மட்டுப்படுத்திக் கொண்டாலும் எதிர்மறையான பாத்திரங்களை அவர் ஏற்கும் போது 'பழைய' ரஜினியை சில தருணங்களில் பார்க்க முடியும். சந்திரமுகியில் வரும் வேட்டையனைப் போல.

2.0 'ட்ரைய்லரில்' உள்ளங்கையில் குத்திக் கொள்ளும் அந்தத் தருணத்தில் பழைய ரஜினியைப் பார்க்க முடிகிறது. அவரைத் தவிர வேறு எவர் செய்தாலும் இந்தச் சிறிய அசைவில் இத்தனை வசீகரத்தைக் கொண்டு வர முடியுமா என்றும், அது பொருத்தமாக இருக்குமா என்றும் சந்தேகமாக இருக்கிறது.

(1505 முதல் 1948 வரையான யாழ்ப்பாணத்தின் வரலாற்றைக் கட்டுரையாளர் இங்கு தொடராகப் பதிவு செய்யவுள்ளார். இங்கு கூறப்பட்டுள்ள தகவல்கள் பெரும் பாலும் ஆங்கில மூலங்களில் இருந்து பெறப்பட்டவை. தகவல்களில் வேறுபாடு காணப்படும் சந்தர்ப்பங்களில் இரண்டு தகவல்களையும் இங்கு தரவுள்ளதாகவும், அவை தொடர்பில் தான் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை எனவும் கட்டுரையாளர் தெரிவித்துள்ளார்.)




# நில ஒதுக்கீட்டுக்கான அழுத்தம்

### தோம்புகள்

போர்த்துகேயர்' காலத்தில் தோம்பு என்ற சொல் ஒரு நிலத்தின் பரப்பளவு உற்பத்தி வருமானம் உரிமையாளர் குடியிருப்பாளர் போன்ற விபரங்களை உள்ளடக்கிய ஒரு ஆவணமாகக் காணப்பட்டது. 1620 ஜூனில் Lancorote De Seixas என்பவர் மன்னாருக்கும் மாந்தோட்டத்துக்குமான பதிவேட்டை(தோம்பை) தாயாரிதிதார். இவர் யாழ்ப்பாணம்-மன்னார் வீதியில் வாழ்ந்து வந்தார்.இறைவரி வருமானம் தொடர்பான சுருக்கத்தையே இவர் தோம்பு என்ற பெயரில் பதிந்து வைத்திருந்தார்.

புவியியல் ரீதியாக யாழ்ப்பாணத்தின் நியாயாதிக்க எல்லைப்பரப்புஇந்தக்காலப்பகுதியில் அதிகரித்தது. ஆனால் இந்த தோம்புகள் தேவையான ஆவணங்களை கொண்டிருக்கவில்லை. 1622-1628 காலப் பகுதியில் ஆளுநராக இருந்தவர் 1625ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்குரிய தோம்பு பதிவு பூரணப்படுத்தப்பட்டதாக எழுதினார்.யாழ்ப்பாணம் என்பதன் அர்த்தம் யாழ்ப்பாணக் குடாநாடும் தீவகமும் என அவர் குறிப்பிட்டார். மறுபுறத்தில் ஆளுநர் Dom philipe mascarenhas யாழ்ப்பாணமென்பது மன்னார், மாந்தோட்டம்,முத்துக்குளிப்பு,வன்னி என்பனவற்றையும் உள்ளடக்கியது எனக்குறிப்பிட்டார்.

### Freitas எதிர் Olivera

Freitas என்ற அதிகாரி தோம்புகளை பதிவதற்கும் வருமானங்களை பெற்றுக்கொள்வதற்கு மென போர்த்துக்கல் அரசினால் நியமிக்கப்பட்டிருந்தான். இவனுக்கு வழங்கப்பட்ட சம்பளம் Olivera வின் சம்பளத்தை விட அதிகமாக இருந்தது.அத்துடன் இராணுவ ரீதியான நிர்வாக விடயங்களிலும் Freitas தலையிட தொடங்கினான். இது Olivera விற்கு பிடிக்கவில்லை. தான் யாழ்ப்பாணத்தை வெற்றி கொண்டதளபதி, ஒரு கணக்கு பதிவாளன் தன்னை விட கூடுதலான சம்பளம் பெறுவதாக எண்ணிய Olivera தன்னை போர்த்துககல்லுக்கு திரும்ப அழைத்துக்கொள்ளுமாறு போர்த்துக்கல் அரசனிடம் கோரிக்கை விடுத்தான். எனினும் போர்த்துக்கல் அரசன் ஒலிவேறாவின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒலிவேறா யாழ்ப்பாணத்தில் இருந்த ஏழை மக்கள் மீது அனுதாபம் கொண்டவனாக இருந்தான். ஆனால் Freitas வரி வருமானம் பெறுவதையே நோக்கமாக கொண்டிருந்தான். அத்துடன் கொழும்பு தளபதியுடனும் Freitas முரண்பட்டான் இதனால் Freitas கோவாவிற்கு திருப்பி அழைக்கப்பட்டான். கோவா ஆளுனர் ஒலிவேறாவை தோம்பு பதியும் வேலையை தொடங்குமாறு கேட்டுக்கொண்டார். 1626 நவம்பரில் முக்கிய மாகாணமான வலிகாமம் பூரணப்படுத்தப்பட்டதாக ஒலிவேறா அறிவித்தான்.

1627.03.22 அன்றுசுகயீனம் காரணமாக ஒலிவேறா மரணமடைந்தான். ஒலிவேறாவின் மரணச்சடங்கு பெரிய எடுப்பில் நடைபெற்றது. ஒலிவேறாவின் பூதவுடல் Capelomor தேவாலயத்தில் அடக்கம் செய்யப்பட்டது.ஒரு அரசனுக்குரிய மரியாதை ஒலிவேறாவுக்கு வழங்கப்பட்டது.சிறிது காலத்தின் பின் அலகின் எலும்புகள் எடுக்கப்பட்டு தேவாலய சுவரின் மீது பொருத்தப்பட்டன. ஒரு முடிக்குரிய அரசனுக்கு வழங்கப்படுவது போன்ற மரியாதை ஒலிவேறாவிற்கு வழங்கப்பட்டது. ஒலிவேறாவின் பெயர் அவனது கல்லறைமீது பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டது. ஒலிவேறா காலமானதை தொடர்ந்து தோம்பு பதியும் வேலை ஸ்தபிதமடைந்தது.

(சமர் தொடரும்)

# கைதட்டுங்கள் 'சிரி'சேனவுக்கு!

■ஸபர் அஹமட்



'சிரி'சேனா ஜனாதிபதியின் வழக்கமான உரையைக் கேட்க நேர்ந்தது..மகிந்த ராஜபக்சவின் நியமனத்தை நியாயப்படுத்த அவர் சொன்ன ஒரு விளக்கத்தைக் கண்டு நிறையப் பேர் ஆடிப் போய்விட்டார்கள். அதாவது எட்டுமாதங்களுக்கு முன்பு "பிரதமராகிக் கொள்ளுமாறு" கரு ஜெயசூரியவிடம் கெஞ்சி இருக்கிறார். கடந்த இரண்டு மாதங்களாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்.தலைவர் சஜித்தை மாலை வேளைகளில் வீட்டுக்கு அழைத்து " டேய் தம்பி! பிரதமராகிக் கொள்ளுடா," என்று வற்புறுத்தி இருக்கிறார்.இவர்கள் சம்மதிக்கவில்லை.

ரணில் எவ்வளவுதான் பலவீனமான தலைவர் என்றாலும் இப்படிப் பின்கதவால் முடிசூடிக் கொள்வது 'ஒழுக்கமின்றிய முதுகில் குத்தல்' என்று நினைத்து இருப்பார்கள்..ஆக, சிரிசேனா பிரதமர் பதவியை மகிந்தவுக்கு தீபாவளி போனஸாகத் தூக்கி எறிந்து இருக்கிறார்..ரணிலைப் பற்றியும் ரணிலுடன் இருக்கும் பிற்போக்குவாத உயர்குடி மக்கள் பற்றியும் சிரிசேனா சொன்ன கருத்துக்கள் எல்லாம் நூறுவீதம் நிஜம்.. அதில் மாற்றுக் கருத்து இல்லை.ரணிலின் ஜனநாயகம் எல்லாம் வெளி உலகுக்குத்தான்..கட்சிக்குள்ளே ஹிட்லரை விடப் பயங்கர சர்வாதிகாரி ரணில்.ஐக்கிய தேசியக் கட்சியின் கீர்த்தி மிக்க தலைவர்களான ரணசிங்க பிரேமதாஸ, லலித் அத்துலத் முதலி,காமினி திஸாநாயக்க, ரஞ்சன் விஜேவர்தன போன்ற தலைவர்கள் எல்லாம் புலிகளால் படுகொலை செய்யப்பட்டார்கள்.இந்தத் துர்ப்பாக்கியமிக்க கொலைகள் நிகழாமல் இருந்தால் ரணில் இப்போது தபால் அமைச்சராகவோ காணி அமைச்சராகவோ இருந்து இருப்பார்..எல்லாம் நேரம்....!

ரணிலைப் பற்றி இத்தனை தெரிந்துதானே சிரிசேனா கூட்டணி வைத்தார் ? ஐக்கிய தேசியக்கட்சிக்கு என்று தேசம் முழுவதும் நிரந்தரமாக இருக்கும் முப்பத்தைந்து இலட்சம் வாக்குகளையும் பொக்கற்றிலும் போட்டுக் கொண்டார் ? பொலனறுவைக் கிராமத்தைச் சேர்ந்த சிரிசேனா கொள்ளுப்பிட்டி மேட்டுக்குடி ரணிலுடன் கைகோர்த்தார்? பொதுவேட்பாளராக இருந்த சிரிசேனா சுதந்திரக் கட்சியின் தலைமையைக் கைப்பற்றியது முதல் 'லடாய்' ஆரம்பமாகி எல்லாமே சொதப்பலில் முடிந்த பின்பு இப்போது இப்படிப் புலம்புவதில் அர்த்தமே இல்லை..

ஜனாதிபதி சிரிசேனாவுக்கு ராஜபக்சவுடன் சேரும் உரிமை இருக்கிறது.அதை மறுக்கவில்லை..ஆனால் கடந்த 2015 ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ச ஜனாதிபதி மீது அடுக்கிய குற்றச்சாட்டுக்கள் ஒன்றா இரண்டா ? அணையைத் திறந்து ஊருக்குள் வெள்ளம் பாய்ந்த மாதிரி அல்லவா சீறினார். முதலில் சிரிசேனா ராஜபக்ச குடும்பத்திடமும் பகிரங்கமாக மன்னிப்பு கேட்டு இருக்க வேண்டும்.' நான் சொன்னது எல்லாம் இலக்கியம், புனைவு, கப்ஸா, தமாசு' என்று பொது மக்களிடம் சொல்லிவிட்டுத்தான் ஜனநாயக முறையிலோ எந்த வழியிலோ ராஜபக்சவைப் பிரதமராக்கி இருக்க வேண்டும்..அதெல்லாம் எங்கே...

சிரிசேனா 2015 ஜனாதிபதித் தேர்தலில் வென்றபோது மகிந்தவுக்கு வோட்டுப் போட்ட ஐம்பத்தெட்டு லட்சம் பேரும் திட்டித் தீர்த்தார்கள்.பின்னாளில் அவருக்கு வோட்டுப் போட்ட அறுபத்திரண்டு இலட்சமும் "ஐயோ" என்று அலறினார்கள்.உச்சக்கட்டமாக மகிந்தவை பிரதமராக்குமளவுக்குப் போய் மகிந்த "நல்ல ஜனநாயகவாதி" என்று சொல்லுமளவுக்கு ரிவர்ஸ் ஹியரில் ஓடிவிட்டார்.இந்த நாட்டில் கூட்டிக் கழித்துப் பார்த்தால் இதுவரை ஒரு கோடிப் பேரிடமாவது திட்டு வாங்கி இருக்கிறார்.எந்த ஜனாதிபதியும் இதுவரை செய்யாத சாதனை இது.இதற்காகவே ஓங்கிக் கைதட்டலாம் போல இருக்கிறது. ■

"ஒப்பிரேஷன் விக்னேஸ்வரன்"
கூட்டமைப்புக்கு குலைப்பன்
அடுத்தவாரம்

எதிரொலி
Ethiroli
14-20 நவம்பர் 2018





# பதுக்கப்பட்ட ஹேரத் எனும் சுழல் மனிதன்

இலங்கைக் கிரிக்கெட் அணியின் சுழல்பந்துவீச்சுக்கான இடத்தைத் தனிப்பெரும் பான்மையுடன் தனதாக்கியவர் முத்தையா முரளிதரன். அவருக்குப் பின்னர் எந்தவொரு சுழல்பந்துவீச்சாளராலும் பெரியதோர் இடத்தை இலங்கை அணியில் பிடிக்கமுடியவில்லை.

எனினும், நடப்புக்கால நட்சத்திர வீரராகத் திகழ்ந்த ரங்கனஹேரத்தால் அந்த இடத்தை ஓரளவேனும் எட்டிப்பார்க்க முடிந்தது என்று கூற முடியும். ஆனாலும், அவருக்கான ஊக்குவிப்பு - இடம் இலங்கை அணியால் வழங்கப்பட்டதா என்றால் அது மிகக்குறைவு என்றே கூற வேண்டும். இதனால், அவருக்குத் தனது திறமையை பெரியளவில் வெளியே கொண்டுவரக்கூடிய சந்தர்ப்பங்கள் சரியாக அமையவில்லை.

எனினும், கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை அணியின் வீழ்ச்சி ஆரம்பித்ததிலிருந்து ஹேரத்தின் முக்கியத்துவம் - திறமை மெல்ல மெல்ல வெளியே தெரியத் தொடங்கியது.

இந்நிலையில், அவரது ஓய்வுக்கான வயதும் நெருங்கி வந்துவிட்டமைதான் பரிதாபம்.

1978ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் திகதி குருநாகலில் பிறந்த ரங்கன ஹேரத், 1999ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி காலியில்ஆரம்பித்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுக வீரராகக் களமிறங்கினார்.

ஜெயசூர்ய, அத்தப்பத்து, ஆர்னொல்ட், அரவிந்த டி சில்வா, மஹேல ஜெயவர்த்தன, ரணதுங்க, சமிந்தவாஸ், முரளிதரன் போன்ற முன்னணி ஜாம்பவான்கள் விளையாடிய அந்தப் போட்டியில் ரங்கன ஹேரத்தும் ஜொலிக்கத் தவறவில்லை.

அந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 296 ஓட்டங்களைச் சேர்க்க, பின்னர் ஆடிய அவுஸ்திரேலிய அணி, 228 ஓட்டங்களுள் சுருண்டது.

அந்த அணியைச் சுருட்டியவர்களுள் முரளிதரனுடன், ஹேரத்தின் பங்கும் பாரியளவிலானதாக அமைந்தது.

முரளிதரன் 38 ஓவர்கள் வீசி, 71 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்த, ஹேரத் 34.3 ஓவர்களில் 97 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளைச் சாய்த்தார். இவர் வீசிய ஓவர்களில், 6 ஓட்டமற்ற ஓவர்களாக வீசப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆட்டத்தின் நான்காவது நாள், மழை காரணமாகக் குழம்ப, இரண்டாவது இன்னிங்ஸை இலங்கை ஆரம்பித்த சிறிது நேரத்தில் ஆட்ட நேரமும் முடிவடைந்தமையால் அந்த ஆட்டம் முடிவுக்கு வந்தது. இதனால், இரண்டாவது இன்னிங்ஸில் பந்துவீசும் வாய்ப்பு ஹேரத்துக்குக் கிடைக்காமல் போய்விட்டது.

பின்னர் ஒருநாள் போட்டிகள், இருபது-20 போட்டிகளிலும் களமிறங்கிய அவர், அந்தப் போட்டிகளிலும் த்டம் பதித்துச் சென்றார். இந்த ஆட்டங்களிலிருந்து ஏற்கனவே, ஓய்வு பெற்றுவிட்ட அவர், டெஸ்ட் போட்டிகளிலிருந்து தற்போது ஓய்வை அறிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் கடந்த 6ஆம் திகதி காலியில் ஆரம்பித்தது. இந்தப் போட்டியுடன் தனது ஆட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளார். இந்த ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் ஒரு விக்கெட்டையும், இரண்டாவது இன்னிங்ஸில் இரண்டு விக்கெட்டுகளையும் வீழ்த்தினார். இந்த ஆட்டத்தில் இலங்கை அணி தோல்விடைந்தது.

தற்போது, 40 வயதான ஹேரத், 93 டெஸ்ட் போட்டிகளில் (170 இன்னிங்ஸ்கள்) 433 விக்கெட்டுகளைச் சாய்த்துள்ளார். ஓர் இன்னிங்ஸில் இவர் 127 ஓட்டங்களைக் கொடுத்து 9 விக்கெட்டுகளையும், ஒரு போட்டியில் 184 ஓட்டங்களைக் கொடுத்து 14 விக்கெட்டுகளைக் கைப்பற்றியமையும் சிறந்த பெறுபேறாக உள்ளது.

உலகளவில் அதிக விக்கெட்டுகளைக் கைப்பற்றிய வீரர்கள் வரிசையில் 8ஆவது இடத்தில் உள்ள இவர் (முதலிடத்தில் முரளி-800), இலங்கை அளவில் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

19 வருடங்களாக கிரிக்கெட்டில் களம் கண்டு, ஒட்டு மொத்த கிரிக்கெட் வடிவங்களுக்கும் விடை கொடுத்துள்ள அவரை நாமும் வாழ்த்தி அனுப்புவோமாக...

● தடகளன்

இப்பத்திரிகை மானிப்பாய் வீதி, உடுவில் என்ற முகவரியிலுள்ள அம்பலம் பதிப்பகத்தால், 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 14.11.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.